REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2021 ஏப்ரல் 7 புதன்கிழமை
வரு. 89 இல. 83 | April 07,Wednesday, 2021 | 24 பக்கங்கள் | 30/-


## பல்கலைக்கழகங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிவு


### பல்கலை மானியங்கள் ஆணைக்குழு

கொரோனா தொற்று காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பல்கலைக்கழக நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு புத்தாண்டு முடிவுற்ற பின்னர் இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 06



அதிபர், ஆசிரியர் கவனயீர்ப்பு போராட்டம் 09


மக்களிடம் கையளிக்கப்பட்ட "கனுகஹவெவ" முன்மாதிரி கிராமம் 11


மூன்று மில்லியனை தாண்டிய கொரோனா உயிரிழப்பு 15

சுப்பர் லீக் போட்டி முகாமையாளராக ரஹ்மி 24



# ஈஸ்டர் தாக்குதலை தடுக்க வாய்ப்பு இருந்தும் அதிகாரிகள் கவனயீனம்

### பரிந்துரை வழங்க அமைத்த ஆணைக்குழு குற்றச்சாட்டு – அமைச்சர் சமல்

ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்க வாய்ப்புகள் பல இருந்த போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய முறையில் செயற்பட்டிருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம் என சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவனெல்லயில் புத்தர் சிலை உடைப்புடன் தொடர்புடைய பலர் ஈஸ்டர் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் என்றும், அந்த நேரத்தில் அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குறித்த பரிந்துரைகளை வழங்க அமைக்கப்பட்ட அமைச்சர்கள் 06






தமிழ், சிங்கள புதுவருட புண்ணிய கால சுபவேளைக்கான சம்பிரதாய ஓலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று கலை கலாசார ராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட பின் கலைஞர்களுடன் ஜனாதிபதி எடுத்துக்கொண்ட படம்.(ஸ)

# தோட்ட தொழிலாளருக்கு ஏப்ரல் முதல் 1000 ரூபா

### சபையில் அமைச்சர் ரமேஷ் அறிவிப்பு



**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டங்களில் ஏப்ரல் மாதத்திலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் நேற்று (06) காலை 10 மணிக்கு கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டங்களில் ஏப்ரல் மாதத்திலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும். ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்காத கம்பனிகளை அரசாங்கத்துக்கு சுவிகரிப்பதற்கான எந்தவிதமான யோசனைகளும் இல்லை. அனைத்து பெருந்தோட்ட நிறுவனங்களும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் 06

### வடக்கு, கிழக்கில் விசேட

## பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்



மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் விசேட பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவை பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் 06

## வெளிநாடுகளிலிருந்து திரும்புவோர் அனுமதி பெறுவது அவசியமில்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோர் வெளிவிவகார அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



கொவிட் நோய்த் தொற்று பரவுகை காரணமாக வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. 06

### அரச நிர்வாக சேவை மூத்த அதிகாரி

## சிவஞானசோதி காலமானார்



அரச நிர்வாக சேவையின் மூத்த தமிழ் அதிகாரியான வேலாயுதன் சிவஞானசோதி நேற்று முன்தினம் தனது 62ஆவது வயதில் காலமானார். அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நிலையில் சுகவீனமுற்று 06

### ஆறு மில்லியன் தடுப்பூசி மருந்துகள்;

## ஸ்புட்னிக் வி டோஸ் வாங்க அமைச்சரவை அனுமதி

கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக மேலதிகமாக 06 மில்லியன் 'ஸ்புட்னிக் v' தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கை குழுவின் பரிந்துரைக்கமைய 06



### 1000 ரூபா சம்பளத்தை வழங்காவிட்டால்

## தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 1000 ரூபா வரை அதிகரிப்பதற்கு எதிராக தோட்ட நிறுவனங்கள் கோரியிருந்த தடை உத்தரவை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துள்ளது. இதற்கமைய கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி 06




## வெள்ளரி பழத்திற்கு கிழக்கில் நல்ல மௌசு

வரட்சியான காலநிலை காரணமாக அம்பாறையில் வெள்ளரிப் பழம் உள்ளிட்ட பழவகைகள் அதிகளவுவிற்பனையாகி 06




## 10 எதிரணியினரின் குடியுரிமையை பறிக்க முயற்சியா?



02



## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுமுறை வழங்க கோரும் பிரேரணை நிராகரிப்பு

சபையில் ஆளும் தரப்பு எதிர்த்தரப்பிடையில் கடுமையான தர்க்கம்; அமளிதுமளி



02


### இறுதி யுத்தத்தில் உயிரிழந்த தமிழ் மக்களுக்காக

## நீதியான விசாரணைக்கு பேராயர் குரல் கொடுக்கவில்லை



**பாராளுமன்றத்தில் ஸ்ரீதரன் MP கடுமையாக சாடல்**

**(ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்)**

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த தமிழ் மக்களுக்காக இதுவரை நீதியான விசாரணை ஒன்றைக் கோராத 06

## இலங்கையில் கொரோனா பாரியளவில் குறைவடைவு

### உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியது




இலங்கையில் கொவிட் 19 வைரஸ் தொற்றின் நோய் பரவல் 17.07 வீதம் குறைவடைந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் 06

### விக்கல் வீராச்சாமி



தலைவர் என்ன கடுப்பாக இருக்கிறார், யாரும் கட்சி மாறி விட்டார்களோ.....

அவர் அதைக்கூட பொறுத்திடுவார், ஆயருக்கு அஞ்சலி செலுத்துகிற படத்த வடிவா எடுக்கலையாம், கொழும்பிலிருந்து போயும் பேஸ்புக்ல போட ஒரு நல்ல படம் இல்லையே எண்டு கடுப்பா இருக்கிறார்.


Dialog HOME BROADBAND

பிற்கொடுப்பனவு Data Add-ons க்கான

டேட்டா டபுள் ஆகிவிட்டது



விரும்பிய வகையில் தெரிவு செய்து கொள்ள தினசரி, வாராந்த, மாதாந்த Data Add-on தெரிவுகள் ரூ.60/- முதல்

செயற்படுத்தல் MyDialog App, hbb.dialog.lk மூலம் அல்லது 678க்கு SMS செய்வதன் மூலம்

அதிதுரித Home Broadband

Dialog எதிர்காலம் இன்றே.

TRC/DBN/PRO/20/06

* வரிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

# பிலவ வருஷம்

## வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 செவ்வாய்க்கிழமை
பின் இரவு (அதிகாலை) 1.39

**விஷு புண்ணிய காலம்:**
13.04.2021 பி. ப. 9.30 முதல் 14.04.2021 காலை 5.39 வரை

**தோஷ நட்சத்திரம்:**
- அஸ்வினி
- பரணி
- கார்த்திகை 1ம் பாதம்
- பூரம்
- உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள்
- அந்தம்
- சித்திரை 1, 2ஆம் பாதம்
- பூராடம்

**கைவிசேடம்:**
- சித்திரை 1- புதன் காலை 9.09 முதல் 9.52 வரை
- சித்திரை 1- புதன் பகல் 2.23 முதல் மாலை 4.11 வரை
- சித்திரை 3-வெள்ளி பின் இரவு (அதிகாலை) 4.16 முதல் 5.07 வரை
- சித்திரை 4- சனி காலை 7.49 முதல் 9.00 வரை
- சித்திரை 4- சனி மாலை 3.04 முதல் 3.59 வரை

**ஆடை நிறம்** : நீலம், சிவப்பு நிற பட்டாடை/ நீலம், சிவப்பு கரை கொண்ட பட்டாடை

**ஆபரணம்** : நீலம், பவளம் இழைத்த ஆபரணங்கள்

# பிலவ வருஷம்

## திருக்கணிதப் பஞ்சாங்கத்தின்படி

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 செவ்வாய்க்கிழமை
பின் இரவு (அதிகாலை) 2.31

**விஷு புண்ணிய காலம்:**
13.04.2021, இரவு 10.33 முதல் 14.04.2021 காலை 5.39 வரை

**தோஷ நட்சத்திரம்:**
- அஸ்வினி
- உத்தரம் 2,3,4 ஆம் பாதம்
- பரணி
- அந்தம்
- கார்த்திகை 1ம் பாதம்
- சித்திரை 1, 2ஆம் பாதம்
- பூரம்
- பூராடம்

**கைவிசேடம்:**
- சித்திரை 1– புதன் காலை 6.15 முதல் 7.00 வரை
- சித்திரை 1– புதன் மாலை 6.15 முதல் மாலை 7.00 வரை
- சித்திரை 3– வெள்ளி பின் இரவு (அதிகாலை) 5.15 முதல் 6.00 வரை
- சித்திரை 4– சனி காலை 10.30 முதல் 11.40 வரை

**ஆடை நிறம்** : செந்நிறப் பட்டாடை, சிவப்பு கரை கொண்ட வெள்ளை ஆடை

**ஆபரணம்** : பவளம் கொண்ட ஆபரணங்கள்



கலாநிதி சிவஸ்ரீ
**இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா**
சர்வதேச இந்து மத பீட செயலாளர்



நுவரெலியா கால்டன் பாலர் பாடசாலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் சிரந்தி ராஜபக்ஷ தலைமையில் தமிழ், சிங்கள புதுவருட நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் அதிதியாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்துகொண்டு சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார்.

# சந்தையிலுள்ள தேங்காயெண்ணெயில் நஞ்சு கலந்துள்ளதாக பொய்ப் பிரசாரம்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கை சந்தைகளில் உள்ள தேங்காய் எண்ணெய்களில் நஞ்சு கலந்திருப்பதாக எந்தவொரு இடத்திலும் நிரூபிக்கப்படவில்லை. பாம் எண்ணெய்க்கான வரியை அதிகரித்து, தேங்காய் எண்ணெய்க்கான வரியை குறைத்ததாலேயே, தேங்காய் எண்ணெயில் நஞ்சு கலந்திருப்பதாக தகவல்கள் பரப்பப்படுவதாக

06

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு

# போசணையுள்ள பிஸ்கட்கள் இன்று முதல் வழங்கப்படும்

**(ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்)**

ஆரம்பப் பிரிவிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் போசணையுள்ள பிஸ்கட்களை இன்று 7 ஆம் திகதிமுதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி மற்றும் ஆரம்ப கல்வி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் நேற்று (06) காலை 10 மணிக்கு கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வழங்கப்படும் திரிபோஷவை அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் மாலை வேளையில் உட்கொள்வதாகவும் திரிபோஷ முறையாக குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் கிடைக்கிறதா என்ற தொடர்பில் ஆராய்வதற்கு விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டுமெனவும் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இராஜாங்க அமைச்சர் மேலும்

06



# 10 எதிரணியினரின் குடியுரிமையை பறிக்க முயற்சியா?

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் தயாராவதாக எதிர்க்கட்சி பிரதமக் கொறடாவும், பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றம் நேற்று காலை 10 மணிக்கு சபாநயாகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. கேள்வி நேரத்தின்பின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான விவாதம் நாளை (08), நாளை மறுதினமும் (09) நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அதனைக் காலந்தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் சதி செய்கிறது. இதற்காகவே அரசியல் பழிவாங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆளுங்கட்சி மீது குற்றம் சுமத்தினார்.

## கொழும்பு புறக்கோட்டை மிதக்கும்

# சந்தைத் தொகுதி இன்று மீள் திறப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எத்தகைய முறையான பராமரிப்பும் இன்றி கைவிடப்பட்ட நிலையில் இருந்த கொழும்பு புறக்கோட்டை மிதக்கும் வர்த்தகச் சந்தை தொகுதி மீண்டும் புனரமைப்பு செய்யப்பட்டு இன்று மீளத்திறக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய மேற்படி மிதக்கும் சந்தை முழுமையாக மறுசீரமைக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு மீளத் திறக்கப்படவுள்ளது.

அதற்கிணங்க மேற்படி மிதக்கும் சந்தைத் தொகுதியும் அதனை அண்டிய பிரதேசங்களும் ஜனாதிபதி கோட்டாபய

06

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு

# விடுமுறை வழங்க கோரும் பிரேரணை நிராகரிப்பு

### சபையில் ஆளும் தரப்பு எதிர்த்தரப்பிடையில் கடுமையான தர்க்கம்; அமளிதுமளி

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுமுறை வழங்கக்கோரி எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட விடுமுறை பிரேரணை சபாநாயகரினால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து, சபையில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் காலை 10 மணிக்கு கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற பிரதான நடவடிக்கைகளை தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து, சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரவை

06

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகளாக நௌபர் மௌலவி

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர;

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகளாக நௌபர் மௌலவி மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகிய நபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க முக்கிய சூத்திரதாரியான நௌபர் மௌலவி என்பவர் தற்போது விளக்கமறியலில் தண்டனை அனுபவித்து வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், 2014 ஆம் ஆண்டு அந்த நபர் மூலம் ஐ.எஸ். அடிப்படைவாதம் நாட்டுக்குள் வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்;

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தற்கொலைதாரியான சஹ்ரான் ஹாசீம் அடிப்படைவாத செயற்பாடுகளில் 2016ஆம் ஆண்டிலிருந்தே ஈடுபட்டுள்ளதுடன் அவருக்கு நவ்பர் மௌலவி என்பவரே அனுசரணை வழங்கியுள்ளார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எதனையும் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. மேற்படி

06

# சஜித்தின் நடவடிக்கையால் உறுப்பினர்கள் அதிருப்தி

### கூட்டங்களுக்கு தாமதமாக வருவதால் இந்நிலையாம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, கட்சியின் குழுக் கூட்டங்களுக்கு தாமதமாக வருவதாகவும், இதனால் கட்சியின் பல உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்றைய தினம் 3 மணிக்கு இடம்பெறவிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு கூட்டத்திற்கு ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக தாமதமாகியே சஜித் பிரேமதாச வருகைத்தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவின் வழக்கமான தாமதத்தில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையானவர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும், எனினும் அதனை யாரும் சஜித்திடம் நேரடியாக வெளிப்படுத்தவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

சஜித் பிரேமதாசவின் தாமதத்தால் ஏமாற்றமடைந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உற்சாகமின்றி கலந்துகொள்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மறைந்த ஜனாதிபதியான ரனசிங்க பிரேமதாச சரியான

06

# பண்டிகை காலத்தில் பயண கட்டுப்பாடுகள் கிடையாது

### மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவோருக்கு PCR



பண்டிகை காலப்பகுதியில் பயணக்கட்டுப்பாடு அமுலாகுமா என்பது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, அவ்வாறான பயணத்தடை விதிக்கப்படாது என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எதிர்வரும் பண்டிகை காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் நபர்களுக்கு PCR பரிசோதனை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை 200 இற்கும் குறைவாகவே உள்ளது. தமிழ், சிங்கள புத்தாண்டிற்கு இன்னும் ஒரு வாரம் மாத்திரமே உள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் இருந்து வெளியேறுபவர்களுக்கு பயண கட்டுப்பாடு விதிப்பதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. எனினும் PCR அல்லது அன்டிஜன் பரிசோதனை செய்ய வாய்ப்பு உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# புது வருடத்தையொட்டி விசேட ரயில், பஸ் சேவைகள் நடைமுறை

### இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் சிங்கள புது வருடத்தையொட்டி விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

புதுவருட காலங்களில் தமது சொந்த ஊர்களுக்கு பயணிப்பவர்களின் வசதி கருதியே மேற்படி பஸ், ரயில் சேவைகள் அதிகரிக்கப்படுவதாக தெரிவித்துள்ள அவர் அதற்கிணங்கபயணிகள் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ரயில்வே ஊழியர்களின் அனைத்து விடுமுறைகளும் இரத்துச் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலங்களில் போதிய பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து சேவைகளை மேற்கொள்வது தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் நேற்றைய தினம் ரயில்வே திணைக்களம் தெரிவிக்கையில் புதுவருடத்தை ஒட்டி மேலதிகமாக பல ரயில் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அதற்கிணங்க கடல் வழி ரயில் பாதை உட்பட பிரதான ரயில் மார்க்கங்களில் ரயில் சேவைகள் அதிகரிக்கப்படும் என்றும் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இந்த விசேட ரயில் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ரயில்வே திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

# வெளிநாட்டு கணக்குகளை ஆரம்பிப்பதற்கான கால எல்லை நீடிப்பு

அந்நிய செலாவணி சட்டத்தின் கீழ் வெளிநாட்டு கணக்கை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லையை நீடிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையில் இதுதொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021 மார்ச் மாதம் அளவில் இந்த வைப்பீட்டு கணக்கில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது உள்ள வைப்பீட்டு பணத்தை தக்கவைக்கும் நோக்கத்துடன் மேலதிக வட்டியை செலுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வருமாறு:

அந்நிய செலாவணியை எமது நாட்டுக்கு அனுப்புவதை ஊக்குவிப்பதற்காக 2020 ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறையிலுள்ள விசேட வைப்புக் கணக்குக்கான ஏற்பாடுகள் 2017 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க அந்நிய செலாவணி சட்டத்தின் கீழ் குறித்த கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாறே குறித்த கணக்குகளில் காணப்படும் வைப்புக்களை தொடர்ந்து பேணும் நோக்கில் மேலதிக வட்டியை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2021 மார்ச் மாதம் வரையில் குறித்த வைப்புக் கணக்குகளில் 360.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வைப்பிலிடப்பட்டுள்ளது. குறித்த விசேட வைப்புக் கணக்குகளை திறப்பதற்கான கால எல்லை 2021 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் தொடர்ந்து பணத்தை வைப்பிலிடுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் தரப்பினர்களை ஊக்குவிக்கும் வகையில் குறித்த காலவரையறையை தொடர்ந்து நீடிப்பதற்காகவும், அதற்காக அந்நிய செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கட்டளைகளை பிறப்பிப்பதற்கும் நிதி அமைச்சராக பிரதமர் அவர்கள் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை தொடர்பான

## அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து, அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிடம் கையளிக்கப்பட்டது.

குழுவின் தலைவர் அமைச்சர் சமல் ராஜபக்ஸ , நேற்று முன்தினம் (05) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அறிக்கையை கையளித்தார்.

2021 பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதியினால் இக்குழு நியமிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படவிருந்தபோதிலும் மேலதிக ஆய்வுகளுக்காக குழு மேலும் இரண்டு வாரகாலம் அவகாசம் பெற்றுக்கொண்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையை விரிவாக ஆராய்ந்த குழு, 78 பரிந்துரைகளை கண்டறிந்துள்ளது.

அப்பரிந்துரைகளை எந்த நிறுவனத்தினால் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியான பரிந்துரைகள் ஜனாதிபதியினால் இதற்கு முன்னர் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குழுவின் ஏனைய உறுப்பினர்களான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் குழுவின் செயலாளர் ஜனாதிபதி அலுவலக பணிப்பாளர் நாயகம் (சட்டம்) ஹரிகுப்த ரோஹனதீர ஆகியோரும் அறிக்கையை சமர்ப்பிக்கும் இவ்வேளையில் பிரசன்னமாகியிருந்தனர்.

## யாழ் – சென்னை விமான சேவை விரைவில் ஆரம்பம்

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் சென்னை விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைகளை இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். மாலைதீவை இணைத்து தென்னிந்தியாவுக்கான விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கு பல விமான நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கையுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறினார். சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படும் என குறிப்பிட்ட அமைச்சர் ,

விமான நிலையத்தில் உள்ள குறைபாடுகள் தற்போது அடையாளம் காணப்பட்டு வருகின்றன. அவை மூன்று கட்டங்களாக நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

### அமைச்சரவை முடிவுகள்

## தேசிய சுவடிகள் கூடத்தில் டிஜிட்டல் காப்பகத்தை உருவாக்கல்

1640 தொடக்கம் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மற்றும் சுதந்திரத்தின் பின்னர் மிகவும் பெறுமதியான ஆவணங்கள் மற்றும் 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இலங்கையில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் உள்ளிட்ட அனைத்து வெளியீடுகளதும் சட்ட ரீதியான காப்புக்கள் தேசிய சுவடிகள் கூடத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

இங்கு நாளாந்தம் அதிகளவான ஆவணங்கள் சேர்ந்த வண்ணம் இருப்பதுடன், அதற்காக டிஜிட்டல் வெளியீடுகள் மற்றும் ஆவணங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்புக்கள், இணையத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல் போன்றன உள்ளடங்கும். அதற்கமைய குறித்த டிஜிட்டல் ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் போலியற்றத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் டிஜிட்டல் காப்பு தொடர்பான சர்வதேச தரநியமங்களை பின்பற்றி டிஜிட்டல் காப்பகத்தை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தேயிலை செய்கையை ஊக்குவிக்க மானியத் தொகை

2019 ஆம் ஆண்டில் மொத்த தேயிலை உற்பத்தி 300 மில்லியன் கிலோகிராம்கள் ஆவதுடன், அவற்றில் 75% வீதமான 225 மில்லியன் கிலோகிராம்கள் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேயிலை உற்பத்தியை உயர் மட்டத்தில் பேணுவதற்காக சிறிய தேயிலை தோட்டக்காணிகளில் உற்பத்திப்பெருக்கை அதிகரிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

தேயிலையை மீள் பயிரிடல் மூலம் வருமானம் ஈட்டுவதற்காக 04 வருடங்கள் எடுப்பதாலும், அதற்கான செலவு அதிகமானதாலும் மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் போன்றவற்றுக்கு போதுமானளவு ஆர்வம் காட்டாமையால் 2025 ஆம் ஆண்டளவில் 360 மில்லியன் கிலோகிராம்கள் உற்பத்தி இலக்கை அடைவதற்காக போதுமானளவு ஊக்குவிப்புக்கள் வழங்கவேண்டியுள்ளது. அதற்கமைய தேயிலை மீள்பயிரிடல் மானியத் தொகையாக ஹெக்ரயர் ஒன்றுக்கு 400,000 ரூபாய்களில் இருந்து 500,000 ரூபாய் வரைக்கும் அதிகரிப்பதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நீர்வழங்கல் ஒருங்கிணைந்த திட்டம்

2021–2025 ஒருங்கிணைந்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 2025 இல் நாடளாவிய ரீதியில் 78.8% வீதமான வீட்டு அலகுகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த இலக்கை அடைவதற்காக நீர் விநியோகக் குழாய்கள் 40000 கிலோமீற்றர்கள் வரை இடுவதற்கும் சமகால உற்பத்தி இயலளவு நாளொன்றுக்கு 2.35 மில்லியன் கனமீற்றர்களாக அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நீர் விநியோகத் திட்டங்களில் காணப்படும் சிக்கலான தன்மையால் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பெறுகைச் செயன்முறை ஏனைய நிறுவனங்களை விட அதிக காலம் எடுப்பதாக தெரியவந்துள்ளது.

அதனால் நீர்க்குழாய்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகைச் செயன்முறையை ஒருங்கிணைந்த பொறிமுறையின் கீழ் வழங்குவதற்கும் மற்றும் அதற்கான அலகுக் கட்டண முறையை அறிமுகப்படுத்துவதற்கும் நீர் குழாய்கள் இடப்படும் ஒப்பந்தத்தை வழங்கும் போது அலகுக்கட்டண முறையை அறிமுகப்படுத்துவதற்கும் நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 24

### குறள் தரும் சிந்தனை



ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

ஏழைகளுக்குக் கொடுப்பது; அதனால் புகழ் பெருக வாழ்வது; இப்புகழ் அன்றி மனிதர்க்குப் பயன் வேறு ஒன்றும் இல்லை.

## கொவிட்19 தடுப்பூசியேற்றுவதில் குழப்பங்களுக்கு அவசியமில்லை

இலங்கையில் கொவிட்19 தடுப்பு மருந்தின் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளவர்களுக்கு இரண்டாவது கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது. அது எதிர்வரும் ஜுலை மாதம் 30 ஆம் திகதி வரை நாடெங்கிலும் முன்னெடுக்கப்பட உள்ளது. இதனை ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் கொவிட்19 கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்ஷணி பெர்னாண்டோ புள்ளே நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். இந்நாட்டில் கொவிட்19 தடுப்பூசி வழங்கும் திட்டம் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. ஒக்போர்ட் பல்கலைக்கழகம் அஸ்ட்ரா செனகா நிறுவனத்துடன் இணைந்து கண்டுபிடித்து தயாரித்துள்ள கொவிட்19 தடுப்பு மருந்து 'கொவிஷீல்ட்' என்ற பெயரில் இந்தியாவின் சீரம் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுவதோடு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

அந்த வகையில் இந்தியா இத்தடுப்பு மருந்தில் ஐந்து இலட்சம் தடுப்பு மருந்துத் தொகுதியை முதல் கட்டமாக இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியது. அதனை அடிப்படையாகக் கொண்டு இந்நாட்டில் இத்தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கை ஆரம்பமானது.

அந்த அடிப்படையில் இற்றை வரையும் 9 இலட்சத்து 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. இந்தியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கிய 05 இலட்சம் தடுப்பு மருந்தை அடிப்படையாக வைத்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை கோரியுள்ள இத்தடுப்பு மருந்து தொகுதியில் ஐந்து இலட்சமும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ள சனத்தொகையில் 20 வீதத்தினருக்கு இத்தடுப்பு மருந்தை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் முதல் தொகுதியாக 2 இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பு மருந்துகளுமாக இற்றைவரையும் இலங்கைக்கு 12 இலட்சத்து 64 ஆயிரம் கொவிஷீல்ட் தடுப்பு மருந்துகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 9 இலட்சத்து 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இத்தடுப்பு மருந்து இற்றை வரையும் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் கொவிட் 19 தவிர்ப்புக்காக வழங்கப்படும் தடுப்பு மருந்து ஒவ்வொருவருக்கும் இரண்டு தடவை வீதம் வழங்கப்பட வேண்டும். அதுவும் முதல் தடவை தடுப்பூசி வழங்கி குறிக்கப்பட்ட காலத்திற்குள் இரண்டாம் தடுப்பூசி வழங்கப்படுவது அவசியம்.

அதற்கேற்ப முதல் தடுப்பூசி வழங்கி ஒரு மாத கால முடிவோடு இரண்டாவது தடவை வழங்க இலங்கை முதலில் தீர்மானித்தது. ஆனாலும் இக்காலப் பகுதியில் இத்தடுப்பு மருந்து தொடர்பில் வெளியான ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் 10 - 12 வாரங்களுக்குள் இரண்டாவது தடவை வழங்க இலங்கை முடிவு செய்துள்ளது.

கடந்த மார்ச் மாத நடுப் பகுதி முதல் இத்தொற்றுக்கு இந்தியாவில் உள்ளாவோரின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் உள்நாட்டு தேவையைக் கருத்தில் கொண்டு இத்தடுப்பு மருந்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியது. ஆனாலும் தடுப்பு மருந்து ஏற்றுமதியைத் தடை செய்யவில்லை. இவ்வாறான நிலையில்தான் தற்போதும் இத்தடுப்பு மருந்து ஏற்றுமதி இடம்பெறுகின்றது.

இந்நிலையில், இலங்கையில் கடந்த ஜனவரி 29 முதல் இத்தடுப்பு மருந்தைப் பெற்றவர்களுக்கு இரண்டாவது தடவை தடுப்பு மருந்தை வழங்கும் நடவடிக்கையை எதிர்வரும் 19 முதல் ஆரம்பிக்க சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் தற்போது சுமார் 3 இலட்சம் கொவிஷீல்ட் தடுப்பு மருந்து கையிருப்பில் உள்ளது. அத்தோடு இலங்கை கோரியுள்ள கொவிஷீல்ட்டின் அடுத்த தொகுதி தடுப்பு மருந்து அடுத்து வரும் சில நாட்களில் நாட்டுக்குள் வந்து சேரவுள்ளது. அத்தோடு உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ள தடுப்பு மருந்தின் இரண்டாவது தொகுதியும் விரைவில் கிடைக்கப் பெறவிருக்கின்றது என்பதையும் இராஜாங்க அமைச்சர் உறுதிபடக் கூறியுள்ளார்.

ஆகவே இத்தடுப்பு மருந்தின் முதலாம் தடுப்பூசியைப் பெற்றுள்ளவர்கள் இரண்டாவது தடவை தடுப்பு மருந்தை எவ்வித பிரச்சினைகளுமின்றி பெற்றுக் கொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது. கொவிட் 19 அச்சுறுத்தலில் இருந்து மக்களை விடுவிப்பதே இம்மருந்தேற்றலின் எதிர்பார்ப்பாகும். ஆனாலும் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதிலும் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்து அறநெறி கல்வியை மேம்படுத்த நடவடிக்கை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாட்டில் இந்து சமய அறநெறிக் கல்வியில் 46 நூல்களை வெளியிட்டு பாரிய தொரு புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. கடந்த காலங்களில் சோபையிழந்திருந்த அறநெறிக் கல்வி அண்மைக் காலமாக முன்னேறி வருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

இந்திய கலைஞர் பத்மவாசனின் அழகான ஓவியங்களுடன் வெளியான இப்பாடநூல்கள் பார்ப்பதற்கும் வாசிப்பதற்கும் உகந்ததாக, இலகுவானதாக இருப்பதால் மாணவர்கள் இலகுவாக உள்வாங்கப்படுவார்கள். இதற்கு திணைக்களத்தின் பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரன் மூலவிசையாக இருந்து செயற்பட்டு வருகிறார். அதற்கு




ஏனையஉதவிப்பணிப்பாளர்கள் கலாசார உத்தியோகத்தர்கள் பக்கத்துணை புரிந்து வருகின்றனர்.

அறநெறிப் பாடசாலையை மேம்படுத்துவதற்கு இந்து சமய அறநெறிக் கல்வியின் புதிய பாடத் ட்டத்திற்கு அமைவாக ஒழுக்கவிழுமியங்களை மாணவர்கள் மகிழ்வோடு கற்கும் வகையில் உருவாக்கப்பட்ட அறநெறிச் சுடர் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வியின் புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாக சைவ சமய ஆன்மிகப் பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களை மாணவர்கள் மகிழ்வோடு கற்கும் வகையில் உருவாக்கப்பட்ட 27 பாடத் துணை நூல்கள் உள்ளிட்ட 46 வகையான பாடநூல்கள் அழகாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

முதல் நீதிநூல் தொகுதி பிரதமரும் சமய விவகாரஅமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டது. இரண்டாவது விநியோகம் காரைதீவு விபுலாநந்த மணி மணிடபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

3 வயது தொடக்கம் அறநெறி வகுப்புகளில் சேரும் இந்து மாணவர்கள் வாழ்க்கைக்கு அவசியம் தேவைப்படும் ஒழுக்கக் கல்வியை பெறுகின்றார்கள்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 97 அறநெறிப் பாடசாலைகளில் 10 ஆயிரம் அறநெறி மாணவர்களுள் 9993 பேருக்கு இந்த நூல் தொகுதி வழங்கப்பட்டிருக்கிறது. அறநெறி வகுப்புகளில் 583 ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள் என மாவட்ட இந்து கலாசாரஅலுவலர் கு.ஜெயராஜி தெரிவிக்கிறார்.

கள் அடங்கிய விடயங்களை உள்ளடக்கியதாகப் பாலர் பிரிவிற்குரிய அறநெறிச் சுடர் என்னும் இந்நூல் வெளிவருகிறது.

இந்து சமய அறநெறிக் கல்வியின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக சைவ சமய ஆன்மிகப் பண்பாட்டு

## 46 நூல்களை வெளியிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறி புரட்சி

நூல்களுடன் நாயன்மார்களின் புகைப் படங்கள், குருபூஜை, அற புறச்சந்தான குரவர்கள், யோகசுவாமி, ஆறுமுகநாவலர் புகைப்படங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வரலாற்றில் முதல் தடவையாக 46 கையான இந்து நூல்கள் புதிய பாடத் திட்டத்திற்கேற்ப அச்சடிக்கப்பட்டு அறநெறி வகுப்புகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மனிதனுடைய வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் மனித விழுமியப் பண்புகள் தேவை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயர்வான மனிதப் பண்புகள் பலவுள்ளன. அவை யாவும் மனிதனை மனிதனாக வாழ வைப்பன. மனிதனின் ஒழுக்கம் என்பது மனித விழுமியங்களினாலேயே ஆளப்படுகின்றது. எனவே ஒழுக்கத்தை ஒருவன் தனது உயிரினும் மேலாக ஓம்பிப் பேணி வர வேண்டும். அதனால்தான் வள்ளுவப் பெருந்தகை 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார்.

விழுமியப் பண்புகளில் முதன்மையானதாகவும் அனைத்திற்கும் அடிப்படையானதாகவும் விளங்குவது அன்பென்னும் ஆணிவேர்தான். அன்புதான் இந்த உலகின் மகாசக்தி. அந்த சக்தியினை அடிநாதமாகக் கொண்டு மாணவர்களிற்கு சிறுவயது முதலே அவர்களது நடத்தை தொடர்பில் சரியானவை எவை? பிழையானவை எவை? என்பதை முறைப்படுத்திக் கூறி அவற்றைக் கைக்கொள்ளும்படி பரிந்துரை செய்யும் நோக்கில் நன்னெறிக் கருத்துக்

ஒழுக்க விழுமியங்களை மாணவர்கள் மகிழ்வோடு கற்கும் வகையில் உருவாக்கப்பட்ட 27 பாடத் துணை நூல்கள் விநியோகிக்கப்பட்டன.

பார்க்கலாம், இரசிக்கலாம்,படம் பார்த்துக் கதை சொல்லலாம், வரைந்து பழகலாம், சமயம் சார்ந்த அடிப்படை அறிவினை ஓவியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என பலதரப்பட்ட அம்சங்களைத் தன்னகத்தே கொண்டதாக இப்பாடத்துணை நூற் தொகுதி அமைந்துள்ளது.

'ஓவியங்களுக்கு ஊடாக இளம் இந்துச் சிறார்களின் சமய அறிவினையும் அவர்களின் ஆக்கத் திறனையும் வளர்த்துக் கொள்ளுதல்' எனும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இப்பாடத் துணை நூல் இறைவனுடைய அருட்கடாட்சம் எம் சிறார்களுக்கு உண்டு என்பதை மெய்ப்பிக்கும் வகையில் உலகப் புகழ் பெற்ற ஓவியர் பத்மவாசன் அவர்களின் உயிரோட்டமான ஓவியங்களாற் படைக்கப்பட்டுள்ளன.

இப்பாடத் துணை நூல்கள் அவருடைய அர்ப்பணிப்பு மிகுந்த செயற்பாடு என்பதைச் சொல்லாமற் சொல்கிறது. உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 129வது ஜனன தினம் கடந்த மாதம்(27) சனிக்கிழமையாகும்.

அன்றையதினம் அவர் பிறந்த காரைதீவு மண்ணில் இருவேறு பெரு விழாக்கள் நடைபெற்றன. பிரதான விழா காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஏற்பாட்டில் மூன்று கட்டங்களாக சுவாமிகள் பிறந்த மனை வளாகத்தில் தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்றது.

முதல் கட்டமாக விபுலாநந்த துக்கத்திலுள்ள சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தல், இரண்டாம் கட்டமாக சுவாமிகள் பிறந்த வீட்டிலுள்ள திருவுருச்சிலைக்கு மலர்மாலை புஷ்பாஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து காரைதீவுமண் இ.கி.மிசனுக்கு அளித்த இருபெரும் துறவிகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

மூன்றாம்கட்டமாக பிற்பகலில் மணிமண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்துகலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் தலைமை தாங்க பிரதமஅதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கலந்து கொண்டார்.

அங்கு அவர் உரையாற்றிய போது "அறநெறி ஒழுக்கப் பண்புகளை வளர்க்கும் இந்த நீதிநூல்கள் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் இப்பதவியை பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற மாபெரும் மாற்றமாகும்.கொரோனா காலகட்டத்தில் மகாமிருத்ஞ்ய மகா யாகத்தை அம்பாறை மாவட்டத்தில் தங்குதடையின்றி ஆகக் கூடிய 37 ஆலயங்களில் அதிகாலைவேளையில் நடாத்தினோம்.

ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் பிரத்தியேக வகுப்புகளை முற்றாக தடை செய்ய வேண்டும். உள்ளூராட்சி சபைகள் இதனை உறுதி செய்ய வேண்டும். பாடசாலைக் கல்வி அவசியம். அதேவேளை அதற்குச் சமாந்தரமாக சமய அறநெறி விழுமியக் கல்வி மிகமிக அவசியம். ஒழுக்கத்திற்கான கல்வியே இது. சுவாமி விபுலாநந்தரே தமது தாய்மொழியில்தான் கல்வியைத் தொடர வேண்டும் என்று கூறியுள்ளார். அறநெறி ஆசிரியர்க்கு கௌரவம் அளிக்கப்பட்டிருக்கிறது. 3 சோடி சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் தற்போது பெருமையடையக் கூடிய வகையில் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

துணைப்பாடநூல்கள் பொதுநூல்கள் விநியோகிக்கப்படுவது மற்றுமொரு முக்கிய மைல்கல் எனலாம்" என்று புகழாரம் சூட்டினார்.

வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு குறூப் நிருபர்

இலங்கையின் மூத்த தமிழ் அதிகாரியான வேலாயுதன் சிவஞானசோதி காலமானதையடுத்து பிரசுரிக்கப்படும் கட்டுரை

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு கைகொடுத்த மூத்த தமிழ் அதிகாரி

வடக்கு, கிழக்கு மக்களின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னின்று செயற்படுத்திய இலங்கையின் மூத்த தமிழ் அதிகாரியான வேலாயுதன் சிவஞானசோதி காலமானார். சிறந்த கல்விமானும் திறமையான நிர்வாக அதிகாரியுமான இவர், இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளில் பல்வேறு அமைச்சுக்களின் செயலாளராக பதவி வகித்தார்.

வெறுமனே பெயருக்கு அதிகாரியாக இல்லாமல் தனக்கிருக்கும் அதிகாரத்தின் மூலம் மக்களுக்கு எவற்றையெல்லாம் செய்யலாம் என்பதை அறிந்து முடிந்த அனைத்தையும் செய்து கொடுத்த திறமையான அதிகாரியாக இருந்தார்.

யாழ்ப்பாணம் சித்தங்கேணியை பூர்வீகமாகக் கொண்ட இவர் வேலாயுதன் - பொன்னம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வனாக 1959ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி கொழும்பில் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியில் 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் கற்ற இவர், அதனைத் தொடர்ந்து யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார்.

தொடர்ந்து க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தை கொழும்பு றோயல் கல்லூரியில் கற்ற இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் BA Economics பட்டதாரியாவார். அது தவிர CIMA Chartered, MA, FCA, FCMA போன்ற பட்டப்படிப்புக்களையும் கற்றார். அத்துடன் லண்டன் Bradford பல்கலைக்கழகத்திலும் அமெரிக்காவின் Harward பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார். இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக 1992ஆம் ஆண்டில் இணைந்த இவர் பல்வேறு அரச உயர் பதவிகளில் பதவி வகித்ததுடன் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் பதவி வகித்தார். அதனைத் தொடர்ந்து 2010ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் இவரை அமைச்சுக்களின் செயலாளராக நியமித்தது.



அன்று முதல் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இவர் ஓய்வுபெறும் வரை பல அமைச்சுக்களின் செயலாளராக பதவி வகித்து அவ் அமைச்சுக்களின் அமைச்சர்கள் மூலம் மக்களுக்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தார்.

குறிப்பாக இவர் கடந்த மைத்திரி, ரணில் கூட்டு அரசாங்கத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளராக பதவி வகித்து வடக்கில் மக்களின் மீள்குடியேற்றத்தில் பல்வேறு முக்கிய வேலைத்திட்டங்களை மேற்கொண்டார்.

இது தவிர இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, நல்லிணக்க அமைச்சு போன்றவற்றின் செயலாளராகவும் பதவிவகித்தார். தமக்கு கிடைத்த இப் பதவிகளைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசத்திற்கு தேவையான அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிந்து நேரடியாகத் தானே சென்று பல திட்டங்களை மேற்பார்வை செய்து திறமையாக செய்து முடித்தார்.

வடக்கு மாகாணத்தில் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுத்தபோது, அது வடக்கு மக்களுக்கு சரியானதாக அமையாது எனக் கூறி எதிர்த்தார். அத்தோடு நின்றுவிடாமல் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும் முக்கிய பங்காற்றியிருந்தார். இதன்படி வடக்கு – கிழக்கில் பல பாடசாலைகளுக்கு கட்டடங்களை அமைப்பதற்கு முன்னின்று நிதிகளைப் பெற்றுக் கொடுத்தார். யாழ்.வலிகாமம் மேற்கில், வட்டு.இந்துக் கல்லூரி, சித்தங்கேணி ஸ்ரீ.கணேசா வித்தியாசாலை, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் உள்ளிட்ட பல பாடசாலைகளுக்கு கட்டட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை உட்பட பல பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறை மற்றும் கணனி ஆய்வு கூடங்களை அமைத்துக் கொடுத்தமை இவர் மாணவர்களுக்கு ஆற்றிய முக்கிய பணிகளில் சிலவாகும். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அரச சேவையிலிருந்து இவர் ஓய்வுபெற்ற போதும் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு இவர் ஒருபோதும் பின்நிற்கவில்லை. இவரது சேவையை பாராட்டி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசு மற்றும் பொது அமைப்புக்கள் விருது வழங்கி கௌரவித்துள்ளன. குறிப்பாக 2020ஆம் ஆண்டு கொழும்பு கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவில் சுயநலமற்ற சேவைகளால் மக்களுக்கு பெருமை சேர்த்தவர் என்ற அடிப்படையில் இவர் கௌரவிக்கப்பட்டார்.





இவ்வாறு திறமையாக, மக்களுக்காக செயற்பட்ட இவர் ஓய்வுபெற்ற பின்னரும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமையாற்றினார். சுகவீனம் காரணமாக கொழும்பு லங்கா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சற்று குணமடைந்து வீட்டில் ஓய்வெடுத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் 05.04.2021 அன்று இரவு மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அன்று இரவு 10 மணியளவில் உயிரிழந்தார்.

தமிழர் தேசத்திற்கு மேலும் பல சேவைகள் ஆற்றவேண்டிய தருணத்தில் இவரது இழப்பு பேரிழப்பாக அமைந்து விட்டது.

ரி.விரூஷன்

# பல்லின சமூகம் வாழும் நாட்டில் முரண்பாடான அறிக்கையிடல்கள் ஆரோக்கியமானவையல்ல!

## அரசியல், ஊடகத்துறை ஆய்வாளர்கள் கூறும் வெளிப்படையான கருத்துகள்

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்ற மகுடத்தை சூடியுள்ள ஊடகவியலாளர்கள் வழங்கும் செய்திகள் எவ்வாறு அமைய வேண்டும்? இலங்கை போன்ற ஒரு நாட்டில் பல்லின, பல்கலாசார, பல மதங்களை பின்பற்றும் நிலையில், முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை முன்வைக்கலாமா?

ஒவ்வொரு ஊடகவியலாளரும் ஊடக நிறுவனங்களும் சிந்திக்க வேண்டிய விடயங்கள் இவையாகும்.

ஒரே செய்தி இரு மொழிகளில், இரு வேறு விதமாக வெளியாகும் போது இருவேறுபட்ட மொழி பேசும் மக்களின் மனோநிலையில் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மனித உரிமை பேரவை மற்றும் முஸ்லிம் மக்களின் ஜனாசா எரிப்பு தொடர்பான செய்திகள் இவ்வாறு தான் வேறுபட்டவாறு பிரசுரிக்கப்பட்டன.

தமிழ் செய்தி ஊடக அறிக்கையில் 'கடும்போக்கு சிங்களவரை திருப்திப்படுத்தவே ஜனாசா விவகாரம்' என தலைப்பிடப்பட்டிருந்தது.

சிங்கள ஊடகமொன்றில் 'சடலங்களை வைத்து தீவிரவாதத்தை தூண்டும் அனைவருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்துங்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு செய்திகளுமே மக்கள் மத்தியில் சீற்றத்தையும் வெறுப்புணர்வையும் தோற்றுவிக்கும் வகையில் வடிபமைக்கப்பட்டுள்ளதை காணலாம்.

இதேபோன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் தமிழர் எழுச்சி பேரணியாக பொதுவாக அனைத்து தமிழ் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், சிங்கள பத்திரிகைகளில், அந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்களை கைதுசெய்யக் கோரி வவுனியாவில் நடத்தப்பட்ட மற்றுமொரு பேரணிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

அத்தோடு, 'வடக்கில் குழப்பத்தை ஏற்படுத்தும் குழுவினர் தொடர்பாக உளவுத்துறை விழிப்புடன் உள்ளது', 'நீதிமன்ற அறிவிப்பை மதிக்காத இனவாத பேரணி' என்ற தலைப்புகளில் செய்திகள் வெளிவந்தன.

இதில் இனவாத பேரணி போன்ற சொற்கள் இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் செயற்பாடு என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அடுத்ததாக குருந்துமலை விவகாரத்தை நோக்கினால் அங்கு சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு தமிழ்ப் பத்திரிகைகள் அதற்கு



முன்னுரிமை வழங்கின. சிங்களப் பத்திரிகைகளோ வடக்கில் சிங்களவர் வாழ்ந்தமைக்கான சாட்சியாக கல்வெட்டு கிடைக்கப் பெற்றதாக செய்தி வெளியிட்டன. இச்சந்தர்ப்பத்தில் தமிழ் சிங்கள செய்தி அறிக்கையிடல்கள் யார் உண்மை என போட்டிப்போட்டுக் கொண்டு ஓடிய நிலையில் காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான வேறுபட்ட தலைப்பிடல்கள் தொடர்பாக தேசிய சமாதான பேரவையின் தலைவரும் பிரபல அரசியல் ஆய்வாளருமான மூன்று காரணங்களை குறிப்பிட்டார்.

"சில ஊடகங்கள் அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படுகின்றன. அதனால், அரசாங்கம் செய்யும் சகல விடயங்களையும் நியாயப்படுத்த முனைகின்றன. மறுபக்கத்தில் பார்த்தால், எதிர்க்கட்சிக்கு சார்பாக சிலர் செயற்படுகின்றனர். அரசியல் கட்டமைப்பிலிருந்து பார்ப்பதால், அவர்கள் எந்த நேரமும் அரசாங்கத்தின் பிழைகளை மாத்திரம் தேடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு இடத்திலிருந்து கிடைக்கும் செய்திகளை ஏனைய மூலங்களோடு ஒப்பிட்டு அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த சரிபார்க்க வேண்டும். அந்த செய்திக்கு மறுபுறம் உள்ளதா என்பதையும் ஆராய வேண்டும். ஊடகவிலாளர்களுக்கு காணப்படும் துறைசார் அறிவு, தொழில்வாண்மை, தொழிநுட்ப அறிவு மற்றும் பயிற்சிகளில் இது தங்கியுள்ளது.



பாரியளவான மாற்றமொன்றை ஏற்படுத்தும் அரசியல் அதிகாரம் தமக்கும் உள்ளதென ஊடகவியலாளர்கள் நினைக்கின்றனர். அவர்கள் நல்லதென நினைக்கும் திசைக்கு நாட்டை வழிநடத்த நினைக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒருபுறத்தின் கருத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மறுபுறம் மூடி மறைக்கப்படுகின்றது. இந்த மூன்று விடயங்களுமே இவ்வாறான போக்கிற்கு காரணம்" என அவர் குறிப்பிட்டார்.

"ஊடகவியலாளர்களுக்கு தொழில் முறை பயிற்சியளிப்பது முக்கியம். தொழிநுட்ப அறிவை விருத்தி செய்ய வேண்டும். ஒருசெய்தியை எடுத்தால் அதன் சகல பக்கங்களையும் ஆராய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து ஏனைய பக்கங்களை ஊடகவியலாளர்கள் அறிந்து கொண்டாலும்கூட அதை வெளியிடுவதில் ஒரு சிக்கல் உள்ளது. அவர்கள் பணிபுரியும் ஊடக நிறுவனத்திற்கு ஒரு அரசியல் கருத்தியல் உண்டு. அது அரசாங்கம் சார்பாகவோ எதிர்க்கட்சி சார்பாகவோ அல்லது வேறு தரப்பிற்கு சார்பாகவோ இருக்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்களுக்கும் தாம் நினைக்கும் செய்தியை வெளியிட முடியாது" என்கிறார் கலாநிதி ஜெஹான் பெரேரா .

"ஊடக நிறுவனங்களின் அரசியல் நோக்கு வெவ்வேறானவை. அந்த அரசியல் ரீதியான பார்வை ஊடாகத்தான் பல செய்திகள் அறிக்கையிடப்படுகின்றன' என்று அரசாங்க தகவல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும் சர்வதேச ஊடக ஒத்துழைப்பு மையத்தின் ஆசிய பிராந்திய ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ரங்க கலன்சூரிய குறிப்பிட்டார்.

அடுத்ததாக சந்தை நோக்குநிலை இதில் தாக்கம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். அதாவது தமது பத்திரிகையை யார் வாங்குகின்றனர் என்பதை இலக்கு வைத்தும் இவ்வாறு எழுதப்படுவதாக குறிப்பிட்ட ரங்க கலன்சூரிய, இப்படி எதை நோக்கமாக வைத்து எழுதினாலும் இந்த இரண்டு கோணங்களும் கோட்பாட்டளவில் பிழை என அவர் சுட்டிக் காட்டினார்.

"ஊடக நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களின் பொறுப்புகள் மற்றும் சுய ஒழுக்க விதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஊடக ஒழுக்கக்கோவை தயாரிக்கப்பட்டு இதனை நடைமுறைப் படுத்த மற்றும் ஒழுங்கமைக்க 2003இல் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் நிறுவப்பட்டது. பத்தரிகை நிறுவனங்களில் அவர்கள் பின்பற்றும் வகையில் ஒழுக்கக் கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும், அரசியல் மற்றும் பொருளாதார நோக்குநிலைகள் குறிப்பிட்ட ஊடக உள்ளீடுகளில் பிரதிபலிக்கின்றன. எமது நாட்டில் அச்சு ஊடகங்களை நெறிப்படுத்த பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இருக்கின்ற போதும் இவற்றை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. இதற்கு என்ன காரணம்" என வினவிய போது "பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு செயல்திறன் இல்லாமல் உள்ளது. அதனை செயல்திறனாக்க வேண்டுமாயின் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இதனை சீர்படுத்த முடியாது" என்றார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதிகாரியும் இலங்கை பத்திரிகை பேரவையின் தகவல் அறியும் உரிமைச் சட்ட ஒருங்கிணைப்பாளருமான கமல் லியனாராச்சி, 'ஒரு சம்பவம் தொடர்பான அறிக்கையிடலின் போது இனத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், நாளாந்த செய்திகளில் சில சந்தர்ப்பங்களில் இனத்தை அடையாளப்படுத்துவதை நாம் காணலாம். நாம் உண்மையின் பக்கம் சார்ந்து அறிக்கையிடுகையில், எமது நிறுவனம் அல்லது தனிப்பட்ட சிந்தனையை



அடிப்படையாக கொண்டு செய்தி அறிக்கையிட முடியாது. உணர்வுரீதியாக மக்களை தூண்டிவிடும் போது பல்லின சமூகம் வாழும் ஒரு நாட்டில் அவை முரண்பாடுகளை மேலும் அதிகரிக்கின்றன என்ற விடயத்தை ஊடக நிறுவனங்களாக இருந்தாலும் ஊடகவியலாளர்களாக இருந்தாலும் அவதானிப்பது அவசியம். டிஜிட்டல் ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சியிலும் கூட, பத்திரிகைளுக்கான மதிப்பும் மரியாதையும் மேலோங்கி இருக்கின்றமைக்கு மக்கள் அச்செய்திகளை நம்புவதே காரணமாகும். பத்திரிகை செய்திகளில் நம்பகத்தன்மை அதிகம் என்ற உணர்வு மக்கள் மத்தியில் இருக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில், அச்செய்திகளை வக்கிர சிந்தனையுடன் சித்திரித்து பிளவுகளை உருவாக்குவது ஊடகவியலுக்கு ஆரோக்கியமானதல்ல' என்றார்.

கலாவர்ஷ்னி கனகரட்ணம்...

# மூதூர் டயமன் விசேட பாடசாலையின் 5 வருட பூர்த்தி விழா கொண்டாட்டம்

மூதூர் டயமன் விசேட பாடசாலையின் ஐந்தாவது வருட பூர்த்தி விழா அண்மையில் மூதூர் கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. மூதூர் பிரதேச சபை உறுப்பினரும், டயமன் விசேட கல்விப் பிரிவின் அதிபருமான நஸார் பாத்திமா அகீதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வானது, விசேட தேவையுடைய மாணவர்களுக்கென கல்வி புகட்டும் மூதூர் டயமன் விசேட பாடசாலையின் ஒரு சிறப்பான முன்மாதிரிப் பணியாகும்.

2016 ஆம் ஆண்டு 07 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஐந்து வருட காலத்தை பூர்த்தி செய்துள்ளது. இப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடானது மூன்று நாள் கல்விச் செயற்பாடாகவும், இரண்டு நாள் வெளிக்கள செயற்பாடாகவும் இருந்து வருகின்றது.

விசேட தேவைகளுடைய தமிழ், முஸ்லிம் மாணவர்களை அரவணைத்து, அடிப்படையான கட்டட வசதிகள் கூட இல்லாமல் வாடகை வீடுகளில் இம்மாணவர்களுக்குரிய கல்விச் செயற்பாட்டை வழங்குவது என்பது தற்காலத்தில் இயலுமான ஓர் காரியம் அல்ல. அதேசமயம் கற்றல், சித்திரம் வரைதல், விளையாட்டு, வெளிக்கள செயற்பாடுகள் மற்றும் பிள்ளைகளின் வயதிற்கேற்ப தொழிற்கல்வியும் இங்கு இடம்பெற்று வருவதாகவும் டயமன் விசேட பாடசாலையின் அதிபர் நஸார் அகீதா குறிப்பிடுகின்றார். இம்மாணவர்கள் அரச பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று இருப்பின் இன்று எத்தனையோ கல்விக்கான உதவிகள் இம் மாணவர்களுக்கு கிடைக்கும். மேலும் விளையாட்டு உபகரணம், கற்றலுக்கான உபகரணம், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும்




நூல்கள் என எல்லாமே கிடைத்து விடும்.

ஆனால் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையே இன்னும் எதிர்பார்த்து இப்பாடசாலை இயங்குகின்றது. தற்போது 26 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 03 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

என்.எப். அகீதா அதிபராகவும், டி. வினித்ரா, வி.தக்ஷிகா ஆகியோர் ஆசிரியர்களாகவும் இம்மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை புரிகின்றனர். மேலும் இம்மாணவர்களுக்கு நிரந்தரமான ஒரு கட்டடம் மிக அவசிய தேவையாக உள்ளது. இந்நிலையில் நலன் விரும்பிகளின் உதவிகள் எமது பாடசாலை மாணவர்களுக்கு ஓரளவு கிடைத்தாலும், பொருளாதார ரீதியில் பெரிதும் நலிவுற்று வாழும் பெற்றோர்களால் முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாது என்று நிருவாகிகள் தெரிவிக்கின்றனர். ஐந்து வருட காலத்தை பூர்த்தி செய்யும் இப்பாடசாலையின் வரலாறு கூறும் சிறிய நூல் காட்சிக்கு வைக்கப்பட்டது. மாணவர்களால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அவர்களால் வரையப்பட்ட சித்திரங்கள், கைவேலைப் பொருட்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டன. போட்டி நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், வகுப்பறைச் செயற்பாடுகளை பலரும் கண்டு மகிழ்ந்தனர். ஐந்தாம் வருட காலத்தை பூர்த்தி செய்யும்கலை நிகழ்ச்சிகள், வரையப்பட்ட சித்திரங்கள், கைவேலைப்பொருட்கள், போட்டி நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், வகுப்பறைச் செயற்பாடுகளை பலரும் கண்டு மகிழ்ந்தனர். இவ்விழா நிகழ்வில் மாணவர்களுக்காக பாராட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விழா ஒழுங்கமைப்புகளை அங்கு வந்திருந்த அதிதிகள் பாராட்டினர்.பெற்றோர் தங்கள் குழந்தைகளின் நிகழ்வுகளை கண்டு மனம் மகிழ்ந்தனர். விசேட தேவையுடைய மாணவர்களின் உளவிருத்திக்கு இது போன்ற நிகழ்வுகள் பெரிதும் பயனுள்ளதாக அமையுமென பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

## பார்வையாளர்களின் மனதை கவர்ந்த கலைநிகழ்ச்சிகள்



எஸ்.கஸ்ஸாலி...
(மூதூர் தினகரன் நிருபர்)

'சுபீட்சத்தை நோக்கிய பயணம்'

# அன்றாட உணவுப் பழக்கங்கள் மூலம் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தை நோக்கிய பயணம் 2021' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், கொவிட் 19 மற்றும் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பும் பெறும வழிமுறைகள், ஆரோக்கிய வாழ்வை கட்டியெழுப்புதல் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

சுதேசிய வைத்திய மேம்பாட்டு கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்திய சாலை அபிவிருத்தி, சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன், நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை (தொற்றா நோய் சிகிச்சை) பதில் பணிப்பாளர் டொக்டர் கே.எல்.எம்.நக்பர் இவ்வேலைத் திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார்.

இவ்வேலைத் திட்டத்தின் கீழ், அரச உத்தியோகத்தர்களுக்கு ஆரோக்கிய வாழ்வைக் கட்டியெழுப்புதல் தொடர்பான செயலமர்வுகளும், பாடசாலை மாணவர்களுக்கு நஞ்சற்ற உணவுப் பழக்கங்கள், சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள், கொரோனா மற்றும் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் வழிமுறைகள் தொடர்பிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்காலத்தில் மனித வாழ்க்கை இயந்திரமயமாகி விட்டது. நவீன விஞ்ஞானம் உச்சத்தில் வளர்ச்சியடைந்த போதிலும், மனித ஆரோக்கியம் தினசரி பாதிப்படைந்து கொண்டே செல்கின்றது எனலாம். மருந்தின்றி வாழ முடியாது என்ற நிலையாகி விட்டது. இதற்கு முறையற்ற உணவுப் பழக்கம், முறையான உடற்பயிற்சியின்மை, உடல், உள ஆரோக்கியமின்மை போன்ற இன்னோரன்ன விடயங்கள் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில், நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை தொற்றா நோய் சிகிச்சை) பதில் பணிப்பாளர் டொக்டர் கே.எல்.எம். நக்பர் கூறுகையில், "மரணத்தை ஏற்படுத்தும் தொற்றா நோய்களிலிருந்து நாங்கள் முறையான பாதுகாப்புப் பெற வேண்டும். எங்களது அன்றாட உணவுப் பழக்கவழக்கங்களில் அதிகம் கவனம் செலுத்தி, நோய்களிலிருந்து முற்பாதுகாப்புப் பெறுவது அவசியமாகும். தற்காலத்தில் மக்களை அதிகம் தாக்கிவரும் தொற்றா நோய்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். நீரிழிவு, அதிகுருதி அழுத்தம், அதிக குருதிக் கொழுப்பு, இருதயநோய், அதிக உடற் பருமன் என்பனவற்றினால் மக்கள் அதிகம் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தொற்றா நோய்கள் ஏற்படாது தடுக்க வேண்டிய பொறுப்பு தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவருக்கும் உண்டு. இலங்கையின் மொத்த சுகாதார செலவில் சுமார் 85 வீதமான செலவு தொற்றா நோய்களின் கட்டுப்பாடு, சிகிச்சைக்காக செலவிடப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இன்று அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் தொற்றா நோயாளர்களினால் நிரம்பி வழிவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தொற்றா நோய் எங்களைப் பீடிப்பதற்கு தினசரி முறையற்ற உணவுப் பழக்கவழக்கங்களே பிரதான காரணமாகும்.



ஒரே நேரத்தில் வயிறு நிறைய சாப்பிடுவது நோய்க்கு பிரதான காரணமாகும். அது மாத்திரமன்றி நஞ்சு, எண்ணெய், கொழுப்பு படிந்த உணவுகளில் நாங்கள் அதிகம் நாட்டம் செலுத்துவதும் காரணமாகும். இயற்கை பழச்சாறுகளை அருந்தாது, இரசாயனம் கலந்த செயற்கைகளிலயே அதிகம் நாட்டம் காட்டுகின்றோம். தினசரி உணவில் மரக்கறி, பழங்களை அதிகம் சேர்த்துக் கொள்ளுமாறும், அதிகளவு நீர் அருந்துமாறும் வைத்தியர்கள் எங்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ள போதிலும், அவற்றை நாங்கள் உதாசீனம் செய்து மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனால், தொற்றா நோயினால் பீடிக்கப்படுவது மாத்திரமன்றி, அது குடும்பத்திலுள்ள ஏனையவர்களுக்கும் சிரமங்களை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகின்றது.

தொற்றா நோய்கள் உச்சத்தை அடையும் போது நாங்கள் வெளியில் நடமாட முடியாது வீட்டில் முற்றாக முடங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இதனால் நாங்கள் மாத்திரமன்றி, எங்களின் நெருக்கமான உறவுகளும் அதிகம் சிரமங்களை எதிர்கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றனர். இது காலப் போக்கில் நாங்கள் குடும்பத்தினர்களிடமிருந்து தூரமாகுவதற்கு காரணமாகவும் அமைந்து விடுகின்றது.

**அம்பாறை மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்**

இவ்விடயங்களில் அலட்சியம் செய்பவர்கள் பின்னர் தவிக்க நேரிடலாம். வந்தபின் அவதியுறுவதை விடவும், வருமுன் காப்பதே சிறந்ததாகும். நாங்கள் முறையான சுகாதார நடைமுறைகள், பழக்க வழக்கங்களைப் பேணி, தொற்றா நோய்களின் தாக்கத்திலிருந்து நிறைவான பாதுகாப்புப் பெற வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டே நாம் விஷேட விழிப்புணர்வு வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது பணிக்கு அரச அலுவலகங்கள், பாடசாலைகளில் சிறந்த வரவேற்பு கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது" என்றார்.

அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தனித்தனியான செயலமர்வுகளை ஏற்பாடு செய்து நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும், அதில் பொருத்தமானவர்களை பங்குபற்றச் செய்யுமாறும் டொக்டர் நக்பர் பிரதேச செயலாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களை கடிதம் மூலம் கேட்டுள்ளார். தொற்றா நோய் விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள், இலவச நீரிழிவு நோய்க்கான இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ சிகிச்சை என்பனவற்றை நிந்தவூர் அரசாங்க ஆயர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை (தொற்றா நோய் சிகிச்சை) இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முகம்மட் றிஸான் ...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

## இலங்கை பொறியியல் நிறுவனத்தின் 114 வது வருடாந்த மாநாடு 8ஆம் திகதி

இலங்கை பொறியியல் நிறுவனத்தின் 114 ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 8ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநாட்டில் பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழகத்தின் கலை பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கே.என்.ஓ. தர்மதாஸ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மாநாட்டு நிகழ்வுகள் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நிகழ்வில் பேராசிரியர் கே.என். ஓ.தர்மதாச தலைமை உரையாற்றுவதுடன் அதனைத் தொடர்ந்து பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் மற்றும் ஸ்ரீலங்கா பொறியியல் நிறுவனத்தின் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான தலைவர் பொறியியலாளர் பேராசிரியர் எஸ். பி. எஸ் அபயகோன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கலாநிதி ரஞ்சித் ரணராஜா, ஓய்வு பெற்ற கேர்ணல் பொறியியலாளர் நிஸ்ஸங்க என். விஜேரத்ன ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றவுள்ளனர்.

நிகழ்வில் ஸ்ரீலங்கா பொறியியல் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பொறியியலாளர் பேராசிரியர் டி. எம். பள்ளேவத்தவுக்கு பதக்கம் அணிவித்து விருது மற்றும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

(ஸ)

## பொலிஸார் எனக்கூறி நகைகள் கொள்ளை

### வவுனியாவில் துணிகர திருட்டு

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் என தெரிவித்து 5 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். நேற்றையதினம் கார் ஒன்றில் சென்ற குறித்த நபர்கள் வவுனியா தம்பனை புளியங்குளம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் பகுதிகளில் உள்ள வீடுகளிற்கு சென்று தங்களை பொலிஸார் என அடையாளப்படுத்திக்கொண்டு, வீட்டை சோதனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

அதனை நம்பி வீட்டின் உரிமையாளர்கள் அவர்களை அனுமதித்த நிலையில் வீட்டில் சோதனை செய்வது போல பாசாங்கு செய்துவிட்டு அங்கிருந்த தங்க ஆபரணங்களை களவாடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### சஜித்தின்... (02ஆம் பக்கத் தொடர்)

நேரத்தில் பணியாற்றிய ஒரு தலைவராக நன்கு அறியப்பட்டவர்.

இன்று சஜித் பிரேமதாசவுடன் இருக்கும் ரணசிங்க பிரேமதாசவுடன் பணிபுரிந்த ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்தவர்கள், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் பணியாற்றிய இந்த தரத்தை இன்னும் மதிக்கிறார்கள்" என அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### போசணையுள்ள பிஸ்கட்கள்... (02ஆம் பக்கத் தொடர்)

பதிலளிக்கையில்,

குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்களை கருத்திற் கொண்டு திரிபோஷ வழங்கப்படுவதில்லை எனவும், குழந்தைப் பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு 6 மாதங்களில் இருந்து 5 வயது வரையில் வழங்கப்படுமென்றார்.

அத்துடன் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் திரிபோஷ நிறுவனத்தினூடாக போசணையுள்ள பிஸ்கட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், இதற்காக 1500 மில்லியன் ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியிருப்பதாகவும், இன்றும்(07) முதல் போசணையுள்ள பிஸ்கட்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின்... (02ஆம் பக்கத் தொடர்)

தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் 32 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை 211 பேர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 75 பேர் நீடிக்கப்பட்ட விளக்கமறியலில் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## இறக்குமதி உணவுப் பொருட்களில் சிறு அளவிலேனும் நச்சு இரசாயனம் கிடையாது

### சுகாதார அமைச்சு உறுதியாக தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிற்கு இறக்குமதி செய்யும் உணவுப் பொருட்களில் சிறு அளவிலேனும் நச்சு இரசாயனம் கிடையாது என்பதை சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டுப்பிரிவு உறுதியாகத் தெரிவிக்கின்றது.

அது தொடர்பில் சில தரப்பினர் மேற்கொள்ளும்விமர்சனங்களைநிராகரிப்பதாக மேற்படி பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டுக்கு உற்பத்தி செய்யப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் முறையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப் படுவதாக அவர் தெரிவித்தார். ஒவ்வொரு உணவுப் பொருட்களுக்கும் அதற்கு உரிய பரிசோதனைகள்மேற் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.குறிப்பாக இறக்குமதி செய்யப்படும் மீன்கள் தொடர்பில் ஆசனிக் உள்ளிட்ட பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன் இறக்குமதி செய்யப்படும் பால்மா தொடர்பில் அதற்கு உரியவிஷேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனம் உள்ளடக்கப்பட்டுள்ளது என வெளிவரும் செய்திகளை முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### புத்தர் சிலைகள் உடைப்பு விவகாரம்:

## விளக்கமறியலில் இருந்த இந்திய பிரஜை உயிரிழப்பு

குளியாப்பிட்டியவில் புத்தர் சிலையை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜை உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உப்புல் தெனிய தெரிவித்தார்.

திடீர் சுகயீனம் காரணமாக அவர் நேற்று முன் தினம் இரவு வாரியபொல சிறைச்சாலையிலிருந்து, வாரியபொல வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும் இதன்போதே அவர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

' வாரியபொல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இந்திய பிரஜை, மூச்சுத் திணறல் காரணமாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதன்போதே அவர் உயிரிழந்தார்.' என பெயர் குறிப்பிட விரும்பாத வாரியபொல சிறைச்சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவ்வாறு உயிரிழந்துள்ள சந்தேக நபர், 47 வயதான திலீப் குமார் என்ற இந்தியராவார்.

### பல்கலைக்கழகங்களை ...

எவ்வாறாயினும்மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கிய பின்னர் கல்வி நடவடிக்கைகளை இம்மாதத்தில் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### சந்தைத் தொகுதி... (02ஆம் பக்கத் தொடர்)

ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைய 35 மில்லியன் ரூபா செலவில் முழுமையான புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக பதவி வகித்த காலத்தில் அவரது சிந்தனையின் கீழ் மேற்படி கொழும்பு புறக்கோட்டை மிதக்கும் சந்தை தொகுதி 2014ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இன்றைய மீள் திறப்பு நிகழ்வில் அமைச்சர்களான காமினி லொக்குகே,தினேஷ் குணவர்தன,விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, பந்துல குணவர்தன, உதய கம்மன்பில உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள். உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

### தோட்ட தொழிலாளருக்கு ...

சம்பளத்தை வழங்குமென நம்புகிறோம். இதுவொரு பாரிய வெற்றியாகும்.

இரத்தினபுரியில் காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கும். இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் 21 ஆயிரத்து 63 குடும்பங்கள் வசிப்பதாகவும், இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2 ஆயிரத்து 414 குடும்பங்களுக்கு 177.9 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் கூறினார்.

### வெளிநாடுகளிலிருந்து...

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் வசித்து வரும் இலங்கையர்கள் நாடு திரும்ப வேண்டுமாயின் வெளிவிவகார அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத் தேவை காணப்பட்டது.

எனினும் இனி வரும் காலங்களில் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் அனுமதி பெற வேண்டியதில்லை என இராணுவத் தளபதி கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

### விடுமுறை வழங்க கோரும்... (02ஆம் பக்கத் தொடர்)

சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றில் முறையிட நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

இருந்தபோதும் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்துக்கு வராமல் இருப்பது அவரது தனிப்பட்ட காரணத்துக்கு அல்ல. சபாநாயகரான நீங்கள் அதற்கான உத்தரவை வழங்காமல் இருந்ததனாலாகும். அதனால் 3மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு வருகை தராமல் இருப்பதை அடிப்படையாகக்கொண்டு, அவரது பாராளுமன்ற பதவி இல்லாமல் போகும் நிலை இருக்கின்றது. அதனால் அவரது 3மாத விடுமுறை பிரேரணையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

அதற்கு சபாநாயகர் இதுதொடர்பில் கவனம் செலுத்துவதாக குறிப்பிட் டு சபை நடவடிக்கையை தொடங்க முற்பட்டபோது, மீண்டும் எழுந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, அரசியலமைப்பின் பிரகாரம் 3மாதத்துக்கு பாராளுமன்றத்துக்கு உறுப்பினர் ஒருவர் வராவிட்டால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போகின்றது.

தற்போது ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்துக்கு வருகை தராமல் 3மாதங்களை முடிவடைய இருகின்றது. அதனால் 3மாதங்கள் வராமை என்ற அடிப்படையில் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வெற்றிடமாக்காமல், இருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க உத்தரவிடவேண்டும்.அதற்காக நீதிமன்ற உத்தரவு வரும்வரை ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான விடுமுறை பிரேரணையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றார்.

இதற்கு சபாநாயர் பதிலளிக்கையில், ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான நீதிமன்ற உத்தரவு இதுவரை எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவருக்கான விடுமுறை பிரேரணையை தற்போது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த உறுப்பினரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் என்னால் நீக்க முடியாது. சட்டத்தின் அடிப்படையிலே என்னால் செயற்பட முடியும் என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கையில்,ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக ஏற்கனவே சபாநாயகரினால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த தீர்ப்பில் எந்த மாற்றமும் இல்லை. அதனால் எதிர்க்கட்சிக்கு தேவையான முறையில் சபாநாயகரின் தீர்ப்பை மாற்ற முடியாது என்றார்.

இதனையடுத்து அரச தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.இதன்போது அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே சஜித் பிரேமதாசாவை குற்றம் சாட்டி சில விடயங்களை முன்வைத்தார். எனினும் இதற்கு தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட சஜித் பிரேமதாச , அந்த விடயங்களை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் என சபாநாயகரிடம் கோரினார்.

இது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் கூறினார். இதன் பின்னரும் மஹிந்தானந்த அளுத்கமகே சஜித் பிரேமதாசாவுடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

### தோட்ட நிறுவனங்களுக்கு...

தொடக்கம் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

வழக்கின் இறுதித்தீர்ப்பு வழங்கப்படும் வரை தொழில் வழங்குநர்கள் 1000 ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்குவது அவசியமாகும்.

இதற்கு மாறாக செயற்படுவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் தொழில் ஆணையாளருக்கு இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஸ்புட்னிக் வி டோஸ்...

07 மில்லியன் 'ஸ்புட்னிக் v ' தடுப்பூசிகளை, ஒரு தடுப்பூசி 9.95 அமெரிக்க டொலர்கள் வீதம் 69.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்வதற்காக 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசியின் அளவுக்கு மேலதிகமாக 06 மில்லியன் 'ஸ்புட்னிக் v' தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காகவும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### சந்தையிலுள்ள தேங்காயெண்ணெயில்... (02ஆம் பக்கத் தொடர்)

வர்த்தக அமைச்சர் பந்துல குணர்தன குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தங்கொட்டுவ பொலிஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய்களை ஏற்றிச் சென்ற பௌசர்கள் தொடர்பில் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் விசாரணைகள் முன்னெடுக்குப்பட்டு வருகின்றன.

மேலும், குறித்த தேங்காய் எண்ணெய் எவ்வாறு சந்தைக் கொண்டுச் செல்லப்பட்டது என்பது தொடர்பிலும் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாம் எண்ணெய்க்கான வரியை அதிகரித்து, தேங்காய் எண்ணெய்க்கான வரியை புதிய அரசாங்கம் குறைத்துள்ளது. இதனாலேயே தேங்காய் எண்ணெயில் நஞ்சு கலந்திருப்பதாக சிலரால் தகவல்கள் பரப்பப்பட்டுவருகின்றன.

எனவே எதிர்க்கட்சியினர் பாம் எண்ணெய் பக்கம் நிற்காது, தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்பவர்கள் பக்கம் நிற்க வேண்டும்.

நாட்டில் உள்ள சந்தைகளில் இருக்கும் தேங்காய் எண்ணெய்களில் நஞ்சு கலந்திருப்பதாக எந்தவொரு இடத்திலும் நிரூபிக்கப்படவில்லை. நஞ்சு கலந்த தேங்காய் எண்ணெய் இருக்கும் இடங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் தகவல்கள் வழங்குவார்களாக இருந்தால் அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்குத் தயாராக உள்ளோம்.

சுங்கத் திணைக்களத்தில் தேங்காய் எண்ணெயை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான குதம் இல்லை. சந்தேகத்துக்குரியப் பொருட் கள் காணப்பட்டால் , அதனை தனியாருக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்துவதற்காகப் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார்.

### சிவஞானசோதி ...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீட்டில் ஓய்விலிருந்தார். எனினும் நேற்று முன்தினம் இரவு மீண்டும் திடீர் சுகவீனம் ஏற்பட்டதையடுத்து கொழும்பு லங்கா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அன்று இரவு வைத்தியசாலையில் காலமானார்.

இவரது பூதவுடல் பொரளை ஜயரத்னமலர் சாலையில் இன்று காலை 9.00 6.00 மணிவரையும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை பிற்பகல் 1.00 மணியளவில் கிரிகைகள் ஆரம்பமாகி 4.00 மணியளவில் தகனம் செய்யப்படவுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் 1992ஆம் ஆண்டு அரச நிர்வாக சேவையில் இணைந்து பல முக்கிய பொறுப்புக்களில் பதவி வகித்திருந்தார். 2010ஆம் ஆண்டு தொடக்கம் அமைச்சுக்களின் செயலாளராக நியமனம் பெற்று பல முக்கிய அமைச்சுக்களில் பதவி வகித்தார்.

குறிப்பாக தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரஅமைச்சு ஆகியவற்றில் பதவி வகித்ததுடன் ஓய்வுக்கு பின்னர் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பொதுசேவை ஆணைக்குழு அங்கத்தவராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கையில் கொரோனா ...

வைத்தியர் சுதத் சமரவீர இதனை தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், கோவிட் 19 வழக்குகளின் எண்ணிக்கை தற்போது படிப்படியாக குறைந்து வருகின்றது.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் 11 நாடுகள் குறித்த அறிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இலங்கை நோய் பரவல் குறைந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இதுவரையில் 132 கர்ப்பிணி தாய்மார்கள் கோவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். எனினும் இவர்களில் யாரும் உயிரிழக்கவில்லை.

அத்தோடு ஒரு வயதிற்கு குறைந்த இரு குழந்தைகள் இதுவரையில் கோவிட் தொற்றால் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் குடும்பநல பணியகத்தின் தாய்மார் மற்றும் குழந்தைகள் சுகாதார பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்திரமாலி டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கோவிட் தொற்றுக்குள்ளான எந்தவொரு கர்ப்பிணி தாய்மாரும் உயிரிழக்கவில்லை. சகலருக்கும் சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு அவர்கள் பூரண குணமடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஈஸ்டர் தாக்குதலை தடுக்க...

குழு, நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் குற்றவாளிகளை அடையாளம் காணவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நாட்டில் நிகழாமல் பார்த்துக் கொள்ளவும் தாம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது குறித்த பரிந்துரைகள் சட்டமா அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் சந்தேக நபர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்களின் கடமை என்றும் சமல் ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதலுக்கு உதவிய 32 சந்தேக நபர்கள் இந்த அறிக்கையில் பெயரிடப்பட்டுள்ளதாகவும், மேலும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

### வெள்ளரி பழத்திற்கு...

வருவதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறை – அம்பாறை பிரதான வீதி, கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களிலேயே அதிகளவு வெள்ளிரிப்பழம் விற்பனையில் வியாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். மக்களும் வெள்ளரிப்பழத்தினை கொள்வனவு செய்வதில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர். இதேவேளை வெளி இடங்களில் இருந்து அம்பாறைக்கு கொண்டு வரப்படுகின்ற பழ வகைகளின் தரங்களை சுகாதார பரிசோதகர்கள், ஒவ்வொரு நாளும் சோதனை செய்து வருகின்றனர்.

மேலும் குறித்த வெள்ளரிப் பழம், 150 ரூபாய் முதல் சுமார் 350 ரூபாய் வரை பருமனுக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வெள்ளரிப்பழம், வெப்பமான காலங்களிலேயே அதிகமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பொருளாதார மத்திய...

சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை வழங்கும் வேலைத்திட்டத்தை வடக்கு கிழக்கில் விரிவுபடுத்தும் நோக்கில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்கும் வேலைத் திட்டத்தில் இந்த விசேட வர்த்தக நிலையங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசிய பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனால் நாடு தழுவிய ரீதியில் இந்த வலைப் பின்னலை விரிவுபடுத்துவதற்காக தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.15பொருளாதார மத்திய நிலையங்கள் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றது.

அதற்கமைய மட்டக்களப்பு மற்றும் வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், யாழ்ப்பாண விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முதலாம் கட்ட கட்டுமானப்பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன.

குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ நிதியத்தை நிறுவுவதற்கும் முறையான பொறிமுறையை பின்பற்றி குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வியாபார அலகுகளை ஒதுக்கி வழங்குவதற்கும் கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நீதியான விசாரணைக்கு...

பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித், ஒரு இனத்திற்காக மாத்திரம் ஆண்டகையாக செயற்படுவதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி,இறக்குமதி தொடர்பான சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கீழ்த்தரமாக விமர்சித்திருந்தார் , மதமொன்றின் தலைவராக இருந்துகொண்டு கர்தினால் கூறும் வார்த்தைகள் பலர் புருவங்களை உயர்த்திப் பார்க்குமளவுக்கு உள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் தொடர்பில் சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்துரைத்திருந்த அண்மையில் காலமான மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ,வன்னி இறுதி யுத்தத்தில் பெருமளவிலான மக்கள் கொல்லப்பட்டோ காணாமல் ஆக்கப்பட்டோ உள்ளதாக புள்ளிவிபரங்களுடன் கூறியிருந்தார். ஆனால் பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழர்கள் தொடர்பான நீதி விசாரணை வேண்டுமென ஏன் இதுவரையில் கோரவில்லை ?

எனவே கர்தினல் சிங்கள கிறிஸ்தவர்களுக்காக மட்டுமே பேசுகின்றார். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்தவர்களில் தமிழ் கிறிஸ்தவர்களே அதிகளவில் உள்ளனர். அதேபோன்று இறுதி யுத்தத்திலும் பல கிறிஸ்தவமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். , எனவே அனைவருக்காகவும் அவர் குரல் கொடுக்க வேண்டும். ஒரு மதத்தின் ஆண்டகையாக இருந்து கொண்டு ம் ஒரு இனத்துக்கு மட்டும் குரல் கொடுக்கக்கூடாது. இறுதி யுத்தத்தால் கொல்லப்பட்ட தமிழர்களுக்காகவும் கர்தினல் இதுவரையில் குரல் கொடுக்காமல் இருப்பது தமிழர்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

நான் பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு எதிரானவன் அல்ல. ஆனால் அவர் ஒரு மதத்தின் தலைவராக இருந்துகொண்டு ஒரு இனத்துக்கு மட்டும் குரல் கொடுப்பது நியாயமல்ல என்றே கூறுகின்றேன் என்றார்.



மாத்தளை வீரகெப்பட்டிபொல பாடசாலையில் தொழில் நுட்ப கல்லூரி அமைப்பதற்கு அடிக்கல் நடும் விழா அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் தலைமையில் நடைபெற்ற போது பிடித்தபடம்.

## கல்விப் புரட்சியால் இன்றைய நவீன யுகம், கற்றோரின் காலடியில் கிடக்கிறது

*அக்கரைப்பற்று சுழற்சி நிருபர்*

அறிவைத் தேடுவதில் செலுத்த வேண்டிய ஆர்வம் பற்றி இஸ்லாம் ஆரம்பத்திலே உணர்த்திவிட்டதாகவும்,இப்பணியில் எந்தச் சவாலை ஏற்க நேரிடினும் மாணவர்கள் சளைக்காமல் முன்னேற வேண்டும் என்றும் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம் சபீஸ் தெரிவித்தார்.க,பொதுத் தராதர, (2021) உயர்தர முதலாம் வருட மாணவர்களை வரவேற்கும்

நிகழ்வில் உரையாற்றும் போதே,சபீஸ் இவ்வாறு கூறினார்.

அக்கரைப்பற்று "பைத்துல்ஹிக்மா"வில் நடைபெற்ற இந்கிழ்வில் உரையாற்றிய அவர்:சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வருவதற்கு முன்னரே,உயர் தரப் பிரிவில் கற்பதற்கு துணிந்துவிட்டீர்கள்.இதுதான்,தன்னம்பிக்கையின் எடுத்துக்காட்டு.வாழ்க்கை எனும் பரீட்சைக்கு ஏடிப் பணியே, இந்த நம்பிக்கைதான்.கற்புலனுக்குப் புலப்படாத "அழ்ழாஹ்வையே" நம்பும் நாம்,நமது திறமையில் நம்பிக்கையை குறைத்து மதிப்பிட முடியுமா? உயர் தரத்தின் விஞ்ஞான, கணிதப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு இன்றைய உலகம் விரிந்து கிடக்கிறது.விஞ்ஞானம், தொழினுட்பத்தின் உச்சத்திலுள்ள இன்றைய நவீன யுகம்

அறிவுடையோரின் காலடியில் கிடக்கிறது.

எல்லோரும் டொக்டராவதும் இல்லை. எல்லோரும் பொறியியலாளராவதும் இல்லை.உலகில் பிறக்கும் எல்லோரிலும் இந்த உலக நடைமுறை தங்கியிருக்கிறது. இதைத்தான் எமது புனித குர்ஆன்"எவற்றையும் நாம் வீணுக்காகப் படைக்கவில்லை" என்கிறது.எனவே நம்பிக்கையுடன் கற்றலைத் தொடருங்கள். தவறவிட்டோம் என்று மாணவர்களும்,தவறிவிட்டான் எனப் பெற்றோர்களும் வருந்த வேண்டியதில்லை.இன்று,அரச துறையில் திறைமையான நிர்வாகிகள்,அதிகாரிகள் இல்லாத குறையுள்ளது.சோரம்போகும் குணமுள்ள அதிகாரிகளால்,எமது சமூகத்தின் பல பணிகள் விரயமாகின்றன.பொது மக்கள் உரிய பயனைப் பெறாது புறக்கணிக்கப்படுகின்றனர்.


திகதி 05.04.2021 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4448
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,693,240.00
ஆங்கில எழுத்து: U — வெற்றி இலக்கங்கள்: 8 7 9 5 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,786,406.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2743
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,757,240.00
ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 16 37 38 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,878,708.40

**Mega POWER** மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 808
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,351,280.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 127,236,693.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: P — சுப்பர் இலக்கம்: 14 — வெற்றி இலக்கங்கள்: 02 25 28 60

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 485
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,931,120.00
ஆங்கில எழுத்து: B — வெற்றி இலக்கங்கள்: 15 17 46 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,491,701.60

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1674
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,643,780.00
ஆங்கில எழுத்து: W — வெற்றி இலக்கங்கள்: 02 21 26 29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,999,152.30

05.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 818,018
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 32,376,660.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 31

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


# ஆழ்ந்த அனுதாபங்கள்



## திரு.வேலாயுதன் சிவஞானசோதி

**B.A(Econ) Hons, MSc(Bradford), U.K**

**FCMA (London), FCA (Sri Lanka), Chartered Accountant**

முன்னாள் செயலாளர் தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தற்போதைய செயலாளர், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர் திரு. வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் 05.04.2021 அன்றுமாலை சிவபதம் எய்தினார்.

இவர் காலம் சென்ற பிரபல சட்டத்தரணி திரு.வேலாயுதன் மற்றும் திருமதி. பொன்னம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரனும், காலம் சென்ற திரு. சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி. குமுதினி அவர்களின் அன்பு மருமகனும், குறமகளின் அன்புக்கணவரும், பிரபல சட்டத்தரணி திரு.தேவசேனாதிபதி மற்றும் தேசிய லொத்தர் சபையின் ஓய்வுபெற்ற பிரதி பொதுமுகாமையாளர் திரு. சுந்தரேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரனும், கௌரி, சுமதி அவர்களின் மைத்துனரும், மயூரதன்-சிங்கப்பூர், சிவசங்கரன்-கனடா, சிவகாந்தன், வேல்விழி-கனடா அவர்களின் மைத்துனரும் பிரதாப், துஷ்யந்தன், அவர்களின் சித்தப்பாவும் கோகுல், சுபஹரி, சிவராம், அருண்சிவா, அவர்களின் மாமாவும் பிரணவன், பைரவி அவர்களின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் புதன்கிழமை 9.00-6.00 மணிவரையும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை (Jayaratna VIP Palour இல் வைக்கப்பட்டு) பிற்பகல் 1.00 மணியளவில் கிரிகைகள் ஆரம்பமாகி 4.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சுக்களில் - தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றில் செயலாளராகவும் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார்.

**தகவல் :**
**குறமகள் (மனைவி) 0779007623**
**தேவசேனாதிபதி (சகோதரன்) 0771133400**
**சுந்தரேஸ்வரன் (சகோதரன்) 0773850841**

## பொது மக்களுக்கான அறிவித்தல்

### இலங்கைச் சுங்கத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்குமான சனாதிபதி ஆணைக்குழு

விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (அத்தியாயம் 393) பிரிவு 2 இன் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள், இலங்கைச் சுங்கத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் அது தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அத்துடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கும் 2021 பெப்ரவரி 24 ஆந் திகதிய 2216/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் வாயிலாக மேற்காணும் ஆணைக்குழுவை நியமித்துள்ளார்.

அ. இலங்கைச் சுங்கத்தின் தற்போதைய கட்டமைப்பு மற்றும் நடைமுறைகளை ஆராய்தல், பாடம் கற்றுக் கொள்ளுதல், குறைபாடுகளை இனங்காணுதல் (நிருவாக மற்றும் தொழில்நுட்ப) மற்றும் இலங்கைச் சுங்கத்தில் இடம் பெறுவதாகக் கூறப்படும் ஊழல்மிக்க நடைமுறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்தல்.

ஆ. பாதுகாப்பு, தனிமைப்படுத்தல் சட்டங்கள் முதலியவற்றைக் கவனத்திற் கொண்டு அதிகூடிய வர்த்தக இலகுபடுத்தலை உறுதிப்படுத்துமுகமாக முதலீட்டுச் சபையையும் சுங்க ஏற்பாடுகளையும் இசைவாக்குதல்.

இ. தற்போதுள்ள பிணைக்கப்பட்ட களஞ்சிய வசதிகள், அவற்றின் வழங்கல்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றின் வாயிலாக அவற்றின் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல்.

ஈ. வருவாய் பாதுகாப்பு கட்டளையில் (Revenue Protection Order) பயன்படுத்தப்படும் பலவிதத் தீர்வை வீதங்களை மீளாய்வு செய்தல்.

உ. சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து உள்ளக ஆய்வுகளையும் மீளாய்வு செய்தல்.

ஊ. சுங்க தொழிற்சங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆலோசனைகளையும் மீளாய்வு செய்தல்.

எ. தன்னியக்க முறைமையின் வாயிலாக சுங்க நிருவாகத்தை நவீனமயப்படுத்தல்.

ஏ. ASYCUDA முறைமையின் வாயிலாக இடர் மதிப்பீட்டினை வலுப்படுத்தல்.

ஐ. மனித வளங்களில் மிகச் சிறந்த சர்வதேச நடைமுறைகளை அமுல்படுத்துவதன் வாயிலாக சுங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவத்தை வலுப்படுத்தல்.

ஒ. அரசாங்க வருவாய், பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தராதரங்கள் ஆகியன பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துமுகமாக சுங்கத்தினால் அமுல்படுத்தப்படும் வெகுமதி முறைமைகள் மற்றும் சுங்கப் புலனாய்வை முகாமைத்துவம் செய்வதிலான பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்தல்

ஓ. வங்கிகள், இலங்கை துறைமுக அதிகாரசபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் ஆகியவற்றுடனான நிறுவனங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை மீளாய்வு செய்தல்.

ஔ. இலங்கைச் சுங்கத் திணைக்களத்தை இப்பிராந்தியத்திலேயே மிகச் சிறந்ததொன்றாக ஆக்குமுகமாக ஊழல் மிக்க நடைமுறைகள், ஒழுங்கீனங்கள் மற்றும் நிருவாக அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை தடுப்பதற்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய குறுகியகால நடவடிக்கைகள் மற்றும் இடைக்கால மற்றும் நீண்டகால நிறுவன சீர்த்திருத்தங்கள் ஆகியவற்றை பரிந்துரைத்தல்.

இவ் ஆணைக்குழு விசாரிப்பதற்காக மேலே குறிப்பிடப்பட்டவற்றோடு தொடர்புபட்ட எழுத்துமூலமான கருத்துரைகளை அல்லது தகவல்கள் அல்லது வேறு ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு இவ் ஆணைக்குழு இத்தால் அழைப்பு விடுக்கின்றது. உண்மையான விடயங்கள் தொடர்புபட்ட ஏதேனும் கருத்துரை அல்லது கூற்று, சாத்தியமாகுமிடத்து சத்தியக் கடதாசியொன்றின் மூலம் ஆதரப்படுத்தப்பட வேண்டும். மேற்காணும் பந்திகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து அல்லது ஏதேனும் விடயங்கள் தொடர்பான அத்தகைய கருத்துரைகள் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்படலாம்.

அத்தகைய கருத்துரைகள் அனைத்தும் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் உள்ள இச் சனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு **2021 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்க வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்புவது விரும்பத்தக்கது.

அத்தகைய கருத்துரைகள் அனைத்தும் அத்தகைய கருத்துரைப்பவரின் அல்லது தகவலாளரின் பெயர், முகவரி, தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

கிடைக்கப் பெறும் எழுத்துமூலமான கருத்துரைகளைப் பரிசீலித்ததன் பின்னர் ஆணைக்குழு வாய்மூல கருத்துச் சமர்ப்பணம் தேவைப்படுமிடத்து வாய்மூல சாட்சியம் வழங்குவதற்காக எவரேனும் ஆளை, ஆட்களை அல்லது நிறுவனத்தை அழைக்கலாம். வாய்மூல சாட்சியம் வழங்குவதற்கான திகதிகள் உரியவாறு அறிவிக்கப்படும்.

ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கும் சாட்சிகள் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான சிறப்புரிமைகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான உரிமைகள் மற்றும் உரித்துக்கள் ஆகியவற்றிற்கும் உரித்துடையவர்களாவர்.

ஆணைக்குழுவின் ஆணைப்படி

04 ஏப்பிரல் 2021

ஆணைக்குழுவின் செயலாளர்

<u>எழுத்து மூலமான அனைத்து தொடர்பாடல்களும் அனுப்பப்பட வேண்டிய முகவரி :</u>

செயலாளர்,
(இலங்கைச் சுங்கத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்குமான சனாதிபதி ஆணைக்குழு),
4-209A, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்தேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07
தொலைபேசி : 011 269 1767 தொலைநகல்: 011 269 1767
மின்னஞ்சல் : pcicustoms@presidentsoffice.lk

# பச்சை தேயிலைக் கொழுந்துகளை கேள்வி கோரல் முறையின் கீழ் விற்பனை செய்தல்

## மே - ஜூ ன் 2021

## கேள்வி இலக்கம் : SLSPC/PL/Greenleaf/T-77/2021

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் பெருந்தோட்டங்களின் பச்சைத் தேயிலைக் கொழுந்துகளை இரண்டு மாதங்களிற்கு விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெருந்தோட்டத்தின் பெயர் | மீளளிக்கப்படாத நட்ட ஈட்டுத் தொகை ரூபா | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா |
|---|---|---|
| அலகொல அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| கொட்டகங்க அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| கல்பிஹில்ல அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| கோமர அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| ஹாகல அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| ஹெயார்பார்க் அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| நிகலொய அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| வைதலாவ அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| வுட்சைட் அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |
| ஓபல்கல அரச பெருந்தோட்டம் | 5,000/= | 100,000/= |

மேற்படி கேள்வி கோரலுக்கான, நிபந்தனைகளுடன் கூடிய படிவங்களின் தொகுதியினை ரூபா 5000/= இற்கான தொகையை செலுத்தி 2021.04.07 முதல் 2021.04.27 அன்று பி.ப.4.00 வரை, பன்விலவிலமைந்துள்ள, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய பணிமனையில் அல்லது 2021.04.28 அன்று பி.ப.12.30 வரை, இலக்கம் 21, மீரானியா வீதியிலுள்ள பிரதான அலுவலகத்திலும் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத்தொகையான ஒரு இலட்சம் ரூபா தொகை (100,000/=) யை ஒவ்வொரு பெருந்தோட்டத்திற்கும் தனித்தனியாக செலுத்துதல் வேண்டுமென்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கி முதல் நகரக்கிளையின் கணக்கு இலக்கம் 046100240000933 இல் வைப்புச் செய்தல் அல்லது காசாளருக்கு செலுத்திப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தொகுதியுடன் அப்பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், தொகை வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டுடன், கொழும்பு -12, மீரானியா வீதியிலமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2021.04.28 அன்று பி.ப.1.00 இற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

2021.04.28 அன்று பி.ப.01.30 இற்கு பெறுகைக்குழு முன்னிலையில், கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம். குறித்த தினத்தன்று, குறித்த நேரத்தில் கிடைக்கப் பெறாத விலைமனுக்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காது என்பதுடன் பெறுகைக்குழுத் தலைவரின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**
**21, மீரானியா வீதி,**
**கொழும்பு - 12**

**2021.04.05**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல்

**கிழக்கு, வடமேற்கு, வடமத்திய மற்றும் தென்கிழக்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியல் நிர்வாக அலுவலகங்களுக்கு தேமோ பிளாஸ்டிக் மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்**

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் காட்டப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.04.07** ஆம் திகதியிலிருந்து **2021.04.27** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.9,200/- (வட்வரி உள்ளடங்களான)** கட்டணத்துடன் இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை **0000001943** எனும் கணக்கிலக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எனும் பெயரில் வைப்பிலிட்டு விண்ணப்பத்தை பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள "மகநெகும மஹமெதுர" 4 வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளருக்கு **(கொள்முதல்)** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | அளவு | மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ) | மனு ஆவண கட்டணம் (வட் வரியுடன்) (ரூ) |
|---|---|---|---|---|
| RDA/DPR/RMEP/ 2021/79 | கிழக்கு மாகாணத்திற்கு தேமோ பிளாஸ்டிக் மூலப்பொருள் வழங்கல் மற்றும் விநியோகித்தல் | வெள்ளை: 125,000 கி.கி<br>மஞ்சள்: 7,000 கி.கி<br>கிளாஸ் பீட்: 8,000 கி.கி | 250,000.00 | 9,200.00 |
| RDA/DPR/RMNWP/ 2021/80 | மேல் மாகாணத்திற்கு தேமோ பிளாஸ்டிக் மூலப்பொருள் வழங்ல் மற்றும் விநியோகித்தல் | வெள்ளை: 411,200 கி.கி<br>மஞ்சள்: 36,000 கி.கி<br>கிளாஸ் பீட்: 25,050 கி.கி | 850,000.00 | 9,200.00 |
| RDA/DPR/RMNCP/ 2021/81 | மத்திய மாகாணத்திற்கு தேமோ பிளாஸ்டிக் மூலப்பொருள் வழங்கல் மற்றும் விநியோகித்தல் | வெள்ளை: 82,000 கி.கி<br>மஞ்சள்: 13,250 கி.கி<br>கிளாஸ் பீட்: 3,375 கி.கி | 150,000.00 | 9,200.00 |
| RDA/DPR/RMSP/ 2021/82 | வட மாகாணத்திற்கு தேமோ பிளாஸ்டிக் மூலப்பொருள் வழங்ல் மற்றும் விநியோகித்தல் | வெள்ளை: 474,000 கி.கி<br>மஞ்சள்: 15,550 கி.கி<br>கிளாஸ் பீட்: 22,500 கி.கி | 950,000.00 | 9,200.00 |

3. மனு ஆவணங்களை எவ்வித கட்டணங்களுமின்றி **இலவசமாக பணிப்பாளர், கொள்முதல் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நான்காம் மாடி "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை** அமைந்துள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பரீட்சிக்க முடியும்.
4. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியான விலைமனு ஆவணம் வழங்கப்படும்.
5. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாதுடன், மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான **(2021.08.25 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்)** காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். காப்புறுதிப்பிணைத் தொகை இணைக்கப்படாத அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.
6. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**.......... பொறியியல் நிர்வாக அலுவலகங்களுக்கு தேமோ பிளாஸ்டிக் மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இலக்கம்** RDA/DPR/.....2021/....." என குறிப்பிடப்பட வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் 2021.04.28 ஆம் திகதி 02.00 மணிக்கு முன் **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் மாடி, "மகநெகும மஹமெதுர" 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் : **011 2046482** பெக்ஸ் : **011-2884790** மின்னஞ்சல் **procurement@rda.gov.lk** ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (கொள்முதல் பிரிவு) தொடர்பு கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**முதலாவது மாடி, "மகநெகும மஹமெதுர"**
**டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை**

---

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்:-

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 01. | திரு. பி. எம். அம்ஸா,<br>இல. 91/16 பீ, வட்டரப்பல வீதி,<br>கல்கிஸ்ஸ. | சவுதி அரேபிய அரசிற்கான இலங்கைத் தூதுவராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர். |
| 02. | திரு. டி.எம்.எஸ்.பி. தசநாயக்க,<br>இல. 52, இரண்டாம் ஒழுங்கை,<br>இரத்மலானை. | பிரேசில் ஃபெடரல் குடியரசிற்கான இலங்கைத் தூதுவராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர். |
| 03. | திரு. பி.எம்.வீ. விஷ்வநாத் அபொன்சு,<br>வெளிநாட்டு அமைச்சு வீட்டுத் தொகுதி,<br>பீ/2/1, 117/17, "பீ" பிரிவு,<br>எல்விட்டிகல மாவத்தை,<br>கொழும்பு 08. | ஈரான் இஸ்லாமியக் குடியரசிற்கான இலங்கைத் தூதுவராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர். |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "**செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**" என்ற விலாசத்திற்கு **2021 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க முடியும். இன்றேல், தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

அவ் எழுத்துமூலக் கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூலக் கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இவ் விளம்பரமானது பாராளுமன்ற இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.(www.parliament.lk)

குழுச் செயலாளர்
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
2021 ஏப்ரல் 07 ஆம் திகதி.

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**மத்திய மாகாண விவசாய சிறிய நீர்ப்பாசன, விலங்குகள் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி கமநல அபிவிருத்தி நன்னீர்மீன்பிடி, சுற்றாடல் விவகாரங்கள், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

## மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய கட்டிட நிர்மாணம். – கட்டம் 2

மத்திய மாகாண விவசாய சிறிய நீர்ப்பாசன, விலங்குகள் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி. கமநல அபிவிருத்தி நன்னீர்மீன்பிடி, சுற்றாடல் விவகாரம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் கீழ் குறிப்பிடப்படும் கட்டடப்பணிக்கு தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

01. விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள (CIDA)தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும் என்பதுடன் தடைவிதிக்கப்பட்ட பட்டியலில் உட்படுத்தப்படாதிருக்கக் கூடாது.

02. இது தொடர்பான மேலதிகத் தகவல்களை கீழ் குறிப்பிடப்படுகின்ற முகவரியில் கணக்காளரின் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த ஆவணங்களை இலவசமாக பரிசீலிக்கலாம் என்பதுடன் உரிய கட்டணத்தினை செலுத்திய பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியினை 2021.04.07 ஆம் திகதி முதல் 2021.04.27 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. இது தொடர்பான பூர்வாங்க விலைமனுக் கூட்டம் 2021.04.22 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடும் முகவரியிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

04. பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனு பிரதிகள் இரண்டினை தயாரித்து மூலப் பிரதியையும் நகல்பிரதியையும் வெவ்வேறாக உறைகளில் இட்டு அவற்றுக்குப் பெயரிட்டு முத்திரையிட்டு அவற்றை ஒரே உறையில் இட்டு வலது பக்க மேல் மூலையில் ஓப்பந்தத்தின் பெயர் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தலைவர், கொள்வனவுக் குழு, மத்திய மாகாண விவசாய சிறிய நீர்ப்பாசன, விலங்குகள் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி கமநல அபிவிருத்தி நன்னீர்மீன்பிடி, சுற்றாடல் விவகாரங்கள், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு. என்ற முகவரிக்கு 2021.04.28 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டிருக்கின்ற விலைமனுப் பெட்டியில் இடுவதன் ஊடாக ஒப்படைக்கலாம்.

05. உரிய நேரத்தின் பின்னர் கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உரிய விலைமனுவினை கையளிப்பதற்கான காலம் முடிவடைந்ததும் விலைமனுக்கள் திறத்தல் தலைவர், விலைமனுதாரர் அல்லது அவர்களது முகவர்கள் முன்னிலையில் நடைபெறும்

06. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்காக அமைச்சின் செயலாளரின் பெயரில் அதே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலஎல்லைக்குள் செல்லுபடியாகும் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வாணிப வங்கி ஒன்றில் அல்லது கட்டுமான பாதுகாப்பு நிதியம் (CGF) மூலமாக பெற்றுக்கொண்ட விலைமனு பிணைமுறி ஒன்றினை விலைமனுவுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

07. எந்த ஒரு விலைமனுவினையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் கொள்வனவுக் குழுவைச் சாரும். கொள்வனவுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

08. அனைத்து விலைமனுக்களினதும் பெறுமதி ரூபா 5 மில்லியன்களிலும் அதிகமாகுமிடத்து ஒப்பந்தத்திற்கு தகுதிபெறுகின்ற ஒப்பந்தக்காரர் மூலமாக 1987 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 8 வது பந்தியின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

09. இந்த விலைமனு அழைப்பு தேசிய போட்டி விலைமனுக் கோரல் (NCB) முறையில் மேற்கொள்ளப்படும். இதன் ஊடாக விலைமனுக்கோரப்படுகின்ற செயற்றிட்டத்தின் வரி தவிர்ந்த பெறுமதி மதிப்பீடு ரூபா 50 பில்லியனிலும் குறைவானது என்பதுடன் 2021.02.18 ஆம் திகதி அரச நிதிச் சுற்றறிக்கை 02.2016 (III) இற்கு அமைய CIDA தரத்தினை குறிப்பிடல் மற்றும் பிராந்திய விலைமனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| விலைமனு இல | செயற்றிட்டம். | நிதி மூலம் | பொறியலாளர் அளவைப் பட்டியல் மதிப்பீட்டு வட் வரியில்லாத பெறுமாணம் (ரூ.மி) | அவசிய மான பதிவு (CIDA) | மீளச் செலுத்து கின்ற பிணை முறியின் பெறுமதி (ரூ.) | ஒப்பந்த காலம் (தினங்கள்) | விவைமனு பிணை செல்லுபடி யாகும் காலம் (தினங்கள்) | விலைமனு ஆவணக் கட்டணம். (மீளச் செலுத்தப் படாத) (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| CPC/ PID/3/1/ IRRI/B/01/ 2021 | மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களத் திற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ள புதிய கட்டிட நிர்மாணம். – கட்டம் 2<br><br>பல்லேகலை, குண்டசாலை | மாகாண நிலையான அபிவிருத்தி | 30.92 | C3 அல்லது C4 | 300,000.00 | 196 | 2021.08.26 | 5000.00 |

**தலைவர்**
**அமைச்சின் கொள்வனவுக் குழு**
**மத்திய மாகாண விவசாய சிறிய நீர்ப்பாசன, விலங்குகள் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி கமநல அபிவிருத்தி நன்னீர் மீன்பிடி, சுற்றாடல் விவகாரங்கள், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**
**இல. 1060, கெடம்பே, பேராதெனிய**
**தொ.பே.இ. 081 - 2 388 336**
2021.04.07

it's what you want
www.adz.lk
Login
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE




## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

# ஊவாவில் அதிபர்,ஆசிரியர் கவனயீர்ப்பு போராட்டம்

**பதுளை தினகரன் விசேட நிருபர், ஊவா சுழற்சி நிருபர்**






ஊவா மாகாண அதிபர், ஆசிரியர்கள் சம்பள பிரச்சினை மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுத்தருமாறு வலியுறுத்தி மாகாண சபைக்கு முன்பாக நேற்றைய தினம் பாரிய கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

24 வருட காலமாக நிலவி வரும் அதிபர் ஆசிரியர்களின் சம்பள பிரச்சினை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வினை பெற்றுதருமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டது.

ஊவா மாகாண சபைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்று மீளவும் மாகாண சபையை நோக்கி திரும்பியது.

இதனால' இப்பிரதேசத்தில் பொலிஸ் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக அனைத்து வாகனப்போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

1997 மற்றும் 2006 ஆகிய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத்திட்டத்தை அமுல்படுத்தப்படாமையை கண்டித்தும் அதிபர், ஆசிரியர் சட்டத்திட்டங்களுக்கு புறம்பாக புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டமை, உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படாமை, கொவிட் 19 குறித்து முழுமையான வசதிகள் பாடசாலைகளுக்கு செய்துக்கொடுக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊவா மாகாண அதிபர் ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை பெற்று இப்போராட்டத்தில் கலந்துக்கொண்டிருந்தனர். பாடசாலைக்கு வருகைத் தந்த மாணவர்கள் மீண்டும் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். இதனால் பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

போராட்ட நிறைவில் அதிபர், ஆசிரியர்கள் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக நீண்ட மகஜரொன்றை ஆளுநர் அலுவலகத்தில் சமர்ப்பித்தனர்.

# முச்சக்கர வண்டி குடை சாய்ந்து விபத்து



**ஹற்றன் விசேட நிருபர்,நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் ஸ்டதர்டன் தோட்டத்திற்கு அருகில் நேற்று 6/4/2021 பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஏற்பட்டுள்ளது.

ஹற்றனில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற முச்சக்கர வண்டி ஹற்றன் கொழும்பு பிரதான பாதையின் ஸ்டர்டதன் தோட்ட பிரதான பாலத்துக்கு அருகில் வைத்து குடைசாய்ந்துள்ளது. முன்பக்க சக்கரம் திடீரென்று வெடித்ததால் சாரதிக்கு முச்சக்கர வண்டியை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவ்வழியாக வந்த இ.போ.ச பஸ்சில் பயணித்தவர்கள் உடனடியாக இறங்கி சாரதியையும் மூன்று பெண்களையும் கைக் குழந்தையையும் மீட்டெடுத்தனர்.

கைக்குழந்தைக்கு சிறிய காயம் ஏற்பட்டதால் அந்த குழந்தை வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இறத்தொட்டை மண்சரிவு

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதகதியில் வீடுகளை அமைக்குமாறு கோரிக்கை

## ஒன்பது வருடங்கள் கடந்து தீர்வுக்காக ஏங்கும் மக்கள்

**மாத்தளை சுழற்சி நிருபர்**



இறத்தொட்டை பிரதேச தோட்டத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் வீடுகள் அமைப்பதற்கான எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென இரத்தொட்டை பிரதேச சபை உறுப்பினர் எரோஷியன் பிரதேச சபை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். மண்சரிவு இடம்பெற்று ஒன்பது வருடங்கள் கடந்தும் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண திசாநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம்(5) இரத்தொட்டை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதேச சபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

மேலும் அவர் கூறுகையில் கடந்த 2012 ஆம் ஆண்டு மண்சரிவினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இதுவரை வீடுகளை அமைத்துக் கொடுக்கப்படவில்லை, இதற்கான காணியை விடுவிப்பதற்கு தோட்ட நிர்வாகம் தொடர்ந்தும் தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக பல முறை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தோட்ட நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி அவர்களது வீட்டு பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினரான ரோஹண திசாநாயக்க கூறுகையில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பிடகந்த தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு வசதி தொடர்பாக தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடிய பின்னர் துரிதகதியில் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

# ரயில் கடவையை திறக்குமாறு கோரி வாயில் காப்பாளர் மீது தாக்குதல்

**(எம்.ஏ அமீனுல்லா)**

பேராதனை எழுகொட குறுக்கு வீதியில் உள்ள ரயில் வாயில் காப்பாளர் ஒருவரை தாக்கி அவரது பாதுகாப்பு அறையையும் சேதப்படுத்தியமை தொடர்பில் உடுநுவர பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட இரு முச்சக்கர சாரதிகள் பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (6) அதிகாலை 4,00 மணியளவில் நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில்வே கடவை மூடப்பட்டிருக்கும் போது முச்சக்கர வண்டி சாரதி வந்து திறக்கும்படி கட்டாயப்படுத்தியுள்ளார். இதனால் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

முச்சக்கர வண்டியின் சாரதி கடந்த 4 ஆம் திகதி காலையில் ரயில்வே வாயில் காப்பாளர் அச்சுறுத்தியதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து மேலும் தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது : ரயில் வருவதற்கு இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் இருக்கும் போது ரயில் கடவையை திறக்குமாறு முச்சக்கர வண்டி சாரதி கட்டாயப்படுத்தியுள்ளதாக வாயில் காப்பாளர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்

இதனையடுத்து வாயில் காப்பாளர் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக கண்டியில் இருந்து கொழும்புக்கு அதிகாலை 4.30 மணி மற்றும் அதிகாலை 5.10 மணிக்கு பயணித்த இரண்டு ரயில்களும் சுமார் அரை மணி நேரம் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவர் என கண்டி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சமில் ரத்நாயக்க தெரிவித்தார்.

# மாகுடுகலை, கிளன்டவன் தோட்டங்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**



மாகுடுகலை தோட்டம் மற்றும் கிளன்டவன் ஆகிய தோட்டங்களில் கடந்த ஒரு மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் தோட்ட தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஓரிரு நாட்களில் தீர்வு பெற்றுத்தருவதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.

நேற்று (06) மாகுடுகலை தோட்டத்திற்கு நேரடி விஜயத்தை மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்டதை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மாகுடுகலை மற்றும் கிளன்டவன் ஆகிய தேயிலை தோட்டங்களில் காடாகியுள்ள புற்களை அழிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் குறித்த இரண்டு தோட்டங்களையும் நிர்வாகம் செய்து வரும் செரண்டிப்பிட்டிய தனியார் கம்பனியிடமிருந்து மீட்கப்பட்டு மத்துரட்ட பெருந்தோட்ட கம்பணி நிர்வாகத்தின் கீழ் இணைக்க வேண்டும் என தோட்ட தொழிலாளர்கள் முன்வைத்த நீண்டகால கோரிக்கையை ஆராயவுள்ளதாகவும் இன்னும் ஓரிரு நாட்களில் சிறந்த தீர்வை பெற்றுதருவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# தேசிய உற்பத்தி கைத்தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

தேசிய உற்பத்தி கைத்தொழிலை ஊக்குவிப்பது குறித்து கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டம் அண்மையில் கேகாலை நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சௌபாக்கிய நோக்கு திட்டத்தின் கீழ் கிராமிய பொருளாதாரத்தை மேலும் ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டம், தேசிய உற்பத்தி கைத்தொழிலை ஊக்குவிப்பது குறித்து கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தேயிலை. தேங்காய், பாக்கு, கிதுல், இறப்பர், கருவப்பட்டை, கராம்பு, மிளகு உட்பட மேலும் பல சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி குறித்தும் மற்றும் மண்பாண்டங்கள் உட்பட ஏனைய கைத்தொழில் அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, அமைச்சர் ரொமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், ஜானக வக்கும்புர உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், கோகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட அரச அதிகாரிகள் அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரொக்வூட் பகுதியில் திடீர் தீ பரவல்





**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரொக்வூட் பகுதியில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக 10 ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளது. காசல்ரீ நீர்தேக்கத்தை அண்மித்த மானாபுல் காட்டுப்பகுதியே நேற்று மதியம் தீ விபத்தினால் எரிந்து நாசமாகியுள்ளது.

மலையகத்தில் தொடரும் வறட்சி காலநிலையால் காடுகளுக்கு தீ வைக்கும் விஷமச் செயல்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளது.

தீ பரவலை நோர்வூட் பொலிஸார் கட்டுப்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

# அருகிவரும் கித்துள்,தென்னை உற்பத்திகள்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பாரம்பரிய தென்னை மற்றும் கித்துள் ஆகியவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கள் மற்றும் சாராய உற்பத்திகள் அருகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமையினால் இத்தொழிற்துறை எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடும் கவலைக்குரிய நிலைமை உருவாகி வருவதாக உற்பத் தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.இலங்கையில் புதிய தொழிநுட்பங்கள் இன்றி பாரம்பரிய நடைமுறையிலுள்ள ஒரே தொழிற்துறை இதுவாகும். இவர்கள் ஏனைய மதுபான உற்பத்தித்துறை முயற்சிகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பு தமக்கும் கிடைத்தால் இத்துறையை வினை திறனுள்ளதாக மாற்றியமைக்க முடியும் என இவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில்

## மட்டக்களப்பில் அமரர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு அஞ்சலி





(வெல்லாவெளி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்)

தமிழ்தேசியத்தின்பால் ஓங்கி ஒலித்த குரல், ஒய்வுநிலை ஆயர் அமரர் வண இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் இறுதி நல்லடக்க நாளான திங்கட்கிழமை (05) பி.ப 4, மணியளவில் மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தை செல்வா சிலை வளாகத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராசாவின் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில், மறைந்த முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் படத்திற்கு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, அன்னாரின் நினைவு தொடர்பாக நினைவுரையும், இரங்கல் உரையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ.பிரசன்னா, மா.நடராஜா, மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன், தமிழரசு கட்சி முக்கிய பிரமுகர் மா. உதயகுமார், மதப்பெரியார்கள், மாநகரசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

ஆன்மீக தலைவராக இருந்து தமிழ் தேசியத்தின்பால் அக்கறையுடன் செயலாற்றி வடக்கு, கிழக்கு மக்கள் பல நெருக்கடிகளையும், கொலை அச்சுறுத்தல்களையும், தடைகளையும் சந்தித்த வேளைகளில் துணிந்து குரல் கொடுத்த உன்னத மகான் ஆண்டகை இராயப்பு ஜோசப் அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் இடம்பெறும் இந்த அஞ்சலி வணக்க நிகழ்வானது கொரோணா நோய் பாதுகாப்பை கருத்தில்கொண்டு முக்கவசம், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்றது.

## நீலாபாலனின் இழப்பு நிரப்பப்படாத வெற்றிடம்

### அகரம் கலைக்கழகம் அனுதாபம்

(மண்டூர் குறூப் நிருபர்)

கலை இலக்கியப் பணியில் கிழக்கிற்கும் மலையகத்திற்கும் இடையில் உறவுப்பாலமாக திகழ்ந்த கவிச்சக்கரவர்த்தி நீலாபாலனின் (பூபாலரெத்தினம்) இழப்பு தமிழிலக்கியத் துறையில் நிரப்பப்படாத வெற்றிடமாகும் என அகரம் கலைக்கழகத் தலைவர் செ.துஜியந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது, பிரபல கவிஞர்களில் ஒருவராக திகழ்ந்த கவிஞர் நீலாபாலன் தனது 73வது வயதில் திங்கட்கிழமை (05) இயற்கையெய்தினார்.

கிழக்கில் கல்முனையை பிறப்பிடமாகக் கொண்ட பூபாலரெத்தினம் எனும் இயற்பெயரைக் கொண்டவர். திருமணத்தின் பின் பதுளை வெலிமடையில் வசித்து வந்தார்.

ஆரம்பத்தில் கல்முனை பூபால் எனும் பெயரில் எழுத்துத்துறைக்குள் நுழைந்தவர். பின்நாட்களில் தனக்கு மிகவும் பிடித்த நீலாபாலன் எனும் புனைபெயரில் கவிதை, சிறுகதை, விமர்சனம், ஆய்வுக் கட்டுரைகள், மேடைநாடகங்கள், மெல்லிசைப்பாடல்கள், போன்ற பல்வேறு கலை இலக்கியச் செயற்பாடுகள் தொடர்பில் ஏராளமான படைப்புக்களை வெளியிட்டுள்ளார்.

இலக்கியப்பரப்பில் இவரது படைப்புக்கள் வெளிவராத பத்திரிகைகள் இல்லையென்றே கூற வேண்டும். கவிஞர் நீலாபாலனின் தொடர்ச்சியான இலக்கியச் செயற்பாடுகள் இளம் படைப்பாளிகளுக்கு ஓர் உந்து சக்தியாகவும் அமைந்திருந்தன.

அன்னாரின் பிரிவால் துயருரும் குடும்பத்தினருக்கும், கலை இலக்கிய நண்பர்களுக்கும் அகரம் கலைக் கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

## சாய்ந்தமருது மின் அத்தியட்சகர் பதவியேற்பு

காரைதீவு குறூப் நிருபர்

இலங்கை மின்சார சபை சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தின் புதிய மின் அத்தியட்சகராக கோ. ஜெயராஜ் கடமை ஏற்றுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தின் மின் அத்தியட்சகர் ஏ.எச்.எம். பயாஸின் இடமாற்றத்தை அடுத்து, சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தின் புதிய மின் அத்தியட்சகராக கோ. ஜெயராஜ் கடமையைப் பொறுப்பேற்கும் நிகழ்வு திங்கட்கிழமை (05) சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இருவர் கைது

திருமலை மாவட்ட விசேட நிருபர்

கொழும்பிலிருந்து மூதூருக்கு கோழிக் குஞ்சுகளுடன் சென்று கொண்டிருந்த டொல்பின் வான் ஒன்றிலிருந்து ஐஸ் போதைப் பொருட்களுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (06) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். வான் சாரதியான கொழும்பு வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த (வயது 24) நபரொருவரும் மூதூர் ஜாயா வீதியைச் சேர்ந்த (வயது 25) நபரொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பள்ளிவாசலுக்கு மின் விசிறிகள் அன்பளிப்பு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

நற்பிட்டிமுனை குனபா பள்ளிவாசலுக்கு கொலன்னாவ ஜேஜே பவுண்டேசனால் மின் விசிறிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. பவுண்டேசனின் தலைவரும் அதன் ஸ்தாபகருமான ஐ.வை.எம்.ஹனீப் இதனை கொழும்பில் வைத்து கையளித்துள்ளார்.

பெண்களுக்கான தராவீஹ் தொழுகை இடம்பெறும் பகுதிக்கு

பாவிக்க இம் மின்விசிறிகள் பயன்படுத்தப்படவுள்ளன. மின் விசிறிகளை வழங்கிய ஜே.ஜே.பவுண்டேசனுக்கு நற்பிட்டிமுனை குனபா பள்ளிவாசல் தலைவர் முகம்மட் கமால், செயலாளர் முகம்மட் பரீட் ஆகியோர் ஒப்பமிட்டு நன்றிக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

## அட்டாளைச்சேனையில் பட்டமளிப்பு விழா



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை யூ.கே. எம்.இஸ்மாயில் பவுண்டேஷன் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் தஜ்வீத் மத்ரஸா மாணவர்களின் 16ஆவது பட்டமளிப்பு விழா அட்டாளைச்சேனை அல்முனீறா பெண்கள் உயர் பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை (05) நடைபெற்றது.

யூ.கே.எம்.இஸ்மாயில் பவுண்டேஷன் தலைவரும் ஓய்வு பெற்ற அதிபருமான கே.எம்.சுபையிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஏ.எல்.எம். அஷ்ரப் பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபிக் கல்லூரியின் பொதுச் செயலாளரும்,இத்திட்டத்தின் மேற்பார்வையாளருமான மௌலவி யூ.எம்.நியாஸி கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு மூன்று வருடங்கள் பகுதி நேரங்களாக தஜ்வீத் முறைப்படி புனித அல்குர்ஆனை ஓதி மனனம் செய்து பூரணப்படுத்திய மாணவர்களுக்கு இதன்போது பட்டச்சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாணவர்களினால் ஆக்கப்பட்ட இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வுகள் அதிதிகள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அரங்கேற்றம் செய்து வைக்கப்பட்டது.

## உள்ளூர் கைத்தொழிலாளர்களை மேம்படுத்தும் வர்த்தக சந்தை

### கிழக்கு மாகாண ஆளுநரினால் திறந்து வைப்பு



அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

உள்ளூர் கைத்தொழிலாளர்களது விற்பனையினை மேம்படுத்தும் வர்த்தக சந்தை உப்புவெளியில் நேற்று (06) ஆரம்பமாகியது.

இந்நிகழ்வுக்கு அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜெகம்பத் கலந்து கொண்டு நாடா வெட்டி வர்த்தக நிலையங்களை திறந்து வைத்தார்.

இன்றும் (07) இடம்பெறவுள்ள இந்த வர்த்தக சந்தையில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெற்றது. அதிதிகளாக மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பண்டிக்கொரல மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலார் ஏ.எல்.எம்.அசீஸ் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கிழக்கு மகாண ஆளுநர் அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் சென்று பார்வையிட்டதுடன். அவர்களுடன் கலந்துரையாடி அவர்களிடம் பொருட்களையும் கொள்வனவு செய்து கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து கைத்தொழிலாளர்கள் தமது உற்பத்தியினை கொண்டு வந்து காட்சிப்படுத்தியதுடன், விற்பனையிலும் ஈடுபட்டனமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி மீடியா போரத்தின் புதிய தலைவராக சஜி தெரிவு

புதிய காத்தன்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி மீடியா போரத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் (04) போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம். நூர்தீன் தலைமையில் இடம்பெற்றது.

காத்தான்குடி மீடியா போரத்தின் புதிய தலைவராக ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.சஜி தெரிவு செய்யப்பட்டதோடு, செயலாளராக மீண்டும் எம்.ரீ.எம். யூனுஸூம், பொருளாளராக எம்.கே.பழீலுர்ரஹ்மானும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவர்களாக எம்.எஸ். எம்.நூர்தீன் மற்றும் எம்.ஐ.அப்துல் நஸார் ஆகியோர் தெரிவுசெய்யபட்டதுடன், தகவல் பணிப்பாளராக எம்.பஹத் ஜூனைட்டும் உதவிச் செயலாளராக ஏ.எல்.ஆதிப் அஹமட்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது காத்தான்குடி மீடியா போர அங்கத்தவர்களுக்கான ஊடக அடையாள அட்டை வழங்கி வைக்கப்பட்டது.

இதன் பின்னராக புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட எம்.எஸ்.எம்.சஜி அவர்கள் தனதுரையில் தன்னை தலைவராக தெரிவு செயதமைக்காக உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுக்க ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## நஞ்சற்ற மரக்கறி உற்பத்தி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இறால்குழி, சம்பூர், உப்புக்காச்சிமடு, சந்தனவெட்டை, சாபிநகர் மற்றும் வேதத்தீவு போன்ற தோட்டக் காணிகளில் நஞ்சற்ற மரக்கறிப் பயிரினங்கள் தற்போது பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் பல மரக்கறி உணவுகள் மக்களுக்கான ஆரோக்கிய உணவுகளாக இல்லை. இதனால் ஆரோக்கியமற்ற நிலையில் நஞ்சற்ற மரக்கறிகளாக கத்தரி, கறிமிளகாய், பப்பாசி, தக்காளி, வெண்டி, பயிற்றை, பாகை, புடலை உள்ளிட்ட பயிரினங்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் தோட்டக் கிணறுகள் மூலம் நீர் விநியோகப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு அபராதம்

### அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் றிஸ்லி

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 43 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 01 இலட்சத்து 63 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்வதாக நுகர்வோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளை பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதாக, தெரிவித்தார்.

இத் திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 60 வர்த்தகர்களுக்கெதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்திற்கமைய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இதில் 43 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 01 இலட்சத்து 63 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை, அம்பாறை ஆகிய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், கூறினார். அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்கவின் ஆலோசனைக்கமைய இவ் விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினார்.

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் எதிர்காலத்தில் பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளவுள்ளதாகவும், மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

## நிந்தவூர் அல்– அஷ்றக் பாடசாலையில் பழைய மாணவர் சங்க கட்டடம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)

நிந்தவூர் அல்அஷ்றக் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பல்தேவைக் கட்டடம் ஞாயிற்றுக்கிழமை (04) பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூரினால் திறந்து வைக்கப்பட்டது.

மூன்று மாடிகளைக் கொண்ட இந்த கட்டடமானது 1985, 1991 முதல் 2020ம் ஆண்டு காலப்பகுதிக்குள் இப்பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பு மூலம் முதல் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

இது இப்பிரதேச பாடசாலை வரலாற்றில் முதல் முதலாக இடம்பெற்ற நிகழ்வு என்பதுடன், பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளையும் அதன் எதிர்கால நடவடிக்கைகளையும் முன் கொண்டு செல்லும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது அண்மைக்காலமாக கல்வி சார் மற்றும் பௌதீக வளங்கள் அபிவிருத்தி விடயங்களில் கூடுதல் பங்களிப்புச் செய்திருந்தது. அந்தவகையில் பாடசாலையின் பிரதான நுழைவாயிலை புனரமைப்பு செய்வதற்காக பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி அதன் மூலம் நிதி வசூலித்து இதனைக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தது.

இருந்த போதும் இம் மாணவர் சங்கத்தின் முயற்சியின் பலனாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த நுழைவாயில் முற்றுமுழுதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

# மக்களிடம் கையளிக்கப்பட்ட "கனுகஹவெவ" முன்மாதிரி கிராமம்

## மக்களின் கோரிக்கையை மூன்று மாதங்களில் நிறைவேற்றிய ஜனாதிபதி கோட்டாபய















விமானப் படையினர் நிர்மாணித்த கனுகஹவெவ முன்மாதிரிக் கிராமம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அண்மையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

கெப்பித்கொல்லாவ "கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்விற்கு வருகை தந்த ஜனாதிபதி மக்கள் முன்வைத்த மனக்குறைகளை செவிமடுத்தார். அதன் பின்னர் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் கடந்த டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற "கிராமத்துடன் கலந்துரையாடல்" நான்காவது நிகழ்ச்சித் திட்டத்திற்காக அநுராதபுரம் நகரத்திலிருந்து 73 கி.மீ தூரத்தில் உள்ள கெபிதிகொல்லாவ பிரதேச செயலக பகுதியில் உள்ள கனுகஹவெவ கிராமம் தெரிவு செய்யப்பட்டது. கெபிதிகொல்லாவ பிரதேசம் பிரிவினைவாத போரின்போது அடிக்கடி எல்ரீரீஈ பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளான பிரதேசமாகும். 2006 ஜூன் மாதம் 15 ஆம் திகதி ஹல்மில்லவெடிய கிராமத்தில் கெபிதிகொல்லாவ பஸ் வண்டியொன்று புலிப் பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானதில் கனுகஹவெவ மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 68 பேர் உயிரிழந்தனர்.

1995 முதல் 1998 வரை மற்றும் 2006 முதல் 2008 வரை இந்த கிராமங்களில் வசிப்பவர்கள் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக முகாம்களில் வாழ வேண்டி ஏற்பட்டது. இப்போது அந்த அச்சுறுத்தல் முடிந்துவிட்டாலும் அவர்கள் பல கடுமையான பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களின் காணி பிரச்சினைகளை தீர்த்தல், குளங்களை புனரமைத்தல், வீதி அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி,போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கனுகஹவெவ கிராமத்தில் வீடுகள் உள்ளிட்ட தேவைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரன ஏற்றுக்கொண்டிருந்தார். கிராமத்தின் விகாராதிபதி, கிராம அலுவலர், பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபைத் தலைவர் ஆகியோருடன் இணைந்து கிராமத்தின் தேவைகளை அடையாளம் கண்டு விமானப்படைத் தளபதியிடம் திட்டங்களைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

கனுகஹவெவ கிராமத்திற்கு சென்ற ஜனாதிபதி, முதலில் அபிநவாராம விகாரைக்குச் சென்று சமயக் கிரியைகளில் ஈடுபட்டதன் பின்னர் விகாராதிபதி தேரரை சந்தித்து உரையாடினார்.

முன்மொழியப்பட்டிருக்கும் விகாரை நிர்மாணிக்கப்படும் காணியையும் நிர்மாணப்பணிகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

கனுகஹவெவ ஆரம்ப பாடசாலை வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 12 வீடுகள் மற்றும் ஆசிரியர் இல்லத்தின் திறப்புகளை வீட்டு உரிமையாளர்களிடமும் அதிபரிடமும் கையளித்தார்.

கனுகஹவெவ ஆரம்ப பாடசாலையின் விளையாட்டு மைதானம் முன்மாதிரி வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைத் திட்டம், ஆசிரியர் இல்லம் மற்றும் நடமாடும் கண் வைத்திய சாலையில் மேற்கொள்ளப்படும் கண் சத்திர சிகிச்சை என்பவற்றை ஜனாதிபதி பார்வையிட்டார்.

உரிமை இன்றி இதுவரை அரச காணிகளை பயன்படுத்தி வந்த குடும்பங்களுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி கனுகஹவெவ கிராமத்தில் 5 குடும்பங்களுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கனுகஹவெவ முன்மாதிரி கிராமத்திற்கு சென்ற ஜனாதிபதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு வீடு மற்றும் கனுகஹவெவ முன்மாதிரி கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 15 கிலோ மீற்றர் நீளமான யானை வேலி என்பவற்றையும் பார்வையிட்டார்.

அருகில் இருந்த வீடொன்றுக்கு சென்ற ஜனாதிபதி வீட்டில் இருந்தவர்களுடன் சுமுகமாக உரையாடி விபரங்களை கேட்டறிந்தார்.

அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, ஷெஹான் சேனசிங்க, சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர்களான கே.எச்.நந்தசேன,கே.பி.எஸ்.குமாரசிறி, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகியோரும் விமானப் படை அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டு 4 வருடங்களில் நாட்டில் பாரிய அபிவிருத்தி

## இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டதன் பின்னர் கடந்த நான்கு வருட காலத்தில் நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு நாட்டிற்கு பல வெற்றிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

'நாற்புறமும் பாதுகாக்கப்பட்ட நான்கு வருடங்கள்' என்னும் தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரகதிசீலி தொழிற்சங்க தேசிய மத்திய நிலையத்துடன் இணைந்து கேகாலை மாவட்ட பிரதிநிதிகள் மகாநாடு





கடந்த 04 ஆம் திகதி கேகாலை நகர மண்டபத்தில் நடைபெற்றது.நிகழ்வில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்த வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரகதிசீலி ஊழியர்கள் சங்கத்தில் பிரபல செயல்திறன் மிக்க இரண்டு சங்கங்களான லேக்ஹவுஸ் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரகதிசீலி ஊழியர் சங்கங்களின் ஏற்பாட்டில் கேகாலை மாவட்ட அரசியல் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் இம்மாநாடு நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தாரக ,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய சக்தியாக அமைவது கிராமிய மட்டத்திலுள்ள கிளைகள், சங்கங்கள், கட்சி அமைப்பாளர்கள் ஆவர். எமது கட்சி கிளைகள், சங்கங்கள் வேறு கட்சிகளுக்கு இல்லாத மக்கள் சக்தியுடனான அமைப்பாகும். அதன்படி எமது கட்சியுடன் இணைந்த அமைப்புகள் பலவற்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளது. எமது கட்சியின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ எமக்கு அடிக்கடி வழங்கும் ஆலோசனை முடிந்தளவு மக்களின் மனதை வெற்றிகொள்ளும் வகையில் அவர்களுடன் நெருக்கமாக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கூறியுள்ளார். தொழிற்சங்கமான நாம் அதற்கப்பாலும் சென்று செயற்பட வேண்டும். அதன் பிரகாரம் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இணைந்து எமது அமைப்பை மேம்படுத்தி வருகின்றோம்.

எமது கட்சியின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதால் நாட்டிற்கு கிடைத்த ஒரு வெற்றி இன,மத அடிப்படையில் பிரிந்த நாடொன்று உருவாகாமையாகும். நாட்டில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது நாட்டுக்கு எதிராக சர்வதேசத்தில் ஏற்பட்டுள்ள சவாலை வெற்றிகொள்ளும் நடவடிக்கைககளை மேற்கொண்டு வருகிறோம்.

பிரகதிசீலி தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்த லேக்ஹவுஸ் கிளையின் தலைவர் சந்தன பண்டார உரையாற்றும் போது..

கேகாலை மாவட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளின் சம்மேளத்தை ஏற்பாடு செய்ய அரசியல் தலைவர்களிடமிருந்து கிடைத்த ஆதரவு அளப்பரியது. அதே போன்று எமது பிரதிநிதிகளிடமிருந்து கிடைத்த ஊக்கத்தையும் மதிக்க வேண்டும் . கேகாலை மாவட்ட அரசியல் தலைவர் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய , பாராளுமன்ற உறுப்பினர் ராஜிக்கா விக்ரமசிங்க போன்று கேகாலை மாவட்ட அனைத்து தொகுதிகளினதும் எமது கட்சி அமைப்பாளர்கள் பெற்றுக்கொடுத்த ஆதரவையும் மதிக்கின்றோம்.



எமது கட்சி பல தடைகளை தாண்டி முன்னேறி வந்த கட்சியாகும்.

இதனை பாதுகாத்து மக்களையும் நாட்டையும் வெற்றிபெறச் செய்ய பெரும் போராட்டத்தை நடத்த வேண்டும். தொழிற்சங்கமாக நாம் அனைவரும் அச் சவாலை வெற்றி கொள்ள வேண்டும் என்றார்.

# வவுனியாவில் பொது மக்களின் விபரம் சேகரிக்கும் பொலிசார்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா பூந்தோட்டம் பகுதிகளில் வசித்துவரும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்ற பொலிசார் அங்கு தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை திரட்டும் படிவம் ஒன்றினை வழங்கிவிட்டு சென்றதுடன் இரு தினங்களில் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு வருகை தருவதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

எவ்விதமாக தெளிவுபடுத்தும் அறிவுறுத்தல்கள் மற்றும் காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாமல் இவ்வாறு குடும்ப விபரங்களை கோருவதால் பொதுமக்கள் மத்தியில் அச்ச நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் முதல் பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் மக்களிடம் சென்ற பொலிசார் வீடுகளின் வசிப்பவர்களின் பெயர், முகவரி, தொழில், தேசிய அடையாள அட்டையின் இலக்கம், தொலைபேசி இலக்கம் போன்ற முக்கிய தகவல்களை கோரிய விண்ணப்பப்படிவம் ஒன்றினை வழங்கினர்.

அவ் விபரங்களை சேகரிப்பதற்கு மீண்டும் வருகை தரவுள்ளதாகவும் அப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை நிரப்பி கையளிக்குமாறும் அறிவுறுத்தல்களை வழங்கிவிட்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு பொலிசாரினால் குடும்ப விபரங்கள் சேகரிப்பதற்கு காரணங்கள் தெரியாமல் மக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் கூறுகின்றனர்.

# சிவஞானசோதியின் மறைவு தமிழ் மக்களுக்கு இழப்பு

## அங்கஜன் எம்.பி இரங்கல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

அரச துறையின் மூத்த அதிகாரி சிவஞானசோதியின் திடீர் மறைவு அரச துறையில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் ஈடு இணையற்ற ஓர் இழப்பினை ஏற்படுத்தியுள்ளது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சிவஞானசோதி கடந்த காலங்களில் பல அமைச்சுக்களின் செயலாளராக திறன்பட பணியாற்றியிருந்தார். இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, வடக்கு மாகாண ஜனாதிபதி செயலணி, நல்லிணக்க அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளராகக் கடமையாற்றியிருந்தார். ஓய்வின் பின்னரும் கூட பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமையாற்றிக்கொண்டிருந்தார். இலங்கை மட்டுமன்றி வேறு பல நாடுகளிலும் சிறந்த அரச விருதுகளைப் பெற்று எமக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்த ஒருவர்.

நீண்ட காலமாக அரச பணியில் மிகப்பெரும் பங்காற்றியிருந்தார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அளப்பரிய சேவையாற்றியிருந்தார். ஒரு தலைசிறந்த மூத்த தமிழ் அரச அதிகாரியான அவர் தன் இறுதி மூச்சு வரை வடக்கு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற விருப்பினைக் கொண்டிருந்தவர்.

# 10 வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

## வவுனியாவில் சுகாதார பரிசோதகர் அதிரடி

**ஓமந்தை விஷேட நிருபர்**

ஏப்ரல் 1 முதல் 07ஆம் திகதி வரைஉணவுகையாளும்வாரமாக பிரகடணப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் பத்திற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களிற்கு எதிராக நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக வவுனியா மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

காலாவதித் திகதி முடிவடைந்த உணவுப்பொருட்கள், பாவனைக்குதவாத தானிய வகைகள், சுகாதார சீர்கேடான சாப்பாட்டுக் கடைகள் போன்றவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இன்று வரை 22 வியாபார நிலையங்களிற்கு மேல் மேற்பார்வை செய்துள்ளோம். அவற்றில் 10 வியாபார நிலையங்களிற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் வியாபார நிலையங்கள் மற்றும், உணவங்களில் கையாள வேண்டிய சுகாதார விடயங்கள் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்களிற்கு கருத்தரங்குகள் மூலமாக ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம் என்றார்.

# இந்திய புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற இந்தியாவில் பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சி / கலாநிதி கற்கை நெறிகளுக்கான புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கலாசார உறவுகளுக்கான இந்தியக் கவுன்சிலின் (ICCR) 2021 2022கல்வி ஆண்டுக்கான புலமைப் பரிசில்களுக்கு இந்திய உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/மருத்துவ உதவி &ஆடை வடிவமைப்பு கற்கை நெறி தவிர்ந்தவை) அனைத்து பட்டப்படிப்பு (Undergraduate) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/துணை மருத்துவம் &ஆடை வடிவமைப்பு கற்கைநெறி தவிர்ந்தவை) முதுமாணிப் பட்டக் (Masters Degrees) கற்கைகளை உள்ளடக்குகிறது. எவ்வாறாயினும், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ராஜிவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம்: B.Eஅல்லது B.Techபட்டப் படிப்புகளுக்கு வழியமைக்கும் ‘தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கைநெறிகள்.

பொதுநலவாய புலமைப் பரிசில் திட்டம்:மருத்துவம்/ துணைமருத்துவம் &ஆடை வடிவமைப்புக் கற்கை நெறிகள் தவிர்த்து அனைத்துத் துறைகளின் கலாநிதிப் பட்டப் படிப்புக்கள் (PhD Degrees). இப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசாங்கம் தெரிவு செய்கிறது.

இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, பட்டப் பின்படிப்பு மற்றும் கலாநிதிப் பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு விண்ணப்பதாரிகளின் தெரிவு செய்தல் இலங்கை அரசாங்கத்தின் கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும்.

அனைத்துப் புலமைப் பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம், மற்றும் புத்தகங்கள் & காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றது. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

மேலும், இந்தியாவிலுள்ள அனைத்து ஐ.சி.சி.ஆர் புலமைப் பரிசில் பெற்றவர்களுக்கும், இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பனவும், இவற்றை விட ஏனைய பல்வேறு அனுகூலங்களும் வழங்கப்படும்.

தேவையான தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lkஎனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இந்த கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் கல்வி அமைச்சு அல்லது இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு ஆகியவற்றை அணுக முடியும்.

# புதுக்குடியிருப்பில் புத்தாண்டு விற்பனை சந்தை திறந்துவைப்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



புதுக்குடியிருப்பு பிரதேச கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சியும் சிறப்பு விற்பனை சந்தையும் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கத்திற்கு முன்னால் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் அ.அன்னலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திறப்பு நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உற்பத்தி சந்தையினை திறந்து வைத்தார். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் உள்ளூர் உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் விற்பனையும் செய்யப்பட்டு வருகின்றன. இந்த சந்தை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# தேவிபுரம் பகுதியில் துப்பாக்கி ரவை மீட்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேவிபுரம் (அ) பகுதியில் தனிநபர் ஒருவர் தனது காணியினை துப்பரவு செய்யும் போது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இப் பகுதிக்குச் சென்ற பொலிசார் வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

உரப்பை ஒன்றில் சுத்தப்பட்ட நிலையில் ரி 56 துப்பாக்கி ஒன்றும் அதன் ரவைகள் 420ம் மீட்கப்பட்டுள்ளன. பொலிசாரின் பொறுப்பில் உள்ள துப்பாக்கி ரவைகளை நீதிமன்றில் பாரப்படுத்தும் நடைவடிக்கையில் புதுக்குடியிருப்பு பொலிசார் ஈடுபட்டுள்ளார்கள்.

# ரூ1 கோடி பெறுமதியான சொத்தை கல்லூரிக்கு வழங்கிய அம்மையார்

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் கிழக்குப் புறமாக உள்ள சுமார் 1 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய வீட்டையும் காணியையும் திருமதி தேசராசா இந்திராணி என்ற அம்மையார் கல்லூரிக்கு அன்புளிப்பு செய்துள்ளார்.



தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப நலன் என சொத்துக்களை சேர்த்து இலாபம் தேடும் பலருக்கு மத்தியில் இவ்வாறு சமூக நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்கள் மேலான நிலையில் மதிக்கப்பட வேண்டியவர்கள் என கல்லூரிச் சமூகத்தினர் உட்பட பலரும் பாராட்டி வருகின்றனர்.

# வேலி எரியூட்டப்படுவதை தடுக்க சென்ற காணி உரிமையாளர் மீது தாக்குதல்

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்.கோப்பாயில் காணி வேலிக் கதியாலை வெட்டி எரியூட்டிய போது அதனை தடுத்த காணி உரிமையாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் மத்தி நீமசிட்டி பகுதியில் நேற்று அதிகாலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வேலிக் கதியாலை வெட்டி வேலியருகில் போட்டு எரித்துக் கொண்டிருந்த போது அதனை பார்த்த காணி உரிமையாளர் எரியூட்டியவருடன் முரண்பட்டார். இம் முரண்பாடு பின்னர் கைலப்பாக மாறியது. இதன்போது வேலிக் கதியாலை வெட்டி எரித்தவருடன் கூட இருந்த கும்பல் காணி உரிமையாளர் மீது தாக்குதலை மேற்கொண்டனர். ஒருவாறு அந்த கும்பலில் இருந்து காணி உரிமையாளர் தப்பி ஓடியுள்ளார்.

# யாழில் ஹெரோயினுடன் இருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் நண்பகல் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் இருவேறு இடங்களில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். பொம்மைவெளியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவர், ஒரு கிலோ 750 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். அத்துடன், பொம்மைவெளி 8ஆம் குறுக்குத் தெரிவைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவர், 5 கிராம் 750 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 80 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது என்று பொலிசார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர்.







நயீனாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய பசுமைப் புரட்சியின் நெற்பயிர்ச் செய்கையின் அறுவடை விழாவும் பணியாளர்கள் கௌரவிப்பும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும், திருவாசக முற்றோதல் நிகழ்வில் பங்குபற்றியவர்களை கௌரவித்து நூல் வழங்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஸ்ரீ புவனேஸ்வரி கலையரங்கில் நடைபெற்ற போது... (படங்கள்: வேலணை குறூப் நிருபர்)

# துவிர்



பவதாரணி ராஜசிங்கம்

இன்றைய காலகட்டத்தில் நம் எதிரே உள்ளவர்களை விடவும் நமக்கு முகம் தெரியாத நபர்களுடனேயே அதிக நம்பிக்கையையும் நட்பையும் வைத்து கொண்டாடுகின்றோம். அது நன்மையானதாய் அமைகின்றதா என்றால் முற்றுமுழுதாகவே இல்லை.

நமக்கேயான தருணங்களை வாழாமல் சமூகவலைத்தளங்களில் பதிவுசெய்வதே குறிக்கோளாக கொண்டிருக்கன்றோம். நம்மோடு நிஜ உலகில் இருப்பவர்களை விடுத்து யாரையோ எதற்கு தேடமுற்பட்டு கடைசியல் இழந்து துன்பம் அடைகின்றோம்.

பெரும்பாலும் பெண்கள் இந்த துன்பத்தை எதிர்கொள்கின்றனர். அவர்களில் சமூகம் ஏற்றியுள்ள பாரமும் அதன்மீதான பயமும் இந்த சைபர் கிரைம் எனப்படும் இணையவழி வன்முறைகள் பெண்களை அதிகமாய் விரட்டக் காரணமாகின்றது.

'Blue Whale Challenge", "Momo Challenge" என்று குழந்தைகளின் வாழ்வை கேள்விகுறியாக்கும் சவால்கள் இன்றுவரை வந்து கொண்டே இருக்கின்றன. எல்லா வசதிகளையும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தி கொடுக்கும் பெற்றோர் அவற்றைக் கையாள அவர்களுக்கு கற்றுத்தரவில்லை. இதனால் இந்த இணைய உலகை நம்பி பலர் வாழ்வை தொலைக்கின்றனர்.

தொழில்நுட்ப உலகில் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. இவற்றை பிரித்து ஆராய்ந்து கையாளவேண்டியது நம்மில் உள்ளது. தவறான எண்ணம் கொண்ட நபர்கள் மற்றவர்களை இணையவழியால் துஷ்பிரயோகம் செய்ய முடியும். இந்த சிக்கலை எதிர்கொள்பவர்கள்பெரும்பாலும்பெண்களாகவே இருக்கின்றனர். அதன் பின்னர் ஏற்படும் மன உளைச்சல் இவர்களை தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றது.

நான் அறிந்தவரையில் CERT|CC இனால் 2017ஆம் ஆண்டளவில் நடத்தப்பட்ட ஆய்வில் பதிலளித்தவர்களுக்கமைய 14% தவறாக பயன்படுத்தியும், 12% இணைய மிரட்டல்களாலும் மற்றும் 3% இணைய மோசடிகளாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணையவழிகளில் பெண்கள் பாதிக்கப்படும்போது சிலநேரங்களில் அவற்றை பிறருக்கு தெரயாமல் தவிர்க்க முயன்று விட்டுவிடுகின்றனர். அல்லது சிலர் தனிப்பட்ட ரீதியில் ஆண் பெண் சம்பந்தப்பட்ட விடயத்தில் பெண்ணை மட்டும் விளம்பரப்படுத்தி தவறான நிலையில் சித்திரிக்க முற்படுகின்றனர்.

ஒருவர் இணைய முறைகேட்டுக்கு ஆளாகும் சந்தர்ப்பத்தில் அவர்கள் காவல்துறை மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவு, WIN அல்லது CERT இன் உதவியை நாட முடியும்.

SGBV பாதிப்பாளர்களுக்கு உதவ இலங்கை சட்ட அமைப்பு முறைகள் இருந்தபோதிலும் முக்கியமாக SGBV பாதிப்பாளர்களை நோக்கும் விதம் மற்றும் நடத்தும் முறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தினால் எதிர்கொள்ளும் பாரிய கருத்து மோதல்கள், களங்கமேற்படுத்தும் செயற்பாடுகளால் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். அதனால் அவர்கள் இதுதொடர்பாக வெளிப்படுத்த மறுக்கின்றனர்.

பாதிப்படைந்தவர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகள் அதிகரிக்கும்போது பெண்கள் அவர்களின் பிரச்சினைகளை முன்வந்து கூறவும் குற்றம் புரிந்தவர்கள் தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவடைகின்றன.

இணைய உலகில் ஏற்படும் குற்றங்களை தவிர்க்க நம்மால் முடியும். நமக்கு தெரியாத நபர்களுடன் பேசுவதை தவிர்க்க வேண்டும். அதேபோன்று உங்களை தொடர்புகொள்ளுவதற்கான முகவரி, தொலைபேசி எண் போன்றவற்றினை வழங்கக்கூடாது.

வங்கி தொடர்பாகவோ, வீட்டு உறுப்பினர்கள் தொடர்பாகவோ இன்னுமொருவருடன் பேசக்கூடாது. வீடியோ அழைப்புக்களில் முகம்தெரியாதவர்களுடன் பேசாதீர்கள். சமூகவலைத்தளங்களில் உங்களைப் பற்றிய தகவல்களை வழங்காதீர்கள். இவற்றை செய்வதன் மூலம் இணைய அத்துமீறல்களிலிருந்து நீங்கள் உங்களை முன்கூட்டியே பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இருப்பினும் இணையவழி குற்றங்களை எதிர்கொண்டிருந்தால் அதற்காக தயங்காதீர்கள். உங்களை குறைவாக எண்ணாதீர்கள். தவறை வெளிப்படுத்தி இன்னுமொருவரையேனும் நீங்கள் காப்பாற்றலாம். இணையத்தை பொறுத்தவரையில் உங்களின் பயம்தான் குற்றத்தில் ஈடுபடுபவருக்கான மூலதனமாகும். அதனை தகர்த்தெறியுங்கள். வெற்றி காணுங்கள். இம்முறை இது தொடர்பிலும் அவதானமாய் இருங்கள்.

## புதுமுக இயக்குனராய் மிளிரும் சிந்துஜா செபஸ்டியன்









நாம் வாழுகின்ற சூழல் எப்போதும்விசித்திரம்மிகுந்தது. அந்த சூழல் எம் மண்ணில் பல ஆளுமைகளை இயல்பாக உருவாக்கியிருக்கின்றது. இன்னமும் உருவாக்கிக் கொண்டேயும் இருக்கின்றது.

இப்படியான வெளியில் அண்மிய நாட்களாய் ஈழத்து திரைத்துறை சார்ந்து இயங்கிக் கொண்டு தன்னை இயக்குனர் தளத்தில் நிலையிறுத்தியிருப்பவர் தான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் படைப்பாளி சிந்துஜா செபஸ்ரியன் குரூஸ்.

அண்மையில் கொழும்பில் நட்சத்திரக் கலைக் கூடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மகளிர் தின சிறப்பு குறும்பட போட்டியில் சிறந்த இயக்குனருக்கான இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டவரும் இவரேயாவார்.

The noise of the dump அதாவது ஊமையின் பாஷை என்ற தலைப்பில் இவர் தனது குறும்படத்தை வெளியிட்டு விருதும் பெற்றிருக்கிறார்.

திறந்த பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்து வரும் சிந்துஜா சிறு வயது முதலே பாடசாலைக் காலங்களில் பேச்சு, நாடகம், புகைப்படம் போன்ற கலைத்துறை சார் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

தனது சகோதரியான தேனுஜாவின் ஒத்தாசையுடனேயே இந்தக் கலைத்துறை முயற்சிகளில் தான் ஈடுபடுவதாகவும், தன் குடும்பத்தினரின் பாரிய ஊக்குவிப்பும் தன்னை இந்தத் துறையில் தொடர்ச்சியாக பயணிக்க வழி வகுக்கிறதாகவும் கூறினார்.

தனது சகோதரி நன்றாக சிறுகதை எழுதக்கூடியதால் இத்துறை சார்ந்து பல புதிய முயற்சிகளை மேற்கொள்ள முடிகிறது என்றும் கூறுகிறார் சிந்துஜா.

திரைத்துறை சார்ந்து எந்தவிதமான அனுபவங்களும் வேறு புரிதல்களும் இல்லாத போதும் தனது ஆர்வத்தால் இந்தத் துறைக்குள் வந்ததாக கூறும் சிந்துஜா, 'ஊமையின் பாஷை' என்ற இக்குறும்படம் இயக்குனரும் கலைஞருமான ராஜ் சிவராஜின் மிகப் பெரிய ஒத்தாசையாலேயே நிறைவேறியதாகவும் கூடவே கலை இயக்குனராக பணியாற்றிய சரவணன் மற்றும் படத்தில் நடித்த விதுனா தயா நேசன் ஆகியோரினதும் பங்களிப்புக்களையும் மறக்க முடியாது என நெகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்தார்.





திரைத்துறையைப் பொறுத்தமட்டில் சிந்துஜா செபஸ்டியன் குரூஸ் புதுமுகமானவராக இருந்தாலும் ஆரம்பத்திலேயே மகளிர் தின சிறப்பு குறும்பட போட்டியில் இயக்குனருக்கான இரண்டாம் இடத்தை வென்றமை அவருக்கு ஊக்குவிப்பாக அமைகிறது எனலாம்.

தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வரும் சிந்துஜா செபஸ்டியன் யாழிலிருந்து பிரம்மாண்டமாக உருவாகிவரும் பூவன் மீடியாவில் 'புத்தி கெட்ட மனிதரெல்லாம்' என்ற முழு நீளத் திரைப் படத்தைலும் மிக முக்கியமான பாத்திரத்தில் நடித்து வருகின்றார்.

திரைத்துறை சார்ந்து இன்னும் பல பெண் படைப்பாளிகள் இயங்கி வருகின்ற இன்றைய சூழலில் இயங்கிக் கொண்டிருக்கும் பல பெண் படைப்பாளிகள் வரிசையில் சிந்துஜா செபஸ்டியன் இணைந்து இன்னும் பல படைப்புக்களைத் தர வேண்டும்.

தொகுத்து எழுதுபவர்
**வெற்றி துஷ்யந்தன்**

## வாழ்க்கை ஒரு முறைதான்



விமலி...

எனது எழுத்துக்களை இன்றைய சமூகம் எதிர் கொள்ளும் தற்கொலை என்னும் மாயையிலிருந்து வெளி வருவதற்கான சில விடயங்களை முன்வைத்து எழுத விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் அதாவது ஒரு மாதங்களிற்குள்ளே நான் வலைத்தளங்களின் ஊடாகவும் என் காதுகளில் வந்தடைந்த செய்திகளின் ஊடாகவும் அதிகம் மனவேதனை அடைந்து ஒரு மாபெரும் ஆழ்ந்த சிந்தனைக்குள் தள்ளப்பட்டிருந்தேன்.

ஆம், காரணம் ஏன் இந்த மனிதர்கள் இப்படி வாழ்வை தொலைத்துக் கொள்கிறார்கள் என்று ஒரு மன வேதனையையும் என் சிந்தனையையும் பலப்படுத்திக் கொண்டு சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன். நாம் வாழும் சூழல் மிகவும் கடினமானதுடன் எமக்கான அனுபவக்கற்றலை தரும் தளமாகவுமே இருக்கிறது.

ஒரு மனிதன் வாழ்க்கையில் துன்பங்கள் இல்லையெனில் அவன் முழுமையடையவில்லை என்றே கூறுவேன். ஆம் வாழ்க்கையில் இன்பத்தை நாடும் நாம் துன்பத்தினை நிச்சயம் அனுபவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய கால கட்டங்களில் பணம் ஒரு மிகப்பெரிய தேவைப்பாடாக இருக்கிறது. அது ஒரு மனிதனை பலவீனவனாக்கி அவனை உருக்குலைய செய்கிறது. இந்த பணம் என்னும் மாயையை நாம் இல்லாது செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. நம்மிடம் இருப்பதனை கொண்டு மகிழ்வுறுதலாகும்.

ஆம், அடுத்தவர் மீது எந்தவித சஞ்சலமுமின்றி அவரவர் வாழ்க்கை அவர்கள் விருப்பின்படி வாழட்டும். அடுத்தவரை போல் வாழாது நமக்கான பாதையை அமைத்து வாழும் சூழ்நிலையில் நாம் வாழும் போது இந்த பணம் கூட நமக்கு ஒரு அடிமைதான்.

இந்த பண நெருக்கடியினால் தற்கெலை செய்து கொண்ட விடயங்களை நாம் கண்டு கொண்டு கடந்து வந்துள்ளோம் என்பதில் ஐயமில்லை. மீதமிருக்கும் மனிதர்கள் நாம் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதிலே நான் மிகவும் விருப்பப்படுகிறேன்.

அடுத்து ஒரு வேலைத்தளத்தில் வரும் இடர்பாடுகளினால் தற்கொலை இங்கு, இந்த இடர்பாட்டினை யார் வேண்டுமானாலும் ஏற்படுத்தட்டும் நான் நானாக எந்த ஒரு பிரச்சினையையும் சாதாரணமாக கடந்து விடுவேன் என்னும் மனநிலையை உருவாக்கி கொள்ள வேண்டும்.

நாம் வேலை செய்யும் வேலைத்தளத்தில் மன உளைச்சலினை அடைந்தால் நாம் தனிமையாக இருந்து நமக்கு பிடித்த ஒரு உண்மையான நண்பருடன் பகிர்ந்து கொண்டாலே வாழ்க்கை ஒரு நிம்மதியை அடையும் எனலாம். பிரச்சினையை சந்திக்காத மனிதர்கள் இவ் உலகில் யாருமே இல்லை என்போம்.

நம் முன்னோர்களை எடுத்துக் கொண்டாலே அவர்கள் வரலாற்றில் செய்யாத தவறிற்கு பழி சுமத்தப்பட்டு அவமானப்பட்டு பின்னர் அவர்கள் அவர்களது வாழ்க்கையினை சாதாரணமாக்கி அவர்களிற்கு பிடித்தவிதமாய் வாழ்ந்து முடித்தும் உள்ளார்கள்.

வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் நல்லது கெட்டது அனைத்துமே நமக்கான பாடங்கள்தான். எனவே நாம் எதனையும் அவசரப்படாது எந்த தவறான முடிவுகளும் எடுக்காது நமக்கான பாடமாக எடுத்துக் கொண்டு கடந்து செல்லுதல் என்பதே யதார்த்தம் ஆகும். எதையும் சாதாரணமாக எடுக்கும் போது நம் வாழ்க்கை இலகுவாகி விடுகிறது.

அடுத்து திருமணமான பெண்கள் திருமண பந்தம் சரியாக அமையவில்லை என்று தற்கொலை செய்து கொள்கிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம் என்பதும் புரியவில்லை, காரணம் திருமணம் என்பது ஒரு சம்பிரயதாயத்தின்படி செய்து வைக்கும் ஒரு வைபவம். இந்த வைபத்தினால் ஒரு வேளை மனங்கள் ஒத்துப் போகாத சந்தர்ப்பங்களில் விவாகரத்தினை பெற்று சுயமாக வாழ கற்றுக் கொள்ளுதலே சிறந்த வழி.


பெண்களாக இருக்கட்டும் ஆண்களாகவும் இருக்கட்டும் இங்கு மனங்கள் பாதிக்கப்படும் என நினைந்து உயிர்களை மாய்த்துக் கொள்வதனை விட சிறந்தது தத்தமது பாதையினை ஒரு ஒழுங்கு முறைப்படுத்தி தங்களது சுயவிருப்பினையும் தனித்துவத்தினையும் ஆளுமையாக்கி வெற்றி பெறுவதாகும்.

இங்கு ஒரு வாழ்வியல் பிடித்து போகாது விட்டால் விலகி பிடித்த ஒரு வாழ்க்கையில் நம் பாதயையினை அமைத்துக் கொள்வது தான் சிறந்தது. மனிதன் உருவாக்கப்பட்டது வாழ்ந்து கொண்டாடி மகிழத்தானே தவிர இடையில் தற்கொலை என்னும் செயல் மூலம் வாழாது வாழ்வை தொலைத்துக் கொள்வதற்காக அல்ல.

மனிதன் முன்னேறவே படைக்கப்பட்டவன். சமூகம் பலதும் பேசட்டும்; சமூகத்தில் முரண்படாத மனிதர்கள் என்று யாரும் இல்லை. எனவே சமூகத்தின் பார்வையை நாம் எடுத்துக் கொண்டால் எந்த மனிதனும் தன் வாழ்க்கையினை வாழாது மாய்த்துக்கொள்வான்.

வாழ்க்கை என்பது நாம் வாழவேதானே தவிர, மூன்றாவது நபர் வாழ்வதற்காக அல்ல. தற்கொலை எண்ணம் வந்தாலே உங்கள் நண்பர்களிடம் மனம் திறந்து பேசுங்கள்; வாழ்க்கை இனிமையாக அமையும்.

தற்கொலைதான் வாழ்க்கையின் முடிவு என்றால் இன்று நானோ அல்லது நீங்களோ உருவாகி இருந்திருக்க மாட்டோம். ஆகவே நாம் சிந்திப்போம்; தற்கொலை என்னும் தவறான எண்ணம் வரும் போது பிடித்த விடயங்களில் நம் சிந்தனையை செலுத்துவோம். அவை நம்மை மாற்றம் பெற்று ஒரு புத்துணர்ச்சியினை தரும்.





## நிஜங்களைப் பேசியிருக்கும் நிருத்திகனின் 'உனக்கு மரணமில்லை' கவிதைத் தொகுப்பு



காலம் தன்னுடைய ஓட்டத்தில் ஒவ்வொரு ஆளுகைகளையும் நமக்குக் காட்டிக் கொண்டே செல்லும். இந்தச் சாமந்தர ஓட்டத்தில் கலைத்துறை சார்ந்து பலரும் தம்மை உருவாக்கியும், தாமாக உருவாகியும் முகிழ்கின்றமை நாம் அன்றாடம் கண்டு வருகிறோம்.

ஆனால், ஒரு மிகத் துயரமான சம்பவிப்போடு நடக்கும் சில சம்பவங்கள் நம்மை கதி கலங்க செய்வதுண்டு. அண்மிய நாட்களாக கவிதைத் துறை சார்ந்து சமூகவலைத் தளங்கள் வாயிலாக நன்கு அறியப்பட்ட வடமராச்சி மண்ணைச் சேர்ந்த சு. நிருத்திகன் மிகக் கூடுதலான கவிதைகளை நாளும் பொழுதும் எழுதிக் கொண்டு பல வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டிருந்தவர்.

எதிர்காலத்தில் தான் கவிதைத் தொகுதியியொன்றை வெளியிட வேண்டும் என்ற விருப்பில் இயங்கிக் கொண்டிருந்த கவிஞர் நிருத்திகன் கடந்த பெப்ரவரி ஏழாம் திகதி சடுதியான மரணத்தைச் சந்தித்தமை இற்றைவரை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத மிகப் பாரிய துயரை தந்திருக்கின்றது. இந்தத் துயரின் கனம் மிக ஆழமானது இன்னும் பலர் அதிலிருந்து விடுபடமுடியாத சூழலில் அமரர். சு. நிருத்திகனின் 31ம் நாள் நிறைவில் அவரின் விருப்பு அவரில்லா நிலையில் நிறைவேறியிருக்கிறது.

தனது கவிதைத் தொகுதிக்காக அவர் யாத்த பல கவிதைகளை சேகரித்து மிகக் காத்திரமான ஒரு பணியை செய்து வெளியீடு செய்திருக்கின்றது ஜீவநதி பதிப்பகம். உண்மையிலும் ஜீவநதி பிரதம ஆசிரியர் க. பரணீதரனின் முயற்சியினால் உருப்பெற்ற 'உனக்கு மரணமில்லை' என்ற சு. நிருத்திகனின் கவிதைத் தொகுதி இன்று எம் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த அற்புதமான பணியை எந்தவிதமான பிரதியுபகாரங்களையும் எதிர்பாராமல், ஒரு கவிஞனின் ஏக்கத்தை அவரில்லா வெளியில் செய்து தந்திருக்கும் ஜீவநதி பதிப்பகத்தின் பணி மிகச் சிறப்பான ஒன்றாகும்.

நிருத்திகனால் எழுதப்பட்ட 200 கவிதைகளை உள்ளிருத்தி அழகிய அட்டையையும் தாங்கி வந்திருக்கின்றது. இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அனைத்தையும் படிக்கின்ற போது நிருத்திகன் ஒரு சமூக இசைவாக்கம் கொண்டு இன, மத, மொழி, கடந்த ஒரு மனித நேயச் செயற்பாட்டாளராய் தனது வாழ்வியலை அமைத்துக் கொண்டார் என்பதை அறிய முடிகின்றது. உண்மையில் பல கவிதைகள் அவரது சமூகச் சிந்தனையைக் காட்டி நிற்பதைக் காணமுடிகிறது.

இயற்கை மீதும், தேசம் மீதும், மக்கள் மீதும் மிகுந்த பற்றுள்ளவராக அவர் வாழ்ந்திருக்கின்றார் என்பது புலனாகிறது. மிகச் சிறிய கவிதைகளாக பெரும்பாலான கவிதைகளை யாத்துள்ள இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'வல்லமை தாராயோ' கவிதையில்

'வஞ்சகம் நிறைந்தவனை உலகினிலே
நெஞ்சங்கள் யாவும் நேர்மைகள் இன்றி
மதநூல்கள் மீதிலே மகுடங்கள் சூடி
வந்திடும் கயவரை வகையாய் வெல்ல
முந் தி டு ம் முதல்வா வல்லமை தாராயோ'

என்ற கவிதை மிக அருமையாக உள்ளதைக் காணலாம்.

தொடர்ந்து 'சிற்பி' எனும் கவிதையில்

'வெற்றுக் கல்லாக இருந்த என்னை
உற்று நோக்கி கண்ட அவனே
செதுக்கி நின்றான் சிற்பியாக உளியினாலே
கையில் பட்ட பின்னர் நானே
பட்டை தீட்டிய வைரம் ஆனேன்'

இப்படியான பல வித்தியாசமான கவிதைகளை மிக அழகாக யாத்திருக்கின்றார். காதலைக் கவிதையாக யாத்திருக்கும் இவரது பாணி உண்மையில் ரசனை பூர்வமாக அமைந்திருக்கின்றது.

ஒவ்வொரு கவிதையிலும் வித்தியாசமான சிந்தனைகளை தத்ரூபமாகப் பதிவு செய்திருக்கின்றார்.

வட பகுதியில் வாழ்ந்து கொண்டே மலையக மக்களின் பாடுகளையும் பல கவிதைகளின் ஊடாக எழுதியிருப்பதன் வாயிலாக அவருடைய விரல்கள் கடந்த பார்வை உண்மையில் பிரமிக்க வைக்கின்றது.

'உனக்கு மரணமில்லை' என்ற தொகுதியின் தலைப்பே நிருத்திகன் என்ற கவிஞன் மறைந்தாலும் இந்தப் படைப்பின் ஊடாக அவர் இலக்கிய வெளியில் வாழப்போகின்றார் என்பதை கட்டியம் கூறி நிற்கிறது.

ஓர் இக்கட்டான சூழலில் வெளியாகி இருந்தாலும் ஓர் ஆளுமை மிகு மனிதனின் உள்ளே ஒளிந்திருந்த திறமைகளின் வெளிப்பாட்டிற்கு சாட்சியாக ஈந்தத் தொகுதி அமையும் என்பது வெளிப்படை. எதிர்கால கனவுகள் பலதையும் தனது கவிதைகள் பலவற்றினூடாக வெளிப்படுத்தியிருக்கும் நிருத்திகனது கவிதைகள் உண்மையில் அனைவராலும் வாசிக்கப்பட வேண்டியதென்பதை ஆணித்தரமாக கூறலாம்.

நூலின் அணிந்துரையை ஜீவநதி பிரதம ஆசிரியர் க. பரணீதரனும், பின்னட்டைக் குறிப்பை கலாநிதி கலாமணி அவர்களும், நிருத்திகனை முன்னீடாக நிறுத்திய செல்லக்குட்டி கணேசனின் கவிதையும் உள்ளிடங்கலாக வெளியாகி இருக்கும் இந்தத் தொகுதியை உருவாக்க உழைத்த அத்தனை பேரும் பாராட்டத்தக்கவர்களே.



# நகர்வலம்



# சுற்றாடலைப் பாதுகாக்கும் ஜனாதிபதியின் திட்டங்கள் பாராட்டுக்குரியவை

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

கொழும்பு நகரத்தை முதலாவது ஈரலிப்பு நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ வழங்கும் பங்களிப்புக்களை பாராட்ட வேண்டுமென சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். திஸ்ஸமகாராமையில் (04) இடம்பெற்ற மரம் நடுகை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

சுற்றாடலைப் பாதுகாக்கும் ஜனாதிபதியின் செயற்திட்டங்கள் பாராட்டுக்குரியன. இவ்வாறு செய்யாவிட்டால் முதுராஜவெலவிற்கு ஏற்பட்டுள்ள நிலைமை கொழும்பிலுள்ள ஈரலிப்பு நிலங்களுக்கும் ஏற்பட்டிருக்கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தகாலத்தில், நகரஅபிவிருத்தி அதிகார சபையினூடாக கொழும்பு நகரத்திற்கு அண்மையிலுள்ள சகல ஈரலிப்பு நிலங்களையும் பாதுகாத்து அழகுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தார்.இதனால்தான் உலகின் முதலாவது ரம்ஸா ஈரலிப்பு நகரமாக கொழும்பு நகரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றாடலை பாதுகாப்பது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். இதுபோன்றே பொது மக்களுக்கும் பொறுப்பு உள்ளது. நாட்டின் சகல பிரஜைகளுக்கும் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொறுப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் சுற்றாடல் தொடர்பில், அரசாங்கத்தை மாத்திரம் குறை கூறுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

யாராவது சுற்றாடலை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் அது பற்றி உரிய தரப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும். அப்போதுதான், சுற்றாடல் அழிவுகளைத் தடுப்பதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.



சாரணர் இயக்கம் முன்னெடுத்த ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நடும் தேசிய திட்டத்துடன் இணைந்ததாக, மாத்தறை மாவட்ட சாரணர் இயக்கம் எக்ஸஸ் லங்கா என்பன இணைந்து ஹக்மனையில் மரநடுகை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இதில் கலந்து கொண்ட சபாநாயகர், மஹிந்த யாப்பா அபேவர்தன மரக்கன்றொன்றை நடுவதை காணலாம்.

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சந்தேக நபர் ஒருவரை அநுராதபுரம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கடந்த சனிக்கிழமை இரவு அநுராதபுரம் தேவானம்பிய திஸ்ஸபுர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், இவர் கைதானார்.

கைது செய்யப்பட்டவர் 34 வயதுடைய திசாவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான இந்நபர், பணமில்லாததால் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காதி நீதிமன்றங்களை ஆதாரமாக கொண்ட அறிக்கை தயாரிப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளத்தில் அமைந்துள்ள சேன்ஜ் மனிதாபிமான நிறுவனம், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் கீழ் அமைந்துள்ள காதி நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை ஆதாரமாகக் கொண்ட "இன்சைட் த காஸி கோட்ஸ் ஒப் ஸ்ரீலங்கா" எனும் தொனிப்பொருளில் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் ஏற்புடமை பற்றியும் அதில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது பற்றியும் நாட்டில் பலரும் கருத்துக்களை வெளியிட்டு வரும் சந்தர்ப்பத்திலேயே, இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வெளியீட்டு வைபவமானது கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் கல்விமான்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடப்பட்ட இந்த அறிக்கை தொடரபாக சேன்ஜ் மனிதாபிமான நிறுவனம் கூறுகையில், கடந்த பல ஆண்டுகளாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் கீழ் அமையப்பெற்றுள்ள காதி நீதிமன்றங்களின் நடவடிக்கை தொடர்பில் முஸ்லிம் சமூகம் பலதரப்பட்ட கருத்துக்களை முன்வைத்தது.இருந்தபோதிலும் அவ்வாறான கருத்துக்கள் உரிய நேரத்தில் உரிய கொள்கை வகுப்பாளர்களிடமோ தீர்மானம் மேற்கொள்பவர்களிடமோ சரியான முறையில் சென்றடையில்லை. இது ஒரு குறையாகவே காணப்பட்டது.

இதை நிவர்த்தி செய்யும் முகமாக நாட்டில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் 14 மாவட்டங்களிலிருந்து ஆண்கள் பெண்கள் அடங்கலாக 268 பேரிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டது. அத்துடன் 10 முக்கியஸ்தர்கள் மற்றும் இரண்டு குழுக்களிடமிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில் அனுபவமிக்க சட்டத்தரணிகள் குழுவொன்றின் மூலம் இந்த ஆய்வு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பிரதிகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்விற்கு வருகை தந்த பிரமுகர்களுக்கும் இது வழங்கப்பட்டது.இதில் அடங்கியுள்ள பரிந்துரைகளை, அரச தரப்பில் தீர்மானம் மேற்கொள்ளும் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.



அநுராதபுரம் தம்புத்தேகம ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு பிரிவை, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் திறந்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படம். (படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)




அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலயத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பாராட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (05) வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில், விஷேட அதிதிகளாக கலந்து கொண்ட அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.பி.எஸ். குமாரசிறி, ரம்பாவ பிரதேச சபை தலைவர் சாலிவு தையுவு உள்ளிட்ட பிரமுகர்களை அதிபர் மற்றும் மாணவர்கள் மலர் கொத்து வழங்கி அழைத்துச் சென்றனர். மாணவி ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பரிசில் வழங்குவதை காணலாம்.
(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## அநுராதபுரம் மாவட்டத்தில் சோளச் செய்கையை அதிகரிக்க ஆலோசனை

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை சிறு போகத்தின் போது 35 வீத சோள உற்பத்தி செய்கை பண்ணுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு தேவையான சோளத்தை உள் நாட்டிலேயே உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ளும் நோக்கில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் சோளச் செய்கை மேற்கொள்ளப்படும்.

விவசாயக் கிணறுகள் அமையப் பெற்றுள்ள இடங்கள் மற்றும் சோளப் பயிர் வளர்ச்சிக்கு பொருத்தமான இடங்களை மையப்படுத்தி இச் செய்கை மேற் கொள்ளப்படும். இதற்கு தேவையான தொழில் நுட்ப உதவிகள் மற்றும் ஆலோசனைகள் அரசாங்கத்தால், பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் சோளப் பயிர்களில் ஏற்பட்ட படைப்புழு தாக்கத்தினால் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காமல் போனது. ஆனால் இம்முறை அதன் தாக்கம் குறைவடைந்துள்ள நிலையில், சோளப் பயிரில் அதிக உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் கொண்டுள்ளனர். அத்துடன் அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை சிறு போகத்தின் போது சில இடங்களில் நெல்லுக்கு பதிலாக, மேலதிக பயிர் உற்பத்திக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந் நிலையில் உளுந்து, எள்ளு, கௌப்பி, பயறு போன்ற தானியங்களை உற்பத்தி செய்வதற்கும் விவசாயிகள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

## வீதி விபத்தில் உயர்தர மாணவன் மரணம்

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம் ஹிதோகம பகுதியில் உழவு இயந்திரம் ஒன்றுடன், மோட்டார் சைக்கிள் மோதியதில், உயர்தர வகுப்பு மாணவன் உயிரிழந்தார். இத்துயரச் சம்பவம் (04) இடம்பெற்றதாக ஹிதோகம பொலிசார் தெரிவித்தனர். ஹிதோகம பொலிஸ் பிரிவின் எட்டாவது அலை பாவக்குளம் பகுதியில்,இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் அநுராதபுரம் பாலாடிக் குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 17 வயதுடைய ராஜபக்ஷகே சமுத் ரஸ்மிக என்ற மாணவரே உயிரிழந்தார்.

இம்மாணவன் அநுராதபுரம் பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி பயிலும் மாணவராவார். சடலம் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம், உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.விபத்து சம்பவத்துடன் தொடர்புடய உழவு இயந்திரத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

## அநுராதபுரம் பகுதியில் விபத்துக்கள்: இருவர் படுகாயம்

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம் பொலிஸ் வலயத்தின் இரு பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற, இரு வெவ்வேறு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக வலய போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்துக்கள் கடந்த (01) இடம்பெற்றதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் கலன்பிந்துனுவெவ பொலிஸ் பிரிவின் கெகிராவ கலன்பிந்துனுவெவ விதியில் லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் பிரதமர் பாதுகாப்பு பிரிவில் உள்ள விசேட பொலிஸ் அதிரடிப்படை உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமைந்தார். மற்றும் பரசன்கஸ்வெவ பொலிஸ் பிரிவின் ரம்பாவ வீதியில் கார் ஒன்றுடன் கடற்படை வீரர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் கடற்படை வீரர் பலத்த காயமடைந்தமை தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த விசேட அதிரடிப்படை உத்தியோகத்தரும் கடற்படை வீரரும் தற்சமயம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய கார் மற்றும் லொறியின் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பரசன்கஸ்வெவ மற்றும் கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆசிரியரின் வீட்டை உடைத்து திருட்டு

(புத்தளம் தினகரன் விசேட நிருபர்)

பாடசாலை ஆசிரியை ஒருவரின் வீட்டை உடைத்து தங்க நகை, பணம் என்பவற்றைத் திருடிய சம்பவம் தொடர்பாக சாலியவெவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாலியவெவ நீலபெம்ப பகுதியில் வசிக்கும் ஆசிரியை ஒருவரின் வீட்டிலேயே, இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகையும், 10 ஆயிரம் பணமும் திருடப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவீன முறையிலான பற்சிகிச்சை

## வைத்தியர்களுக்கு இரு நாள் விசேட கருத்தரங்கு





நவீன அணுகுமுறைகளுடன் பற்சிகிச்சைகளை மேற்கொள்வது தொடர்பான இரண்டு நாட்கள் கருத்தரங்கு, ஒரம் தனியார் நிறுவன ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

டெக்னோ டென்ட் அகடமியின் அனுசரணையில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கடந்த வார இறுதியில் இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது. பல் மறுசீரமைப்பு தொடர்பான மருத்துவ நிபுணர் சிறிமெவன் சமரக்கோன், பல் மறுசீரமைப்பு மருத்துவர், சானக்க நுவன் திஸாநாயக்க, பல் மறுசீரமைப்பு மருத்துவர் உபலா மல்வத்த ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் 30 பல் வைத்தியர்கள் பங்குபற்றினர். இக்கருத்தரங்கின் நிறைவு விழா ஒரம் தனியார் நிறுவனத்தின் குழுமத் தலைவர் ஜாபிர் சாலி, ஒரம் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் முஸ்தாக் ஜாபிர் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மருத்துவரொருவருக்கு குழுமத் தலைவர் ஜாபிர் சாலி, சான்றிதழ் வழங்குவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

**(தெஹிவளை கல்ஹிசை விஷேட நிருபர்)**

## முதலையின் பிடியிலிருந்து முதியவர் தப்பினார்

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மல்வத்து ஒய ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த வேளையில், முதலையின் பிடிக்குள்ளான 81 வயது வயோதிபர் அதிஷ்டவசமாக காப்பாற்றப்பட்டார். குளித்துக் கொண்டிருந்த 81 வயது முதியவரை முதலை பிடித்து இழுத்த போது, அந்த முதியவர் அபயக் குரல் எழுப்பினார்.

இதைக் கேட்ட அருகில் நின்ற ஒரு இளைஞன், திடீரென முதலையில் பாய்ந்து, அதன் வயிற்றைத் தடவினார்.

இதையடுத்தே முதலை பிடியை விட்டு தப்பிச் சென்றது. முதலையின் பிடிக்குள்ளான 81 வயது வயோதிபர் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# சர்வதேச செய்திகள்

## நைஜீரிய சிறையில் இருந்து 1,800 கைதிகள் தப்பியோட்டம்



நைஜீரிய சிறைச்சாலை ஒன்றில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அந்த சிறைச்சாலையில் இருந்த 1,800க்கும் அதிகமான கைதிகள் தப்பியோடியுள்ளனர்.

தென்கிழக்கு நகரான ஒவேரியில் உள்ள இந்த சிறைச்சாலையின் நிர்வாக பிரிவில் குண்டுகளை வெடிக்கச்செய்து சிறைச்சாலை வளாகத்திற்குள் தாக்குதல்தாரிகள் நுழைந்துள்ளனர்.

இதில் தப்பிச்சென்ற ஆறு கைதிகள் மீண்டும் சிறைச்சாலைக்கே திரும்பி இருப்பதோடு 35 கைதிகள் தப்பிச் செல்ல மறுத்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட பிரிவினைவாதக் குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் குற்றம்சாட்டியுள்ளனர். எனினும் அந்தக் குழு இதனை மறுத்துள்ளது.

இதன்போது 1,844 கைதிகள் தப்பிச்சென்றிருப்பதாக நைஜீரிய சீர்திருத்தச் சேவை உறுதி செய்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை பஸ் வண்டிகள் மற்றும் டிரக் வண்டிகளில் ஆயுதங்களுடன் வந்த நபர்கள் ஒவேரி தடுப்புக்காவல் மையத்தை ஆக்கிரமித்தனர் என்று அந்த சேவை குறிப்பிட்டுள்ளது.

இந்தசம்பவம் இடம்பெற்ற இமோ மாநிலத்தில் மத்திய அரசு மற்றும் பழங்குடி இக்போ மக்களுக்கு இடையில் முறுகள் இருந்து வரும் நிலையில் அங்கு பிரிவினைவாத குழுக்கள் தீவிரமான இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உம்ரா யாத்திரைக்கு நோயெதிர்ப்பு தேவை



கொரோனா தொற்றுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றவர்கள் மாத்திரமே முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தில் உம்ரா வழிபாட்டில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்கள் என்று சவூதி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதில் மூன்று பிரிவுகளைச் சேர்ந்தோர் நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இரு முறை தடுப்பு மருந்தை பெற்றுக்கொண்டவர்கள், குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் முதல் தடுப்பு மருந்தை பெற்றவர்கள் மற்றும் நோய்த் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களாவர்.

இந்த வகைப்படுத்தலுக்கு உட்பட்டவர்கள் மாத்திரமே உம்ரா வழிபாட்டுக்கும் அதேபோன்று மக்கா பெரிய பள்ளிவாசலில் தொழுவதற்கும் அனுமதிக்கப்படுவார்கள் என்று ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் ரமழான் மாதத்தில் பெரிய பள்ளிவாசலுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும் என்று அது குறிப்பிட்டுள்ளது. மதீனா நகரில் உள்ள அல் மஸ்ஜித் அன் நபவி பள்ளிவாசலுக்கும் இந்தக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் 393,000க்கும் அதிகமான கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 6,700 பேர் உயிரிழந்துள்ளனர்.

## டுபாயில் நிர்வாணமாக படம்பிடித்தவர்கள் கைது



டுபாயில் வெளிப்பிரதேசத்தில் நிர்வாண புகைப்படம் எடுத்துக் கொண்ட சம்பவத்தில் பொது இடத்தில் ஒழுக்கக்கேடாக நடந்துகொண்ட குற்றச்சாட்டில் குழு ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடியோ காட்சிகள் இணையதளத்தில் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்டிருந்தது. அதில் மாடி முகப்பில் பெண்கள் நிர்வாணமாக காட்சி அளித்திருந்தனர்.

இதனை அடுத்தே உள்ளூர் பொலிஸார் செயற்பட்டு இவர்களை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பதினொரு உக்ரைனிய பெண்கள் இருப்பதாக உக்ரைனிய தூதரகம் உறுதி செய்துள்ளது. இதில் ரஷ்ய நாட்டவர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

டுபாயில் பொது இடத்தில் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்வதற்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை மற்றும் 5,000 திர்ஹம் அபராதம் விதிக்க முடியும். இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கு இதனை விடவும் கடுமையான தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் பெரும்பாலான சட்டங்கள் சரியா சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு ஓரினச்சேர்க்க உறவுகள் மற்றும் இதுபோன்ற குற்றங்களில் கடந்த காலங்களிலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# உலகில் கொரோனா உயிரிழப்பு மூன்று மில்லியனை தாண்டியது



கொரோனா தொற்றினால் உலகெங்கும் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை நேற்று 3 மில்லியனைத் தாண்டியதாக ரோய்ட்டர்ஸ் தரவுகள் காட்டுகின்றன. இந்த வைரஸ் பரவல் பல நாடுகளிலும் மீண்டும் அதிகரித்து உலகெங்கும் தடுப்பு மருந்து வழங்குவதில் சவால் இருந்துவரும் நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியா மற்றும் பிரேசிலில் கொவிட்–19 உயிரிழப்பு மீண்டும் அதிகரித்துள்ளது. பிரிட்டன் மற்றும் தென்னாபிரிக்காவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் திரிபு மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது நோய் பரவல் அதிகரிப்புக்கு காரணம் என்று சுகாதார தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

ரோய்ட்டர்ஸ் தரவுகளின்படி, கொரோனா தொற்று உயிரிழப்பு எண்ணிக்கை 2 மில்லியனை எட்டுவதற்கு ஓர் ஆண்டு மேல் காலம் எடுத்துக்கொண்ட நிலையில் அது 3 மில்லியனை எட்ட சுமார் மூன்று மாதங்களே எடுத்துக்கொண்டுள்ளது.

தினசரி புதிய உயிரிழப்பு எண்ணிக்கையில் பிரேசில் முன்னிலை பெற்றிருப்பதோடு ஒவ்வொரு நாளும் இடம்பெறும் ஒவ்வொரு நான்கு உயிரிழப்புகளில் ஒன்று பிரேசிலில் பதிவாகிறது.

பிரேசிலில் மருத்துவ கட்டமைப்பு நிலைகுலையும் மிக ஆபத்தான சூழலில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.


மறுபுறம் இந்தியாவில் கடந்த திங்கட்கிழமை சாதனை எண்ணிக்கையாக கொரோன தொற்று சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அமெரிக்காவுக்கு அடுத்து ஒரே நாளில் 100,000 அதிகமான புதிய தொற்றுச் சம்பவங்கள் பதிவான நாடாக இது இடம்பிடித்துள்ளது.

இந்தியாவில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலமான மஹாராஷ்ட்ராவில் வணிக வளாகங்கள், திரையரங்குகள், மதுபான விடுதிகள், உணவகங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மூடப்பட்டிருப்பதோடு மருத்துவமனைகளில் நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர்.

51 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய பிராந்தியத்தில் சுமார் 1.1 மில்லியன் மொத்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இதில் பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜெர்மனியில் 60 வீத உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

எந்த ஒரு நாட்டை விடவும் அதிக உயிரிழப்பாக அமெரிக்காவில் 550,000 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். இது உலகெங்கும் பதிவான அனைத்து கொரோனா தொற்று உயிரிழப்புகளில் 19 வீதமாக உள்ளது. கடந்த மூன்று வாரங்களில் தொற்றுச் சம்பவங்கள் அதிகரித்தபோதும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் விரைவான தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் உயிரிழப்புகளை தவிர்க்கும் என்று சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர். அமெரிக்க மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் ஒரு முறையேனும் தடுப்பு மருந்தை பெற்றுள்ளனர். இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை உலக மக்கள் தொகையில் 4.75 வீதமான குறைந்தது 370.3 மில்லியன் மக்கள் ஒரு முறையேனும் தடுப்பூசியை பெற்றிருப்பதாக அது பற்றிய தரவுகளை வெளியிடும் அமைப்பு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

## ஜோர்தான் அரச குடும்ப பதற்ற நிலை தணிந்தது



வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜோர்தானின் முன்னாள் முடிக்குரிய இளவரசர் ஹம்சா பின் ஹுஸைன் மன்னர் அப்துல்லாஹ்வுக்கு தனது விசுவாசத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயன்ற குற்றச்சாட்டிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் 41 வயதான இளவரசர் ஹம்சா, அரசியலமைப்புக்கு தனது உறுதியை வெளிப்படுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

முன்னெப்போதும் ஏற்படாத இந்த பதற்ற நிலைக்கு தீர்வு காண மன்னர் தனது சிற்றப்பாவான இளவரசர் ஹசனின் உதவியை நாடியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சதிவேலையில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை இளவரசர் ஹம்சா நிராகரித்துள்ளார்.

அரச மாளிகையில் இருந்து கையெழுத்திடப்பட்டு கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட கடிதத்தில், இளவரசர் ஹம்சா, 'மாட்சிமை பொருந்திய மன்னருடன் நான் கைகோர்த்துள்ளேன். ஜோர்தானின் அன்புக்குரிய ஹாஷிமித் இராட்சியத்தின் அரசியலமைப்பில் தொடர்ந்து உறுதியாக இருப்பேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மன்னர் அப்துல்லாஹ்வின் ஒன்றுவிட்ட சகோதரரான இளவரசர் ஹம்சா முடிக்குரிய இளவரசராக இருந்து வந்த நிலையில் அந்த அந்தஸ்தில் இருந்து அவர் நீக்கப்பட்டு மன்னரின் மகன் முடிக்குரிய இளவரசராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் ஆட்சி அமைக்க நெதன்யாகுவுக்கு சந்தர்ப்பம்



இஸ்ரேலின் அண்மைய தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில் புதிய அரசு ஒன்றை அமைக்கும் வாய்ப்பை பெஞ்ஜமின் நெதன்யாகுவிடம் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இஸ்ரேலின் இடைக்கால பிரதமராகவும் நீண்ட கால தலைவராகவும் இருக்கும் நெதன்யாகு, கூட்டணி அரசொன்றை அமைப்பதற்கு பாராளுமன்றத்தில் அதிக எம்.பிக்களின் ஆதரவை பெற்றவராக உள்ளார்.

எனினும் கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் நெதன்யாகு அல்லது எந்த ஒரு எதிர்க்கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கு போதுமான பெரும்பான்மை கிடைக்கவில்லை.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற தேர்தல் இஸ்ரேலில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தலாக இருந்தது.

இந்நிலையில் நெதன்யாகு புதிய அரசு ஒன்றை அமைக்க தவறும் பட்சத்தில் அந்த வாய்ப்பு மற்றொருவருக்கு வழங்கப்படும்.

நெதன்யாகுவின் தீவிர வலதுசாரிக் கட்சி கடந்த தேர்தலில் அதிகபட்மாக 52 எம்.பிக்களின் ஆதரவை வென்றிருப்பதோடு இது பிரதான எதிர்க்கட்சி தலைவரான யெயிர் லபிட்டின் மைய இடதுசாரி யெஷ் அடிட் கட்சியை விட ஏழு இடங்கள் அதிகமாகும்.

## ஈரான் அணு பேச்சில் அமெரிக்கா பங்கேற்பு



ஈரான் அணு உடன்படிக்கை தொடர்பான வியன்னா பேச்சுவார்த்தையில் அமெரிக்கா பங்கேற்கவுள்ளது. அந்த உடன்படிக்கையில் இருந்து 2018 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முன்னாள் டிரம்ப் நிர்வாகம் விலகிக்கொண்டது.

இந்த உடன்படிக்கைக்கு மீண்டும் திரும்புவதற்கு ஜனாதிபதி ஜோ பைடன் விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

எனினும் ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளை தளர்த்தி இந்த உடன்படிக்கையின் கடப்பாடுகளுக்கு ஈரானை திரும்பச் செய்யும் முயற்சியில் உடன்படிக்கையில் உள்ள ஏனைய நாடுகள் முயற்சித்து வருகின்றன.

தடைகள் நீக்கப்படும் வரை அமெரிக்காவை நேருக்கு நேர் சந்திப்பதில்லை என்று ஈரான் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் ஈரான் மற்றும் உடன்படிக்கையில் நீடிக்கும் சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் பிரிட்டன் பங்கேற்கும் இடத்தில் இருந்தும் வேறு ஓர் இடத்தில் இருந்தே அமெரிக்க அதிகாரிகள் இந்த சந்திப்பில் பங்கேற்கின்றனர்.

'எமக்கு முன்னால் இருக்கும் சவாலின் அளவை எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது' என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் நெட் பிரைஸ் தெரிவித்தார்.

## இஸ்ரேலிய இராணுவத்தால் பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை சோதனைச் சாவடி ஒன்றில் தம்மை மோதவந்ததாக குற்றம் சாட்டி கார் வண்டியில் வந்த பலஸ்தீனர் ஒருவரை இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். எனினும் அந்தக் காரில் இருந்த கொல்லப்பட்ட ஆடவரின் மனைவியின் கூற்று இந்தக் குற்றசாட்டுக்கு முரணாக உள்ளது.

படையினரை நோக்கி இந்த வாகனம் மோதும் வகையில் வந்ததை அடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த இந்த சம்பவத்தில் 42 வயதான ஒசாமா மன்சூர் என்பவர் கொல்லப்பட்டதோடு அவரது மனைவி காயமடைந்தார்.

இது பற்றி கொல்லப்பட்டவரின் மனைவி பலஸ்தீன தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், “அவர்கள் காரை நிறுத்தும்படி கூறியபோது அதனை நிறுத்தி விட்டு நாம் அவர்களிடம் சென்றோம். பின்னர் எம்மை பார்த்த அவர்கள் செல்லும்படி கூறினார்கள். நாம் காருக்கு திரும்பி நகர்ந்தபோது அனைவரும் எம்மை நோக்கி சுட ஆரம்பித்தார்கள்” என்று குறிப்பிட்டார்.

## கொரோனா கட்டுப்பாட்டை மீறிய ஆடவர் தண்டனையால் மரணம்



பிலிப்பைன்ஸில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியதற்காக பொலிஸார் 300 தடவை தோப்புக்கரணம் போடுவது போன்ற தண்டனை வழங்கியதால் ஆடவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கவிட் மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு நேரத்தில் தண்ணீர் வாங்கச் சென்றபோது டரென் மனோக் பனரடொன்டோ என்ற ஆடவர் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.

அடுத்த நாள் மயங்கி விழுந்த அவர் பின்னர் உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த கவிட் மாகாணத்தில் தற்போது கடுமையான கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு உடல் ரீதியில் தண்டனை அளிக்க முடியாது என்றும் அதிகாரிகளால் அறிவுறுத்தல் விடுக்க மாத்திரமே முடியும் என்றும் ட்ரியஸ் நகர பொலிஸ் தலைவர் மார்லோ சொலேரோ தெரிவித்துள்ளார்.

எனினும் ஊரடங்குச் சட்டத்தை மீறிய பனரடொன்டோவுக்கு தோப்புக்கரணம் போன்ற உடற்பயிற்சியை பொலிஸார் தண்டனையாக வழங்கி இருப்பதாக அவரது உறவினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். வெள்ளிக்கிழமை காலையில் உடல் வருத்தத்துடன் பனரடொன்டோ வீட்டுக்கு வந்ததாக அவரது சகோதரர் தெரிவித்துள்ளார். நகர முடியாது வேதனையில் இருந்த அவர் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

# மேல்மாகாண மௌலவிமார்களுக்கு ஒரு நாள் செயலமர்வு







**தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்**

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் தெஹிவளை ஜம்ஆப் பள்ளிவாசலும் இணைந்து, மேல் மாகாண மௌலவிமார்களுக்கு முழுநாள் கருத்தரங்கை நடாத்தியது.

இக்கருத்தரங்கு (04) தெஹவளை முகையிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந் நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.பி.ஏ அஷ்ரப் தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் பேராசிரியர் ருஸ்தி பாபு, அப்துல் ஹமீட் பாஜி, பள்ளிவாசல்கள் பொறுப்பான வக்பு சபையின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன், ஜம்மியத்துல் உலமா பதில் தலைவர் அஷ்ஷேக் அப்துல் ஹாலிக், முஸ்லிம் சமய திணைக்களத்தின் நீதி அலுவலகர் சட்டத்தரணி எம். சுரைஹா , பிரதமரின் முஸ்லிம் சமய விவகார ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேக் ஹசன் மௌலானா, சப்பரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தரும் மருதானை மாளிகாகந்தை பிரதான விகாராதிபதியுமான பேராசிரியர் கும்புருகமுவ வஜிர தேரோவும் கலந்து கொண்டனர். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மௌலவிகள் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தர் கும்புருகமுவ வஜிர தேரா் உரையாற்றுகையில்

பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும் நம்நாட்டில் இந்து, இஸ்லாம்,கிறிஸ்தவ மக்களும் வாழ்கின்றனர். பல்லினத்தவர் வாழும் எமது நாட்டில் ஒருவருக்கொருவர் பரஸ்பர இணக்கத்துடன் வாழ வேண்டும். ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தில், ஒரு பார்வை ஏற்பட்டுள்ளது. ஒரு சிலரின் சில செயற்பாடுகளை ஒட்டுமொத்த சமூகத்தின் தலையில் திணிக்கவோ,சுமத்தவோ முடியாது. பரஸ்பர புரிந்துணர்வுகளால்தான் இவற்றைக் களைய முடியும்.

மருதானை மாளிகாகந்தையிலுள்ள எனது விகாரையில் முஸ்லிம்களுக்கு நோன்பு திறப்பதற்கு வசதியளித்தேன். அதேபோன்று முன்னாள் அமைச்சர் மறைந்த எம்.எச். முஹம்மத், மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் பிரதான பௌத்த மத குருமார்களை அழைத்து காலையுணவு வழங்கினார் என்றார்.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## பதவி வெற்றிடம்

## தொழில்நுட்ப அலுவலர், நில அளவையாளர், உதவி நில அளவையாளர், நில அளவையியல் உதவியாளர் , ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் வரைவாளர் பதவிகள்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

### 01. தொழிநுட்ப அலுவலகர்கள் (சிவில்)

**சம்பள அளவுத்திட்டம் :** MA 2-2(B) – ரூ.33,660 - 350x6- 600x14 – 44,160/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவம்**

மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் தொழிநுட்பத் துறையில் (சிவில்) தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் (NAITA) நான்கு வருடங்கள் முழுநேரமாக பொறியியல் துறையில் பயிலுநர் விசேட தேசிய டிப்ளோமா சான்றிதல் பெற்றிருத்தல் (NDES)

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தொழிநுட்பத்துறையில் (சிவில்) டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (SLIATE) உயர் தேசிய டிப்ளோமா (Civil) அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் (NVQ) நிலை - 6 க்கு சமமான தகுதி.

### 02. நில அளவையாளர்

**சம்பள அளவுத்திட்டம் :** MM 1-1 – ரூ.53,175 – 10 x 1,375-15 x 1,910 - 95,575/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவம்**

இலங்கை அளவு கணக்கெடுப்பாளர்கள் நிறுவனத்தின் (IQSSL) பட்டதாரி உறுப்பினர்

அல்லது

இலங்கை அளவு கணக்கெடுப்பு துறையில் (IQSSL) பட்டம் பெற்ற பட்டதாரி

அல்லது

IQSSL நிறுவனத்துடன் சரியான பரிமாற்ற ஒப்பந்ததுடன் சர்வதேச அளவு கணக்கெடுக்கும் தொழில்முறை நிறுவனத்தின் வாக்களிக்கும் உரிமைகளுடைய முழுநேர உறுப்பினர்

மற்றும்

IQSSL நிறுவனத்தினால் ஆல் அங்கீகரிக்கப்பட்ட 120 க்கும் குறையாத நிறைப்பெறுமான (Credits) அளவு கணக்கெடுப்பு துறையில் ஒரு பட்டம்.

### 03. உதவி நில அளவையாளர்

**சம்பள அளவுத்திட்டம் :** MA 2-2(B) – ரூ.33,660 - 350x6- 600x14 – 44,160/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவம்**

இலங்கை அளவு கணக்கெடுப்பாளர்கள் நிறுவனதின் (IQSSL) தொழில்நுட்ப உறுப்பினர்

அல்லது

IQSSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட 90 க்கும் குறையாத நிறைப்பெறுமான (Credits) அளவு கணக்கெடுப்பு துறையில் பட்டம்.

அல்லது

1990 ஆம் ஆண்டின் 20 இலக்கத்தில் அமைந்த மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் நிலை VII இன் அளவு கணக்கெடுப்புக்கான தகுதி.

அல்லது

IQSSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட 60 க்கும் குறையாத நிறைப்பெறுமான (Credits) அளவு கணக்கெடுப்பு துறையில் உயர் டிப்ளோமா பட்டத்துடன் சர்வதேச அளவு கணக்கெடுப்பு தொழில்முறை நிறுவனத்தின் வாக்களிக்கும் உரிமைகளுடன் முழுநேர உறுப்பினர்

அல்லது

1990 ஆம் ஆண்டின் 20 இலக்கத்தில் அமைந்த மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் நிலை VI இன் அளவு கணக்கெடுப்புக்கான தகுதி

### 04. நில அளவையியல் உதவியாளர்

**சம்பள அளவுத்திட்டம் :** MA 2-2(A) – ரூ. 30,310 – 300x18 – 35,710/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் தேவைப்படும் சேவை**

1990 ஆம் ஆண்டின் 20 இலக்கத்தில் அமைந்த மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் நிலை IV இன் அளவோடு IQSSL இன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்.

அல்லது

IQSSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட 30 க்கும் நிறைப்பெறுமான (Credits) வரவுகளுடன் அளவு கணக்கெடுப்பு துறையில் டிப்ளோமா பட்டம்.

அல்லது

1990 ஆம் ஆண்டின் 20 இலக்கத்தில் அமைந்த மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் நிலை V இன் அளவு கணக்கெடுப்புக்கான தகுதி.

அல்லது

IQSSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட 30 க்கும் குயைாத நிறைப்பெறுமான (Credits) அளவு கணக்கெடுப்பு துறையில் முதுகலை பட்டத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் நிலை VI இல் தகுதி

### 05. ஆராய்ச்சி உதவியாளர்

**சம்பள அளவுத்திட்டம் :** MA (1-2) – ரூ.27,910 – 300x14 – 32,110/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் தேவைப்படும் சேவை**

க.பொ.த சாதாரன தரத்தில் 04 பாடங்களில் திறமை சித்தியுடன் தாய்மொழி மற்றும் கணித பாடம் உள்ளடங்களாக ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த உயர் தரத்தில் இசாயனவியல் மற்றும் ஒருங்கிணைந்த கணிதம் / இயற்பியலில் பாடங்களில் இரண்டு (02) திறமைச் சித்தியுடன் (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 03 ஆண்டுகள் குறித்த துறையில் அனுபவம்.

### 06. வரைவாளர்

**சம்பள அளவுத்திட்டம் :** MA 2-2(A) – ரூ.30,310 – 300x18 – 35,710/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் தேவைப்படும் சேவை**

க.பொ.த சாதாரன தரத்தில் ஒரே அமர்வில் தாய்மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருப்ப துடன் க.பொ.த உயர் தரத்தில் 03 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

அரச தொழில்நுட்பக் கல்லூரியல் வரைவாளரருக்கான பயிற்சி பெற்றவர் / பொறியியல் வரைவாளரருக்கான தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உரிய துறையில் ஆட்டோகேட் வரைவதில் 03 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்.

**வயதெல்லை** - 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேட்படாதவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்** - நியமனம் ஒப்பந்த அடிப்படையில் காணப்படும்

**வேறு அனுகூலங்கள்** - ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 08% ஊழியர்களின் பங்களிப்புடன் அதிகார சபையினால் 12% பங்களிப்பு பெற்றுக்கொடுக்கப்படும் என்பதுடன் அதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பும் வழங்கப்படும்.

**முக்கியமானவை :**

- விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான உரிய விண்ணப்பப்படிவத்தினை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் **rda.gov.lk** எனும் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க வேண்டும்.
- குறித்த விண்ணப்ப படிவத்துடன் கல்விச் மற்றும் தொழில்முறை சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள் ஏனைய சான்றிதழ்பளின் புகைப்பட நகல் பிரதகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- உறவினரல்லாத நடுவர்கள் இருவரின் பெயர்கள் உட்பட அவர்களின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் அனைத்து விடயங்களும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
- இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள், நேர்த்தியாக தயாரிக்கப்படாத முழுமையற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.
- குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு **2021.04.21** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக பணிப்பாளர் (நிர்வாகம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாவது மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.
- அரச திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் தற்போது சேவையிலுள்ளவர்கள் அதிகாரிகள் அந்தந்த அமைப்பின் தலைவர் மூலம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

'மகநெகும மஹமெதுர', இல-216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை

மின்னஞ்சல் - **headoffice198621@gmail.com**

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## கேள்வி மனுக்கோரல்

### இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் துப்புரவு செய்தல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் – 2021 / 2022

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் துப்புரவு செய்தல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்யப்படட்ட தொழில் நிறுவனங்களிடமிருந்து இத்தால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும் நிறுவனம் இச்சேவை வழங்கலில் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தை கொண்டிருப்பதோடு அவற்றுள் குறைந்தது இரண்டு (02) வருட அனுபவம் இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகமொன்றிற்கு சேவை வழங்கியதாக இருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 28.04.2021 அன்று பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். மேலதிக விபரங்களை பல்கலைக்கழகத்தின் http://www.seu.ac.lk எனும் வெப்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**பல்கலைக்கழக பூங்கா**
**ஒலுவில்**
**07.04.2021**

---

## கேள்விகோரல் அழைப்பு

**மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத்துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

**சப்ரகமுவ மாகாண சபை**

2021 ஆம் ஆண்டிற்காக சப்ரகமுவ மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு தொழில்நுட்ப ஆடைகள் மற்றும் விளையாட்டு பொது ஆடைகள் வழங்குவதற்கு தகைமையுள்ள மற்றும் திறமையுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண வீதி, அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத்துறை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக்குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்கள் www.sg.gov.lk இணையதளத்திற்கு உள்ள நிறுவனத்திற்குள் சென்று அங்குள்ள மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு இணையதள பக்கத்தில் அல்லது https://f.ls/wNDba Link இற்குள் பிரவேசித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப்பெறுகைக்குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை**
**புதிய நகரம், இரத்தினபுரி**
**045-2223154**

2021 ஏப்ரல் 07ஆம் திகதி

---

## ஏசியன் டயர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்டுடன் சியட் கெளனி ரேடியல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் ஐ ஒன்றிணைத்தல்

## பகிரங்க அறிவித்தல்

சட்டத்தின் 242 (1) ஆம் பிரிவின் விதிகளின் கீழ் ஏசியன் டயர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவு இல.PV89355) உடன் சியட் கெளனி ரேடியல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் ஐ ஒன்றிணைப்பதாக 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 244ஆம் பிரிவின் (3) (b) உபபிரிவின் விதிகளின் கீழான பகிரங்க அறிவித்தல் 2021 பெப்ரவரி 24ஆம் திகதிய தினமின, தினகரன், டெயிலிநியூஸ் கொழும்பு பிரசுரம் மற்றும் 2021 மார்ச் 26ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் மேற்படி ஏசியன் டயர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் உடன் சியட் கெளனி ரேடியல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் உடனான உத்தேச ஒன்றிணைப்பு பற்றிய முன்னைய அறிவித்தல் பற்றியது. ஒன்றிணைப்பானது தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது அத்துடன் ஒன்றிணைப்பு சான்றிதழில் காட்டப்பட்டுள்ள திகதி 2021 மார்ச் 31ஆம் திகதி ஒன்றிணைப்பு திகதியின் அமுலாகும். சியட் கெளனி ரேடியல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளரின் கட்டளைப் பிரகாரம்.

**P.R.கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**
**2021 ஏப்ரல் 05ஆம் திகதியில்**

---

## விலை கோரலுக்கான அழைப்பு

### மேல் மாகாண சபை

# பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிராந்தியப் பொறியியலாளரின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(ii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்தப் பெறுகையின் பெறுமதி (VAT மற்றும் ஏனைய வரிகள் இல்லாமல்) 50 மில்லியனுக்குக் குறைவாக இருப்பதனால் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

   II. 03/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், ''அரசுரிமை தொழில்முயற்சி (SOE) விலைகளைக் கோருகையில் ஐந்து வீத (5%) முன்னுரிமை வழங்கப்படும்.''

3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவர்கள் அல்லது ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தங்களை கைவிட்டவர்களாகவும் மற்றும் பூர்த்தி செய்யாதவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் செல்லுபடியாகும் CIDA பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) ஒப்பந்தத்தின் பெயர் | (4) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (5) CIDA பதிவு | (6) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (7) விலைமனுப் பிணை / விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் | (9) விலைமனு ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டி இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/DB/CON/21/111 | திவுலப்பிட்டிய - மாவட்ட வைத்தியசாலையின் சமையலறை புதுப்பித்தல் வேலைகள்– | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | விலைமனுப் பிணை முறி 100,000.00 (105 நாட்கள்) அல்லது ரொக்கப் பண வைப்பு 50,000.00 ரூபா | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. 0112-296418 |
| 2 | WP/DB/CON/21/112 | திவுலப்பிட்டிய - மாவட்ட வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை அபிவிருத்தி செய்தல் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | |
| 3 | WP/DB/CON/21/113 | திவுலப்பிட்டிய - மாவட்ட வைத்தியசாலையின் (OPD) காத்திருக்கும் இடப்பரப்பு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் (ETU) புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 25,000.00 | |
| 4 | WP/DB/CON/21/114 | தங்கல்ல - ஆரம்ப சிகிச்சைப் பிரிவின் கூரை, வடிகான் முறைமை மற்றும் வெளிப்புற வேலி, அவசர சிகிச்சைப் பிரிவின் புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | |
| 5 | WP/DB/CON/21/115 | அக்கரகம - மாவட்ட வைத்தியசாலையில் வேலி மற்றும் படலையை நிர்மாணித்தல் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | |
| 6 | WP/DB/CON/21/116 | மீரிகம - முதியோர் இல்ல விசாகா வார்டின் மண்ணரிப்பைத் தடுப்பதற்காக தடுப்புச் சுவரை நிர்மாணித்தல். | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | விலைமனுப் பிணை முறி 100,000.00 (105 நாட்கள்) அல்லது ரொக்கப் பண வைப்பு 50,000.00 ரூபா | |
| 7 | WP/DB/CON/21/117 | மீரிகம - ஆதார வைத்தியசாலையிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவிற்கு, மைக்ரோஸ்கோப் நிலையத்திற்கான படிக்கட்டுகள், மற்றும் மலசலகூடத்தை நிர்மாணித்தல். | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 20,000.00 | |
| 8 | WP/DB/CON/21/118 | மினுவாங்கொட - பிரதேச கல்வி அலுவலகத்தின் பகுதி பிரிப்பு நிர்மாணம் மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | |
| 9 | WP/DB/CON/21/119 | ஜா-எல - மாவட்ட வைத்தியசாலையின் மேம்படுத்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, B/25/1, மகுல்பொக்குண வீதி, ராகம. தொலைபேசி இல. 0112952126 |
| 10 | WP/DB/CON/21/120 | கட்டான, கந்தவல - ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவிலுள்ள காத்திருக்கும் இடப்பரப்பு (OPD) மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை (ETU) நிறுவுவதற்கான நிர்மாணம் | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | விலைமனுப் பிணை முறி 100,000.00 (105 நாட்கள்) அல்லது ரொக்கப் பண வைப்பு 50,000.00 ரூபா | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், நீர்கொழும்பு இல. 75, லுவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு. 0312-232357 |
| 11 | WP/DB/CON/21/121 | பியகம - மாவட்ட வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுப்பில வீதி, மாகோல, பியகம. தொலைபேசி இல. 0112-963524 |
| 12 | WP/DB/CON/21/122 | கலகெடிஹேன - ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் (PMCU) கூரை திருத்தவேலைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய திருத்தவேலைகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (கம்பஹா), நீதிமன்ற வீதி, கம்பஹா. T.P -: 033-2222515 |
| 13 | WP/DB/CON/21/123 | அவிசாவளை - ஆயுர்வேத மத்திய மருந்தகத்திலுள்ள மருந்தக கட்டிடத்தின் திருத்தவேலைகள் மற்றும் செயின் லிங்க் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 15,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் (ஹோமாகம), நீதிமன்ற வீதி, ஹோமாகம. T.P-: 0112-855719 |
| 14 | WP/DB/CON/21/124 | மீகொட - ஆயுர்வேத வைத்தியசாலையில் 04ஆம் இலக்க வார்டின் 04 (ETU& Acupuncture Clinic) புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 25,000.00 | |
| 15 | WP/DB/CON/21/125 | மீகொட - ஆயுர்வேத வைத்தியசாலையின் 01ஆம் இலக்க வார்ட்டின் புதுப்பித்தல் வேலைகள் | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | விலைமனுப் பிணை முறி 200,000.00 (105 நாட்கள்) | |
| 16 | WP/DB/CON/21/126 | அவிசாவளை - மாவட்ட பொது வைத்தியசாலையில் திறந்த அம்பியூலன்ஸ் நிறுவகத்திகத்தை நிர்மாணித்தல் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | |
| 17 | WP/DB/CON/21/127 | பத்தரமுல்ல - ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு - Folk Art நிலையத்தின் புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பத்தரமுல்ல, தெபானம, பன்னிபிட்டிய. தொலைபேசி இல. 011-2844354 |
| 18 | WP/DB/CON/21/128 | மொரட்டுவ - மாவட்ட வைத்தியசாலையின் விஸ்தரிப்பு மற்றும் அத்தியாவசிய புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை, இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 |
| 19 | WP/DB/CON/21/129 | பிலியந்தலை - மாவட்ட வைத்தியசாலையில் மலசலகூட முறைமை மற்றும் ஏனைய சிறு புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000 .00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 25,000.00 | |
| 20 | WP/DB/CON/21/130 | பாணந்துறை - ஆதார வைத்தியசாலையில் தாதியர் விடுதிக் கட்டிடம் (படிநிலை 01) புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பாணந்துறை, ஸ்ரீ மகா விகார வீதி, பாணந்துறை. தொலைபேசி இல. 038-2234774 |
| 21 | WP/DB/CON/21/131 | பண்டாரகம - பண்டாரகம வைத்தியசாலையில் தற்போதுள்ள சடல அறைக்கு மேலதிகமான ஒரு பகுதி மற்றும் உத்தேச திருத்தங்கள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு ரூபா 25,000.00 | |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைகூறுநர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் அந்த அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021-04-05ஆம் திகதி முதல் 2021-04-27ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 09.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாணம் - மாகாண சபை கட்டிடப் பணிப்பாளருக்குச் (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் (மே.மா) அவர்களுக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை கட்டிடப் பணிப்பாளர் / இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2021-04-28ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. சகல விலைக் கோரல்களுடனும் (மேற்படி அட்டவணையில் 07ஆம் இலக்க நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) மீளளிக்கப்படும் பண வைப்பு பற்றுச்சீட்டு / விலைக்கோரல் பிணை முறியை இணைத்தல் வேண்டும்.

08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். ((அட்டவணையின் 04ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**தலைமை,**
**பெறுகைப் பிரிவு,**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**05.04.2021**
**தொலைபேசி: 0112-092504**
**தொலைநகல்: 0112-092505**

### பெயர் மாற்றம்

காத்தான்குடி 01, இல.35, MPCS சேனைச்சேர்ந்த ஜெளபர் பாத்திமா சுஜான் ஆகிய நான் 01.04.2021 தொடக்கம் ஜெளபர் பாத்திமா நஸீபா என எனது பெயரை மாற்றிக் கொண்டேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**ஜெளபர் பாத்திமா நஸீபா**

**Repeat Your ad For Better Offers**

## கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2021 – 2022

**பிரதேச செயலாளர் பிரிவு - புத்தளம்**

2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01ஆம் திகதி முதல் 2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் திகதி வரையுள்ள காலத்திற்கான கள்ளுத்தவறணை குத்தகை மீள் விற்பனைக் காக கேள்விப்பத்திரங்கள் 2021.05.03ஆம் திகதி காலை 10.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| இலக்கம் | : 01 |
| பிரிவு | : புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு |
| கிராமம் | : சேனைக்குடியிருப்பு |
| தவறணை திறந்து வைக்கப்பட்டிருக்கும் நேரங்கள் | : காலை 10.00 முதல் பி.ப.2.00 மணிவரை பி.ப.5.00 முதல் இரவு 9.00 மணி வரை |
| தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | : 2021.05.03 மு.ப.10.30 மணி |
| கேள்விப்பத்திர வைப்பு பணம் | : ருபா.1000.00 |

02. மேலதிக தகவல்களுக்காக 2021.04.16 திகதிய வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**பிரதேச செயலகம்**
**புத்தளம்**
**2021.04.01**

**எஸ்.ஏ.வை.ஆர்.ஜயதிலக,**
**பிரதேச செயலாளர்,**
**புத்தளம்.**




## கேள்வி கோரல்

### நீதி அமைச்சு

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் உயர் நீதிமன்றத்தை மீள் நிறுவுதல் செய்வதற்கான கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்ளல்

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் உயர் நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ள மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தை முழுமையாக மீள் நிர்மாணம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே உயர்நீதிமன்றத்தை வேறோர் இடத்தில் மீள் நிறுவுவதற்காக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதிக்கு அருகில் அமைந்துள்ள பொருத்தமான கட்டிடமொன்றை இரு வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்ற கட்டிடச் சொந்தக்காரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அக்கட்டிடம் கீழ்க்காணும் மாதிரிகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

- கௌரவ உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இக் கட்டிடத்திற்குள் இணைந்த மலசலகூட வசதிகளுடன் குறைந்த பட்சம் 500 சதுர அடி அளவிலான 17 அறைகள் இருத்தல் வேண்டும்.
- உயர் நீதிமன்றத்தின் நீதிமன்ற மண்டபத்திற்கு கிட்டத்தட்ட 2000 சதுர அடி அளவிலான 07 வளாகங்கள் இருத்தல் வேண்டும்.
- ஊழியர் குழாமிற்கு 14000 சதுர அடி அளவிலான இடவசதி தேவைப்படும்.
- நூலகத்திற்கு கிட்டத்தட்ட 12000 சதுர அடி இடவசதி தேவைப்படும்.
- ஏனைய பொது வசதிகளை நிறுவுவதற்காக 4000 சதுர அடிக்குக் கிட்டிய இட வசதி தேவைப்படும்.
- இக் கட்டிடத்திற்கு சம்பந்தப்பட்ட வாடகை தொகை அரச மதிப்பீட்டின் படி மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- அச் சொத்து உரிமையாளர் எந்த வழக்குகளிலும் ஒரு சாராராக இருத்தல் கூடாது.

02. அவ்வாறே கேள்விக்காக சமர்ப்பிக்கப்படும் கட்டிடத்திற்காக கீழ்க்காணுமாறு ஏனைய வசதிகளும் எதிர்பார்க்கப்படுகிறது.

- கௌரவ நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் கிட்டத்தட்ட 40 வாகனங்கள் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கக்கூடிய வசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்கு நீர் மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- இக்கட்டிடத்திற்காக தீயணைப்பு சேவைத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட தீ பாதுகாப்பு அமைப்புடனாக இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் மாடிகளுக்கான மின் உயர்த்தி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான உள்நுழைவு வழி 12 அடிக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் உட்பட பூட்டுக்கள் இடக்கூடிய பாதுகாப்பு வாயிற்கதவு இருத்தல் வேண்டும்.

03. இது பற்றி ஆர்வம் காட்டுகின்றவர்கள் கீழ்க்காணும் ஆவணங்களுடன் www.moj.gov.lk என்ற இணையதளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்யப்பட்ட குறித்த மாதிரிப் பத்திரத்துடன் 2021.04.29 மு.ப. 11.00 இற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து 'கணக்காளர் (வழங்கல்கள்), நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, கொழும்பு-12' என்ற முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். வேறு முறையில் அல்லது மின் அஞ்சல் முறையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்கப்பட மாட்டாது.

04. விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்.

- சகல கேள்வியுடனும், இரண்டு வருடங்களுக்கு குறித்த கட்டிடத்தை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு இணங்கியுள்ளமைக்கு அங்கீகரிக்கப்பட்ட கடிதம்.
- அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தின் பிரதி (Building Plan)
- காணியுடன் சம்பந்தப்பட்ட சொத்து உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதி மற்றும் வரைபடம் (Surveyplan) இல் உறுதி செய்யப்பட்ட பிரதி
- பிரதான பாதையுடன் இணைத்து வரையப்பட்ட காணியின் வரைபடம் (Plan) அல்லது அமைவிடத்தைக் குறிப்பிடும் வரைபடம் (Sketch)
- கட்டிடத்திற்காக குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட அனுகூல சான்றிதழ் (coc).

05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) இடம் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே.இல. 0718332180/ 0112320784

06. இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2021.04.23 மு.ப. 10.00 இற்கு நீதிமன்ற அமைச்சில் நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நீதி அமைச்சு**
**மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி**
**கொழும்பு -12.**

## மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு விலைக்கேள்விக்கானகோரல் - 2021

1. வடக்கு மாகாண மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவிற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான மற்றும் தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்வியினைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்,

3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது

4. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2061423) மாவட்ட பொது வைத்தியசாலையில் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 3000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 07.04.2021 தொடக்கம் 27.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

6. விலைக்கேள்விகள் 28.04.2021 ஆந் திகதி 9.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 28.04.2021 ஆம் திகதி 09..30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்

7. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் 19.04.2021 ஆம் திகதி 9.00 மணிக்கு நடைபெறும்.

8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
4. ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 3500/- செலுத்துவதன் பேரில் கீழே முகவரியிடப்பட்டுள்ளவருக்கு ஓர் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். 2021 மார்ச் 08 முதல் ஏப்ரல் 23ம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரை கணக்குப் பிரிவிற்கு கட்டணங்கள் காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2021 ஏப்ரல் 27ம் திகதி பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதக் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2021 ஏப்ரல் 27 பி.ப. 2.00 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரரின் கலந்துகொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும் ஒவ்வொரு வகுதிக்கும், வெவ்வேறாக மொத்த விலைமனுப் பெறுமதியின் 1.5% ஓர் விலைமனுப் பிணையை எல்லா விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம்**
**கந்தவல எஸ்டேட் இல. 2**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி,**
**இரத்மலானை.**
**தொலைபேசி: 0112632406**
**பெக்ஸ்: 0112636337**

---

# கேள்வி அறிவித்தல்

## அஷ்ர.ஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை

01. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (CIDA) பதிவு செய்யப்பட்டுள்ள கேள்விதாரரிடமிருந்து பிராந்திய பெறுகைக்குழு தலைவரினால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கு மூடிய கேள்விகள் கேரப்படுகின்றன.

02. மீளளிக்கப்படாத கட்டணத்தை கல்முனை அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை, நிதிப்பிரிவில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை கல்முனை அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை பெறுகைப்பிரிவில் சமர்ப்பிக்கப்படுமிடத்து 2021.04.28ஆம் திகதி பிற்பகல் 3.00மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும். தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் : 067-2229496 - 113)

04. பெறுகை முறையானது தேசிய போட்டி விலைக்கேள்வி முறைமையாகும்.

05. கீழே தரப்பட்டுள்ள கேள்வித் தொகைக்கான கேள்விப்பிணை கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை என்ற முகவரிக்கு 29ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2021ஆம் ஆண்டு (29.04.2021) மு.ப.10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் சமுகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

06. முன்கேள்வி (Pre Bid) கூட்டம் 19.04.2021ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வைத்திய அத்தியட்சகர் அலுவலகம், அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனையில் இடம்பெறும்.

07. பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

**TABLE**

| Name of Work | Construction Cost (Rs.) | CIDA Grade | Non Re fundable Fee Rs. | Contract Period | Bid Validity | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Validity |
| Construction of Boundary Wall Stage I | 5,158,973.00 | C7 or above | 3,500.00 | 03 months | 91 days | 60,000.00 | 119 Days |
| Construction of Boundary Wall Stage II | 6,830,615.00 | C7 or above | 3,500.00 | 03 months | 91 days | 80,000.00 | 119 Days |

**டாக்டர் .ஏ.எல்.எப்.றஹ்மான்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**கல்முனை**
**07.04.2021**

---

# கொழும்பு மாநகர சபை

## மாநகர பொறியியலாளர் திணைக்களம்

## கேள்விமனு அழைப்பு

**மாதம்பிட்டி குப்பை அகற்றும் தளத்தில் இருந்து (கட்டணம் இன்றி) அழுகிய குப்பைகளை நீக்குவதற்கான கேள்விமனு**

கட்டணம் இன்றி மாதம்பிட்டி குப்பை அகற்றும் தளத்தில் இருந்து அழுகிய குப்பைகளை நீக்குவதற்கான கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

1. பொருத்தமான நோக்கத்திற்காக விலைமனுதாரர்கள் மூலம் வழங்கப்பட்ட பொருத்தமான தளத்திற்கு மாதம்பிட்டி குப்பை அகற்றும் தளத்தில் இருந்து அழுகிய குப்பைகளை விலைமனுதாரர்கள் எடுத்துச் செல்லல் வேண்டும்.
2. மாதம்பிட்டி குப்பை அகற்றும் தளத்தில் இருந்து விலைமனுதாரர் மூலம் தேர்வுசெய்யப்பட்ட தளத்திற்கு அழுகிய கழிவை எடுத்துச் செல்வதற்காக விலைமனுதாரர்கள் டிப்பர்களை வழங்குதல் வேண்டும்.
3. மாதம்பிட்டி குப்பை அகற்றும் தளத்தில் டிப்பர்களுக்கு அழுகிய குப்பைகளை ஏற்றுவதை கொழும்பு மாநகர சபை ஏற்கும்.
4. தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரரின் செயற்பாட்டின் காரணமாக எழும் எந்த ஒரு விடயத்திற்காகவும் கொழும்பு மாநகர சபை பொறுப்பேற்காது.
5. விலைமனுதாரர் இந்த செயற்பாட்டுடன் தொடர்புபட்டு எந்த ஒரு இழப்பு, சேதம் மற்றும் எந்த ஒரு தரப்பின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்ற கோரல்களில் இருந்து கொழும்பு மாநகர சபைக்கு இழப்பெதிர்காப்பு வழங்கல் வேண்டும்.

பெயர், முகவரி, தொடர்பு இலக்கம், தினசரி பணியமர்த்தப்படும் டிப்பர்களின் எண்ணிக்கை, தேவையான கால அளவு, எடுத்துச் செல்வதற்கு தேவையான கழிவின் அளவு முதலியவற்றை குறிப்பிட்டு உங்களது முழுமையான விண்ணப்பத்தை "மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு 07" என்று முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாதம்பிட்டி குப்பை அகற்றும் தளத்தில் இருந்து (கட்டணம் இன்றி) அழுகிய குப்பைகளை நீக்குவதற்கான கேள்விமனு" என்று குறிப்பிட்டு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கவும். விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் தேவையெனில் தளத்தை பரீட்சிப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு, 0771093131/ 011-2691222 பணிப்பாளர் பொறியியல் (திண்மக் கழிவு முகாமைத்துவம்), எஸ்.டபிள்யூ.எம். பிரிவு, மாநகர பொறியியலாளர் திணைக்களம், கொழும்பு மாநகர சபை.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை,**
**நகர மண்டபம்,**
**கொழும்பு 07.**

---

# கமத்தொழில் ரீதியிலான ஆராய்ச்சியில் மிகச்சிறந்த தேசிய விருதுகள் — 2021

## இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை

**நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவு, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை ஊக்குவித்தல், விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்பவியல் கமத்தொழில் இராஜாங்க அமைச்சு**

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபையினால் கமத்தொழில் ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க சாதனைகளுக்காக விருது வழங்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. தேசிய கமத்தொழில் அபிவிருத்தியில் முன்னெடுத்தலுக்காக கமத்தொழில் விஞ்ஞானிகளை ஊக்குவித்தல் மற்றும் அங்கீகரித்தலை வழங்கவும் ஆராய்ச்சியில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளவும் அவர்களின் தொழிற்பணி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான உதவியை வழங்கவும் ஆகியனவே இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இவ்வாறான பங்களிப்புக்கள் அசல்தன்மை, விஞ்ஞானரீதியிலான தகுதி, உற்பத்தி, விளைவு மற்றும் இலங்கையில் கமத்தொழில் ஆராய்ச்சி அபிவிருத்தியில் ஏற்படும் தாக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**விருதுகள் பின்வரும் மூன்று (03) உயர் மட்டத்திலான துறைகளுக்காக வழங்கப்படும்.**

1. வனவியல் மற்றும் ஏற்றுமதி கமத்தொழில் பயிர்கள் அடங்கலான பெருந்தோட்டச் செய்கை.
2. மலர்வளர்ப்பு அடங்கலான பெருந்தோட்டச் செய்கையற்றது.
3. பண்ணைவிலங்கு மற்றும் கடற்தொழில் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு வளங்கள்.

**மூன்று விருதுகள் ஒவ்வொரு துறைக்காகவும் பின்வருமாறு வழங்கப்படும்.**

1. 1 ஆம் பரிசு : 300,000 ரூபா
2. 2 ஆம் பரிசு : 250,000 ரூபா
3. 3 ஆம் பரிசு : 200,000 ரூபா

**தகுதித்தன்மை:**

- அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புக்களில் பணியாற்றும் தனிநபர் அல்லது விஞ்ஞானிகளின் குழுவொன்று ஆகியன விண்ணப்பிப்பதற்கு தகுதியாவர்.
- 2018-2019 காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி பரிசீலிக்கப்படும்.
- இலங்கையில் இலங்கைப் பிரஜைகளினால் அல்லது உள்ளூர் நிறுவனங்களினால் கையேற்கப்பட்ட ஆராய்ச்சியும் பரிசீலிக்கப்படும் (உதாரணமாக வெளிநாட்டு இணைப்பு வழங்கப்பட்டிருப்பின், இப்பணியின் பிரதான பங்கானது இலங்கை விஞ்ஞானியினால்/ விஞ்ஞானிகளினால் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்கள் ஆகியன www.slcarp.lk என்ற இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபையின் இணையதளத்திலிருந்து அல்லது slcarpawards@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சலொன்றை அனுப்புவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

விதிக்கப்பட்ட உருமாதிரிக்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2021 மே 24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை, 114/9, விஜேராம மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை,**
**114/ 9, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி : 011-2698001/ 011-2697648/ 011-2697103.**
**தொலைநகல் : 011-2682951**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நீதி அமைச்சு

## புதிய நீதி மன்றங்களை ஸ்தாபிப்பதற்கு வாடகை அடிப்படையில் கட்டிடங்களைப் பெற்றுக்கொள்ளல்

1. நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தற்பொழுது உள்ள நீதிமன்றங்களுக்கு மேலதிகமாக புதிய நீதிமன்றங்களை ஸ்தாபிப்பதற்கு மற்றும் தற்போதுள்ள நீதிமன்றங்களின் இடவசதிகளை விஸ்தரிப்பதற்காக வாடகை அடிப்படையில் 03 வருட காலத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய கட்டிடங்கள் தேவையாகவுள்ளது.

2. வாடகைக் கட்டிட தேவைப்பாடுகள் பற்றிய விபரங்கள்

| தொ. இல. | அமைப்பதற்கு உத்தேசித்துள்ள நீதிமன்றம் | நீதிமன்றப் பிரிவு மற்றும் அமைப்பதற்கு உத்தேசிக்கும் நகரம் | தேவையான கட்டிடத்தின் இடப்பரப்பு (அடிகளில்) |
|---|---|---|---|
| 01 | மேலதிக சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றம் | கொழும்பு | நீதிமன்ற மண்டபம்: 40'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>இரண்டு அறைகள் (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 600 சதுர அடிகள்<br>ஆவண வைப்பகம்: சுமார் 400 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 02 வாகனங்களுக்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| | சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றம் | களுத்துறை | |
| 02 | மேலதிக உயர் நீதிமன்றம் | கொழும்பு நீதிமன்றம் 01<br>கொழும்பு நீதிமன்றம் 02<br>காலி<br>பதுளை<br>குருநாகல்<br>களுத்துறை<br>ஹோமாகம | நீதிமன்ற மண்டபம்: 50'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>இரண்டு அறைகள் (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 750 சதுர அடிகள் மற்றும் சுமார் 144 சதுர அடி அறையொன்று (30'x25' மற்றும் 12'x12')<br>ஜூரி அறை: சுமார் 100 சதுர அடிகள்<br>ஆவண வைப்பகம்: சுமார் 600 சதுர அடிகள்<br>வழக்கிலுள்ள பொருட்கள் அறை: சுமார் 250 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>அரச சட்டத்தரணி அலுவலகம்: சுமார் 180 சதுர அடிகள் (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அரச சாட்சியாளர்களுக்கான 02 அறைகள் 10'x10'<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 02 வாகனங்களுக்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 03 | மேலதிக உயர் நீதிமன்றம் | குருநாகல்<br>பலப்பிட்டிய<br>காலி<br>அத்தனகல்ல | நீதிமன்ற மண்டபம்: 40'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>ஒரு அறை (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 750 சதுர அடிகள் மற்றும் சுமார் 144 சதுர அடி அறையொன்று (30'x25' மற்றும் 12'x12')<br>ஆவண வைப்பகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>குடும்ப ஆலோசகர் அலுவலகம்: சுமார் 150 சதுர அடிகள்<br>நீதிமன்ற ஆணையாளர்: சுமார் 100 சதுர அடிகள்<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 01 வாகனத்திற்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 04 | மாவட்ட நீதிமன்றம் | கொழும்பு<br>கொட்டபொல<br>மொனராகல<br>ஹம்பாந்தோட்டை<br>மஹியங்கனை<br>திஸ்ஸமஹாராம<br>மாவனல்லை<br>வாரியபொல<br>வெள்ளவாய<br>தெஹியத்தகண்டிய<br>அத்தனகல்ல | நீதிமன்ற மண்டபம்: 40'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>ஒரு அறை (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 750 சதுர அடிகள் மற்றும் சுமார் 144 சதுர அடி அறையொன்று (30'x25' மற்றும் 12'x12')<br>ஆவண வைப்பகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>குடும்ப ஆலோசகர் அலுவலகம்: சுமார் 150 சதுர அடிகள்<br>நீதிமன்ற ஆணையாளர்: சுமார் 100 சதுர அடிகள்<br>அரச சட்டத்தரணி அலுவலகம்: சுமார் 180 சதுர அடிகள் (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 01 வாகனத்திற்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 05 | நீதவான் நீதிமன்றம் | மீரிகம<br>பேருவளை | நீதிமன்ற மண்டபம்: 60'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>ஒரு அறை (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>பெரட் அறை: சுமார் 100 சதுர அடிகள்<br>சாட்சியாளர்களின் அறை: சுமார் 100 சதுர அடிகள்<br>ஆவண வைப்பகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>வழக்கிலுள்ள பொருட்கள் அறை: சுமார் 500 சதுர அடிகள்<br>சட்ட உதவி அலுவலகம்: சுமார் 100 சதுர அடிகள்<br>மக்கள் திருத்த அலுவலகம்: சுமார் 100 சதுர அடிகள்<br>நன்னடத்தை அதிகாரி அலுவலகம்: சுமார் 100 சதுர அடிகள்<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 02 வாகனங்களுக்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 06 | மேலதிக நீதவான் நீதிமன்றம் | களுத்துறை<br>மாவனல்லை<br>மகியங்கனை<br>கெஸ்பேவ<br>ஹொரணை<br>பாணந்துறை<br>ஹோமாகம<br>அத்தனகல்ல<br>சிலாபம்<br>மாரவில<br>குளியாபிட்டிய<br>பண்டாரவளை | நீதிமன்ற மண்டபம்: 60'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>ஒரு அறை (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>பெரட் அறை: சுமார் 100 சதுர அடிகள்<br>சாட்சியாளர்களின் அறை: சுமார் 100 சதுர அடிகள்<br>அரச சாட்சியாளர்களின் அறை: சுமார் 100 சதுர அடிகள்<br>ஆவண வைப்பகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>வழக்கிலுள்ள பொருட்கள் அறை: சுமார் 500 சதுர அடிகள்<br>நீதிபதி வாகனத் தரிப்பிடம்: 01 வாகனத்திற்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 07 | தொழிலாளர் நியாயச் சபை | கடுவளை | நீதிமன்ற மண்டபம்: 30'x18'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை மற்றும் கராஜ்: 12'x30' (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 300 சதுர அடிகள்<br>ஆவண வைப்பகம்: சுமார் 225 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>தன்னியக்க மின் பிறப்பாக்கி வசதிகள்<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 08 | முன் விசாரணை நீதிமன்ற மண்டபம் | வெள்ளவாய<br>சிலாபம்<br>மாரவில<br>தெஹியத்தகண்டிய<br>பண்டாரவளை | நீதிமன்ற மண்டபம்: 20'x20'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>ஒரு அறை (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 400 சதுர அடிகள்<br>ஆவண வைப்பகம்: சுமார் 400 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>நீதிபதி வாகனத் தரிப்பிடம்: 01 வாகனத்திற்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 01, அலுவலகம் 01, சட்டத்தரணிகள் 01 |
| 09 | சிறு கோரிக்கை நீதிமன்றம் | கண்டி<br>கொழும்பு நீதிமன்றம் 01<br>கொழும்பு நீதிமன்றம் 02 | நீதிமன்ற மண்டபம்: 60'x25'<br>நீதிபதிகள் உத்தியோகபூர்வ அறை: 20'x15'<br>ஒரு அறை (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>அலுவலகம்: சுமார் 750 சதுர அடிகள் மற்றும் சுமார் 150 சதுர அடி அறையொன்று<br>ஆவண வைப்பகம்: சுமார் 900 சதுர அடிகள்<br>சட்டத்தரணிகள் ஓய்வறை: சுமார் 400 சதுர அடிகள்<br>நீதிமன்ற ஆணையாளர்: சுமார் 100 சதுர அடிகள்<br>அரச சட்டத்தரணிகள்: சுமார் 200 சதுர அடிகள் (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 02 வாகனங்களுக்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 15 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |
| 10 | கடன் நிவாரண சபைத் திணைக்களம் | குருநாகல்<br>பொரளை<br>கொள்ளுப்பிட்டி | நீதிமன்ற மண்டபம்: 25'x20'<br>அலுவலகம்: சுமார் 400 சதுர அடிகள்<br>உத்தியோகபூர்வ அறை: சுமார் 600 சதுர அடிகள் (மலசலகூட வசதிகள் சகிதம்)<br>மக்கள் பிரிவிற்கு: சுமார் 600 சதுர அடிகள்<br>நீதிபதிகளின் வாகனத் தரிப்பிடம்: 03 வாகனங்களுக்கான இடவசதி<br>பொது வாகனத் தரிப்பிடம்: 05 வாகனங்களுக்கான இடவசதி<br>மலசலகூட வசதிகள்: பொது 02, அலுவலகம் 02, சட்டத்தரணிகள் 02 |

3. கேட்கப்பட்டுள்ள அளவுகளுக்கு அண்மைய அளவுகளும் கவனத்திற் கொள்ளப்படும்.
4. அரச மதிப்பீட்டாளரின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இயைபுடைய வாடகைத் தொகை மாதாந்தம் செலுத்தப்படும்.
5. நிலம் மற்றும் இடப்பரப்பில் மிகுதி இடவசதிகள் இருக்குமானால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.
6. இயைபுடைய நீதிமன்றப் பிரிவினுள் அமைந்துள்ள கட்டிடமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பிரிவினுள் தற்போது உள்ள நீதிமன்றத்திற்கு அண்மையில் சுமார் 2 கி.மீற்றர் சுற்றுபுறத்தினுள் பொதுமக்கள் இலகுவில் அடையக்கூடிய இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
7. கட்டிடத்துடனான காணியின் உரிமைத்துவம் சிக்கலற்றதாகவிருத்தல் வேண்டும். தனி உரிமைத்துவம் (உரிமையாளர் வசம்) உள்ள பிரவேசப் பாதை இருப்பதோடு அந்தக் கட்டிடத்துடனான காணி சுற்றுமதில் அல்லது எல்லை வேலியினால் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. இரண்டு மாடிகளுக்கு மேற்பட்ட கட்டிடமானால் மின்னுயர்த்தி வசதிகள் இருத்தல் வேண்டும்.
9. இந்தக் கட்டிடத்திற்கு தொடர்ச்சியான மின், நீர் மற்றும் தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
10. ஊனமுற்றவர்களுக்கான பிரவேச வழி இருத்தல் வேண்டும்.
11. ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு வாடகைக்கு வழங்குதல் வேண்டும்.
12. இந்த ஆதனத்தின் உரிமையாளர் எந்தவொரு வழக்கிற்கும் சார்பானவராக இருத்தல் கூடாது.
13. தெரிவு செய்யப்பட்ட கட்டிடங்களின் இடப் பரீட்சையின் பின் தெரிவு செய்யப்பட்ட கட்டிடம் தொடர்பில் அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் பின்வரும் ஆவணங்கள் சகிதமான விண்ணப்பப் படிவங்களை 2021-04-29 ஆம் திகதி (வியாழக்கிழமை) மு.ப. 11.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ''கணக்காளர் (வழங்கல்கள்), நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு-12'' எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை www.moj.lk எனும் இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

i. கட்டிட திட்ட வரைபடத்தின் பிரதியொன்று
ii. காணி தொடர்பான உரிமைத்துவ உறுதியின் சான்றுபடுத்திய பிரதி மற்றும் காணி வரைபடத்தின் (Survey Plan) சான்றுபடுத்திய பிரதி
iii. பிரதான வீதியுடன் தொடர்புபடுத்தி வரையப்பட்ட காணியின் வரைபடம் (Plan) மற்றும் அமைவிடத்தைக் காட்டும் உருமாதிரி வரைபடம் (Sketch)
iv. கட்டிடத்திற்கு இயைபாக உள்ளூராட்சி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட இணக்கச் சான்றிதழ்.

மேலதிக விபரங்களுக்கு மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) அவர்களை 0112 320784 அல்லது 0718 332180 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பிலான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021-04-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நீதி அமைச்சில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதும் விடயங்கள்/ முரண்பாடான விடயங்கள் எழுந்தால் அது தொடர்பில் நீதிமன்ற அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**எம்.எம்.பி.கே. மாயாதுன்னே,**
**செயலாளர்,**
**நீதி அமைச்சு,**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,**
**கொழும்பு 12.**

# தமிழக தேர்தலில் நேற்று விறுவிறுப்பாக வாக்களிப்பு

தமிழகம் முழுவதும் நேற்று சட்ட சபை தேர்தலுக்ககான ஓட்டுப்பதிவு விறு,விறுப்பாக நடைபெற்று முடிந்தது. அரசியல் கட்சி பிரமுகர்கள், திரைப்பிரபலங்கள் ஆர்வமாக வாக்களித்தனர்.

திரைப்பட நடிகர்கள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் காலையில் முதல் ஆளாக பலர் தங்களின் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.


சென்னை ஸ்டெல்லா மேரி கல்லூரியில் நடிகர் ரஜினி வாக்களித்தார். மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் ஆழ்வார்பேட்டையில் வாக்களித்தார். இது போல் அஜித் அவரது மனைவியுடன் வந்து வாக்களித்தார். காரைக்குடியில் முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், புதுச்சேரி கவர்னர் தமிழிசை சவுந்திரராஜன், பா.ஜ., வேட்பாளர் வானசதி சீனிவாசன் வாக்களித்தனர்.

மதிமுக பொதுசெயலர் வைகோ, கலிங்கப்பட்டியில் வரிசையில் காத்திருந்து குடும்பத்தினருடன் வந்து வாக்களித்தார்.

நடிகர்கள் சூர்யா, அவரது சகோதரர் கார்த்தி இணைந்து வந்து தங்களது வாக்கை பதிவு செய்தனர். சென்னை, நீலாங்கரையில் நடிகர் விஜய் சைக்கிளிலில் வந்து ஓட்டு போட்டார். மந்தைவெளியில் பகுதியில் உள்ள ஓட்டுச்சாவடியில் பா.ஜ., வேட்பாளர் நடிகை குஷ்பு ஓட்டு போட்டார். சென்னை ஆலம்பாக்கத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும், திண்டிவனத்தில் பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் ஓட்டு போட்டனர். பெசன்ட் நகரில் வீட்டில் இருந்து ஓட்டுச்சாவடி வரை நடந்து வந்த நடிகர் விக்ரம் தனது ஓட்டை பதிவு செய்தார்.

முன்னதாக, ஓட்டுப்பதிவு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதை தொடர்ந்து, அது சரி செய்யப்படும் வரை காத்திருந்த அவர், ஓட்டு போட்டார். சென்னை அடையாறில் தினகரன் ஓட்டளித்தார். சென்னை வளசரவாக்கத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் ஓட்டு போட்டார். மதுரை டிவிஎஸ் நகரில் உள்ள ஓட்டுச்சாவடியில் முன்னாள் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி ஓட்டு போட்டார்.

# கொரோனா பரவல்; ஷீரடி சாய்பாபா கோவில் பூட்டு



மஹாராஷ்டிராவில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளதால், ஷீர்டியில் உள்ள சாய்பாபா கோவில், நேற்று முன்தினம் மூடப்பட்டது. மஹாராஷ்டிராவில் கொரோனா பரவல் மிகவும் அதிகரித்துள்ளதால், மாநில அரசின் தரப்பில், பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.பாதிப்பு அதிகரிக்கும் சில நகரங்களில், இரவு நேர ஊரடங்கு, பல்வேறு பகுதிகளில் வார இறுதி நாட்களில் ஊரடங்கு உள்ளிட்டவை, அமல்படுத்தப்பட்டு உள்ளன.

இதன்படி, மத வழிபாட்டு தலங்களை மூடும் உத்தரவு, விரைவில் வெளியாகும் என தெரிகிறது. இதன் முன்னோட்டமாக, ஷீர்டியில் உள்ள சாய்பாபா கோவிலில், நேற்று முன்தினம் இரவு, 8:00 மணி முதல் பக்தர்கள் அனுமதிக்கு தடை செய்யப்பட்டது.'அடுத்த உத்தரவு வரும் வரை, கோவில் மூடப்படும்' என, மஹாராஷ்டிர அரசு கூறியுள்ளது. இருப்பினும், கோவிலுக்குள் வழக்கமான வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறும் என கோவில் நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

# சுகாதார விதிமுறைகளுடன் வாக்களிக்க ஆணையம் ஏற்பாடு

தமிழக சட்டசபை பொதுத் தேர்தல் நேற்று காலை 7:00 மணிக்கு ஓட்டுப்பதிவு ஆரம்பமாகி இரவு, 7:00 மணிக்கு முடிவடைந்தது. ஓட்டுச் சாவடிகளில், கையுறை மற்றும் கிருமி நாசினி என பல சிறப்பு ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்திருந்தது. மறக்காமல் முக கவசம் அணிந்து ஓட்டு போட்டு, ஜனநாயகக் கடமையாற்றுமாறு மக்கள் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

தமிழக சட்டசபை பொதுத் தேர்தல் மற்றும் கன்னியாகுமரி லோக்சபா தொகுதிக்கான இடைத் தேர்தல் என்பன ஒரே கட்டமாக நேற்று நடைபெற்றன. சட்டசபை பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், மார்ச் 12ல் தொடங்கி, 19ல் நிறைவடைந்தது. மார்ச் 22ல், இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்பின், அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள், பிரசாத்தில் ஈடுபட்டனர். ஒரு மாதமாக நடந்து வந்த தேர்தல் பிரசாரம், ஏப்ரல் 4ம் திகதி இரவு, 7:00 மணியுடன் நிறைவடைந்தது.





பஸ்ஸர பேருந்து விபத்தில் பலியான மற்றும் காயமடைந்தவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு டயான் லங்கா தனியார் நிறுவனத்தால் கடந்த 3ம் திகதி லுணுகல பிரதேச சபை வளாகத்தில் வைத்து நிதி உதவி வழங்கப்பட்டது. இதன்போது தென் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பசந்த யாப்பா அபேவர்தன, டயான் லங்கா தனியார் நிறுவனத்தின் உரிமையாளர் கே. பத்மநாதன், லுணுகல பிரதேச சபைத் தலைவர் ஜகத் சந்திரசிறி, லுணுகல பஸ்ஸர பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

**கண்டி – கட்டுகஸ்தொட்ட புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியின் விளையாட்டு மைதான மேம்படுத்தலுக்கான விலைமனுக்கோரல் காலத்தை நீடிப்பதற்கான அறிவித்தல் (மீதி வேலை)**

**Contract No.: MOYS/PCM/PRO/09-2021**

1. 2021.03.15 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனுக்கோரல் காலமானது 2021.03.16 ஆம் திகதியிலிருந்து 2021.04.30 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
2. விலைமனுக்கோரல் ஆவணங்களின் வழங்கும் திகதியானது 2021.03.16 ஆம் திகதியிலிருந்து 2021.04.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையுமாகும்.
3. விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 105 நாட்களாகும் (திகதி - 2021.08.13)
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென அடையாளமிடப்பட்டு 2021.04.30 ஆம் திகதியன்று மதியம் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் (இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மூன்றாம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்). தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
5. 2021.03.15 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பிலுள்ள ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**செயலாளர்,**
**இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**பெறுகைப் பிரிவு,**
**3 ஆம் மாடி,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**

தொலைபேசி: 011-2670028


# புதுவருட பண்டிகைக் காலங்களில் பயணத் தடை விதிக்கப்பட மாட்டாது

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ்சிங்கள புதுவருட பண்டிகைக் காலங்களில் எந்த வித பயணத் தடைகளை விதிப்பதற்கான எதிர்பார்ப்பும் கிடையாது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் எழுந்தமானமாக என்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகதெரிவித்துள்ள அவர், அது புதிதாக குறிப்பிடப்பட வேண்டிய விடயமல்ல என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகைக் காலங்களில் மக்கள் கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணிக்கும் நிலைமை உள்ள நிலையில் எச்சரிக்கை மிகுந்த சந்தர்ப்பங்களில் என்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதே எதிர்பார்ப்பாகும். அத்துடன் மேற்படி பரிசோதனைகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# இலங்கையின் சுகாதார சேவைக்கு ஐ.நா சிறுவர் நிதியம் பாராட்டு

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் சுகாதார சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது குறித்து இலங்கைக்கு சர்வதேச சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் சவாலான காலப்பகுதியில் தாய்சேய் சுகாதார சேவைகளை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் இடம்பெற்ற காலப்பகுதியிலும் தாய்சேய் சுகாதார சேவையில் இடம்பெறும் பாதகமான விளைவுகளை தடுக்க இலங்கை மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும் என்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது,


## இலங்கை வங்கி

**பின்வரும் இலங்கை வங்கியின் கிளை இடமாற்றத்திற்காக பொருத்தமான கட்டிடமொன்று தேவைப்படுகின்றது.**

### கும்புக்கெடே மற்றும் மாவத்தகம

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச 25 - 40 அடி அகலத்திற்கு மேற்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்சம் 40 பேர்ச் காணிப் பரப்பளவில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 2500 - 3000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடமாவிருத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்கு 60 அம்பியர் மூன்று முதன்நிலை மின்சாரம், குழாய் நீர் இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வெவ்வேறான மலசலகூட வசதிகள், அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாயில் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் தரைப்பரப்பிற்கு முழுமையாக தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2'x2')
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு கட்டிடத்தின் பின்புறம் 10" x 10" அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை இருத்தல் வேண்டும். (இந்த அறை இரும்பு கிறில் இடப்பட்டு மறைத்து பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும்)
- 1000 லீட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியொன்று இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டிட உரிமையாளர்கள், கட்டிட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணபிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இயைபுடைய கிளையின் பெயரைக் குறிப்பிட்டு அதற்கான பொருத்தமான கட்டிடம்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணபப் படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

**உதவிப் பொது முகாமையாளர் (வடமேல் மாகாணம்),**
**இலங்கை வங்கி, வடமேல் மாகாண அலுவலகம்,**
**இல. 18, மிகிந்து மாவத்தை, குருநாகல்.**
**தொலைபேசி: 037-2223618/ 037-2222420**
**தொலைநகல்: 037-2223619**
**மின்னஞ்சல்: omnwp@boc.lk**

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



CargillsBank
Banking on the Human Spirit

**கார்கில்ஸ் வங்கி லிமிடெட்**
**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

| | | |
|---|---|---|
| வாடிக்கையாளரின் பெயர் | : | **கண்டி றோயல் இங்கிலிஷ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிடெட்** |
| கிளை | : | **ராஜகிரிய** |

2019/09/06 ஆந்திகதியன்று நடைபெற்ற (PB 4847 ஆம் பதிவிலக்கத்தைக்கொண்ட) கார்கில்ஸ் வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது;

**கடப்பாட்டாளராக கண்டி றோயல் இங்கிலிஷ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிடெட்,** (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" எனவழைக்கப்படுவதும்) PB 4847 ஆம் பதிவிலக்கத்தைக்கொண்டதுமான கார்கில்ஸ் வங்கி லிமிடெட் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ.சீ.நதீஷா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018/12/27 ஆந்திகதிய **555 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது** வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளதாதலாலும்;

**அத்துடன்** 2019/7/8 ஆந்திகதியிலிருந்து ரூபா 217,510,732.18 கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு 19.25% வட்டியுடன் 2019/7/7 ஆந்திகதிவரையில் முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் இருநூற்றியிருபத்தாறு மில்லியன் எட்டு இலட்சத்து நாற்பத்திமூன்றாயிரத்து ஐந்நூற்றியைம்பத்தொன்பது ரூபா எண்பத்தேழு சதம் (ரூ.226,843,559.87) கொண்ட தொகையும்

**அத்துடன்,**

2019/7/8 ஆந்திகதியிலிருந்து முழுமையாகக் கொடுப்பனவுசெய்யப்படும் திகதிவரை ரூபா 9,833,895.01 கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு 19.25% வட்டியுடன் 2019/7/7 ஆந்திகதிவரையில் முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் பத்து மில்லியன் இரண்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்துத் தொளாயிரத்தெண்பத்தைந்து ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ.10,258,985.45) கொண்ட தொகையும்,

555 ஆம் இலக்கத்தைக்கொண்ட சொல்லப்பட்ட ஈட்டுமுறிமீது கார்கில்ஸ் வங்கி லிமிடெட்டுக்கு இப்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் வந்துள்ளன **ஆதலாலும்.**

**இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது:-**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி, இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டவையும் **555 ஆம் இலக்கத்தைக்** கொண்ட **ஈட்டுமுறியின்மூலம் கடப்பாட்டாளராக கண்டி றோயல் இங்கிலிஷ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிடெட்டினால்** வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனங்களைச் சொல்லப்பட்ட **இருநூற்றிமுப்பத்தேழு மில்லியன் ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூற்றிநாற்பத்தைந்து ரூபா முப்பத்திரெண்டு சதம் (ரூ.237,102,545.32)** கொண்ட தொகையையும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனைத்தேதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியையும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுதொகைகளையும் பணங்களையும், பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வதற்கு ஹோமாகம, பணாகொட, சர்வோதய மாவத்தை, ஹைலெவல் வீதி, 9-I ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் **சந்திமா பிரியதர்ஷனி கமகே** என்பவருக்கு அதிகாரமளிக்கப்படுதலும் தத்துவமளிக்கப்படுதலும் வேண்டுமென்றும்.

**மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணை:**

1) மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோறளை கடவத்சத்தரவினுள் கண்டி மாநகரசபை எல்லைகளினுள் 253, அம்பிட்டிய தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள் விக்டோரியா ட்ரைவில், தற்போது சங்கராஜ மாவத்தை, அமைந்துள்ளதும் மஹாமாய மாவத்தையில் 2/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீஜீஎஸ்கே ஜயரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010 ஓகத்து 10 ஆந்திகதிய 648 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது:- **வடக்கில்** 2157 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2, **வடகிழக்கில்** சங்கராஜ மாவத்தை, **தெற்கில்** காணித்துண்டம் 2 (வீதி அணுகுகை) மற்றும் **வடமேற்கில்** 648 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 6; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பதினைந்து தசம் ஒன்று ஒன்று பேர்ச்சுக்களை (ஏ0-ரூ0-பே15.11) கொண்டுள்ளது. கண்டிக் காணிப்பதிவகத்தில் தலைப்பு தொகுதி/பக்கம் A 436/287 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2) மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோறளை கடவத்சத்தரவினுள் கண்டி மாநகரசபை எல்லைகளினுள் 253, அம்பிட்டிய தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள் விக்டோரியா ட்ரைவில், தற்போது சங்கராஜ மாவத்தை, அமைந்துள்ளதும் மஹாமாய மாவத்தையில் 2/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீஜீஎஸ்கே ஜயரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010 ஓகத்து 10 ஆந்திகதிய 648 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளையுடையது:- **வடக்கிலும் வடகிழக்கிலும்** சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 2, **தெற்கில்** மஹாமாய மாவத்தை, மேற்கில் சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டங்கள் 4 மற்றும் 5 அத்துடன் **வடமேற்கில்** சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் 6; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 648 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ரூட் ஒன்பது தசம் ஆறு நான்கு பேர்சுக்களை (ஏ0-ரூ1-பே9.64) கொண்டுள்ளது. கண்டிக் காணிப்பதிவகத்தில் தலைப்பு தொகுதி/பக்கம் A 436/288 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பின்வரும் காணித்துண்டுகளின்மீதும் அவைநெடுகிலுமான செல்வழியுரிமையுடன்சேர்த்து**

மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோறளை கடவத்சத்தரவினுள் கண்டி மாநகரசபை எல்லைகளினுள் 253, அம்பிட்டிய தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள் விக்டோரியா ட்ரைவில், தற்போது சங்கராஜ மாவத்தை, அமைந்துள்ளதும் மஹாமாய மாவத்தையில் 2/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீஜீஎஸ்கே ஜயரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010 ஓகத்து 10 ஆந்திகதிய 648 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 2 (வீதிக்கான ஒதுக்கிடம்) எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது:- வடக்கிலும் வடகிழக்கிலும் 648 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1, தெற்கில் மஹாமாய மாவத்தை, 648 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 மற்றும் மேற்கிலும் வடமேற்கிலும் சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டங்கள் 3 மற்றும் 6; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 648 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்து தசம் ஏழு ஒன்பது பேர்ச்சுக்களை (ஏ0-ரூ0-பே10.79) கொண்டுள்ளது. கண்டிக் காணிப்பதிவகத்தில் தலைப்பு தொகுதி/பக்கம் A 436/286 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**சமீல அபேசூரிய**
**தலைவர் – அறவீடுகள்**

skillsads



# லா லிகா: பார்சிலோனா அணி சிறப்பான வெற்றி!

லா லிகா கால்பந்து தொடரின் 29ஆவது கட்ட லீக் போட்டியில், பார்சிலோனா அணி சிறப்பான வெற்றியை பதிவுசெய்துள்ளது.

உள்ளூர் நேரப்படி (செவ்வாய்க் கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், பார்சிலோனா அணியும் வல்லாடோலிட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில், பார்சிலோனா அணி 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதில் பார்சிலோனா அணி சார்பில், ஒசுமானே டேம்பளே போட்டியின் 90ஆவது நிமிடத்தில் அணிக்காக வெற்றி கோலை புகுத்தினார். இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா அணி 65 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில், இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது. இதேவேளை தோல்வியை தழுவிய வல்லாடோலிட் அணி, 27 புள்ளிகளுடன் 16ஆவது இடத்தில் உள்ளது.



சுப்பர் லீக் போட்டி இம்மாதம் 19ம் திகதி ஆரம்பம்

# தொடரின் முகாமையாளராக ரஹ்மி நியமனம்

இலங்கை கால்பந்து சம்மேளனம் முதல் முறையாக ஏற்பாடு செய்துள்ள கன்னி தொழில் முறை கால்பந்து தொடரான சுபர் லீக் 2021 தொடர் இம்மாதம் (ஏப்ரல்) 19ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

இலங்கையின் 10 முன்னணி கால்பந்து கழகங்கள் பங்குகொள்ளும் இந்த தொடரின் போட்டிகள் இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. போட்டிகள் அனைத்தும் கொழும்பு சுகததாச அரங்கில் இடம்பெறவுள்ளன.

இம்மாதம் 19ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள தொடரின் முதல் போட்டியில் கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் நியு யங்ஸ் கால்பந்து கழகங்கள் ஆகியவை மோதவுள்ளன. அதே தினம் இரவு 7.30 இற்கு இடம்பெறும் அடுத்த மோதலில் புளு ஸ்டார் விளையாடுக் கழகம், ரெட் ஸ்டார்ஸ் கால்பந்து கழகத்தை எதிர்த்தாடவுள்ளது.

தொடரின் முதல் 3 வாரங்களுக்கான போட்டிகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர், மே மாதம் இரண்டாம் திகதி முதல் ஜுலை மாதம் இரண்டாம் திகதி வரை தேசிய அணியின் பயிற்சிகள் மற்றும் பிபா உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள் என்பவற்றுக்காக சுப்பர் லீக் மோதல்களுக்கு ஒரு இடைவேளை வழங்கப்படும்.


தொழில்முறைக் கால்பந்தை இலங்கையில் ஆரம்பிக்கும் முதல்கட்ட முயற்சியாக இடம்பெறவுள்ள கன்னி சுபர் லீக்கின் பொது முகாமையாளராக



மொஹமட் ரஹ்மி நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ரஹ்மி இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் மனித வளங்கள் மற்றும் AFC கழக உரிமங்களுக்கான முகாமையாளராக தற்போது கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுப்பர் லீக் தொடரைப் பார்வையிடுவதற்கு ரசிகர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமா அல்லது மூடிய அரங்கில் போட்டிகள் இடம்பெறுமா என்பது குறித்து இலங்கை கால்பந்து சம்மேளனம் இன்னும் எந்தவொரு தகவலையும் வெளியிடவில்லை.

சுப்பர் லீக் பிரதான தொடருக்கான முதல் கட்ட தயார்படுத்தலுக்காக அனைத்து அணிகளும் கடந்த இரண்டு மாதங்களாக முன் பருவப் போட்டிகளில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




கட்டழகர் போட்டியில்

# பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு




(வெல்லாவெளி தினகரன் நிருபர்க. விஜயரெத்தினம்)

மட்டக்களப்பு அரசடி எஸ் கே.ஓ விளையாட்டு கழகத்தின் ஆறாவது ஆண்டு விழாவினை முன்னிட்டு கட்டழகர் போட்டியினை ஏற்பாடு செய்து உடல் வலுவூட்டல் பயிற்சியில் ஈடுபடும் வீரர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களுக்கான சான்றிதழ்கள் நாடாளுமன்ற உறுப்பினரும்,மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான சி.சந்திரகாந்தனால் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டினை ஊக்குவிக்கும் முகமாக பல திட்டங்கள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமை(4)மட்டக்களப்பு அரசடி எஸ் கே.ஓ விளையாட்டு கழகத்தின் ஆறாவது ஆண்டு விழாவினை ஒட்டி கட்டழகர் போட்டியினை ஏற்பாடு செய்து உடல் வலிவூட்டல் பயிற்சியில் ஈடுபடும் வீரர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களுக்கான சான்றிதழ்கள் நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான சி.சந்திரகாந்தனால் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு அரசடி எஸ் கே.ஓ விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது.அந்த வகையில் 2015 ஆம் ஆண்டளவில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆதரவுடன் எஸ் கே.ஓ விளையாட்டுக் கழகத்தின் உடல் வலுவூட்டல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனுடைய தொடர்ச்சியாக அங்கு பயிற்சி பெற்ற வீரர்கள் மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் பல சாதனைகளைப் புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.அத்துடன் கடந்த 2015 ஆம் ஆண்டளவில் எஸ் கே.ஓ விளையாட்டுக் கழகத்தின் தலைமை ஆசிரியரும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனும் இணைந்து கராத்தே மாணவர்கள் தேசிய மட்டத்தில் பல சாதனைகளை புரிய வேண்டும் என்பதற்காக விசேட கராத்தே குழாம் ஒன்றினை உருவாக்கி அதற்கு தேவையான பயிற்றுவிப்பாளர்களை வெளிமாவட்டங்களில் இருந்து சொந்த செலவில் கொண்டு வந்து தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டது. அதன் பிற்பாடு பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் சிறைச்சாலை சென்ற பின்னரும் அந்த முயற்சிகள் வீண் போகவில்லை என்பதை பறைசாற்றும் வண்ணமாக 2019 ஆம் ஆண்டு தேசிய மட்ட கராத்தே விளையாட்டுப் போட்டியில் வடகிழக்கில் முதல் தடவையாக தங்கப் பதக்கத்தை மட்/ சிவானந்தா தேசிய பாடசாலையினை சேர்ந்த எஸ். வசந்தன் என்ற மாணவன் பெற்றிருந்தார். அத்துடன் விளையாட்டுத் துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியான கராத்தே போட்டியில் மூன்றாம் இடத்தை செல்வி. அச்சுகா என்ற மாணவியும் பெற்றிருந்தார். இந்த வெற்றியானது வடகிழக்கில் நிகழ்த்தப்பட்ட முதலாவதும் இறுதியுமான சாதனையாக காணப்படுகின்றது.எனவே எதிர்காலத்தில் எமது மாணவர்கள் இன்னும் பல சாதனைகளை மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நிகழ்துவதற்க்கு எம்மால் ஆன முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இளைஞர் கழகங்களுக்கிடையிலான

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் எவர்சைன் அணி சம்பியன்



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் 33ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் (05.04.2021) நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி பீ.எம்.றியாத் தலைமையில் நடைபெற்ற இறுதிப்போட்டிக்கு அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் இளைஞர் கழக அணியும், தைக்காநகர் எவர்சைன் இளைஞர் கழக அணியும் தெரிவு செய்யப்பட்டனர்.

05 ஓவர் மட்டுப்படத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் 20 கழகங்கள் பங்கு கொண்டன.

இறுதிப்போட்டியில் நாணயச் சழற்சியில் வென்ற அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓவர் நிறைவில் 7 விக்கட் இழற்பிக்கு 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எவர்சைன் அணியினர் 4.4 ஓவர் நிறைவில் 06 விக்கட் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கட்களினால் இப்போட்டியில் எவர்சைன் அணியினர் வெற்றி பெற்றனர். இதில் இறுதிவரை துடுப்பெடுத்தாடிய முஹாசீன் 18 ஓட்டங்களைப் பெற்றார்.சம்பியனான எவர்சைன் அணியினர் அம்பாறை மாவட்ட மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதில் பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக்க கலந்து கொண்டு வெற்றி கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

# கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



இளைஞர் யுவதிகளின் மத்தியில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் முகமாக நடளாவிய ரீதியாக அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தில்விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையில், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டலில்,அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கு கடின பந்து கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி முக்கியஸ்தரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபை உறுப்பினர் றிஸ்லி முஸ்தபாவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் (02) வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அதிதிகளாக,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி சிபான் மஹ்ரூப், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் றொனி இப்ராஹீம் மற்றும் அமைச்சரின் கிரிக்கெட் விவகார இணைப்பாளர் ஜெனரல் டனீஸ் டயஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன், இளைஞர் பாரளுமன்ற உறுப்பினர் மற்றும் விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதன் போது கலந்துகொண்டனர்.

# மரதன் ஓட்டத்தில் புதிய உலக சாதனை

கென்யாவின் ருத் செபன்கெடிச் என்ற பெண்மணி, பெண்களுக்கான அரை மரதன் ஓட்டத்தில் புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.

இவர் ஒரு மணி நேரம், நான்கு நிமிடங்கள் மற்றும் இரண்டு வினாடிகளில் (01:04:02) இலக்கை அடைந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு பெப்ரவரியில் எத்தியோப்பியாவின் அபாபெல் யேசானே பதிவுசெய்த ஒரு மணிநேரம் நான்கு நிமிடங்கள் 31 விநாடிகள் (01:04:31) என்ற சாதனை அரை நிமிடங்கள் வித்தியாசத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதே போட்டியில் எத்தியோப்பியாவின் யலெம் ஸெர்ஃப் யேஹுவாலவ் (1:04:40) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதுடன் கென்யாவின் ஹெலன் ஒபிரி (1:04:51) மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அத்துடன், ஒரே அரை மரதன் ஓட்டத்தில் மூன்று பெண்கள் 65 நிமிடங்களுக்குள் ஓடி முடித்துள்ளமையும் சாதனையாகப் பார்க்கப்படுகிறது.





# கிராஞ்சி செந்தாரகை அணி வெற்றி

(யாழ்.விளையாட்டு நிருபர்)

பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்குஇடையிலான எப்ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத்தொடரில் கிராஞ்சி செந்தாரகை அணி வெற்றி பெற்றது.

(27) திகதி சனிக்கிழமை பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவதுஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து செபஸ்தியார்புரம் சென்.செபஸ்ரியன் விளையாட்டுககழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோலினை பதிவு செய்ததினால் ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக பொனல்டி (சமநிலை தவிர்ப்பு) உதைகள் வழங்கப்பட்டது. இதில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக அணி 3:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 7ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.